Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 16 செவ்வாய்க்கிழமை (29.04.2014) பக்கங்கள் 20 ஓசை – 210

# 87 தற்காலிக பணியாளர்களுக்கு மாநகர சபையில் நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் தற்காலிக அடிப்படையில் பணியாற்றி வந்துள்ள 87 பணியாளர்களுக்கு நேற்றைய தினம் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன.


முன்னுரிமை அடிப்படையில் பணியாளர்களது சேவைகளையும் ஏனைய தகைமைகளையும் கருத்தில் கொண்டு இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்ற நியமனங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி குகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிரந்தர நியமனப் பத்திரங்களை அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், மாநகர முதல்வர், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள், ஆணையாளர் ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்டன.

(19) ஆம் பக்கம் பார்க்க...



## மேலதிக அரச அதிபருக்கு திடீர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

திடீர் இடமாற்றத்தை எதிர்த்து யாழ்.மேலதிக அரச அதிபர் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு தனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் மற்றும் வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மோகன சரஸ்வதி ஆகியோருக்கு வடமாகாண சபைக்கு திடீர் இடமாற்றக் கடிதங்கள் நேற்றுக் கிடைத்தன.

இது தொடர்பாகவே இவர்கள் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க...

# இலங்கையில் சாதகமான நிலை தீர்மானம் மூலம் ஏற்படமாட்டாது

## ஜப்பான் தெரிவிப்பு

(டோக்கியோ)

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக் கெதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் இலங்கையில் சாதகமான நிலைமையை ஏற்படுத்த முடியாது என ஜப்பான் தெரிவித்துள்ளதுடன்,

இலங்கையில் நல்லிணக்க முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அதற்கு பூரண ஆதரவளிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஜப்பானிய சிரேஷ்ட வெளிவிவகார துணை அமைச்சர் நொரியோ மிட்சுயாவை, ஜப்பானுக்கான

(19) ஆம் பக்கம் பார்க்க...



## கிளாலி வெடி விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

(சாவகச்சேரி)

கிளாலி கடற்கரை வீதியில் இடம்பெற்ற வெடி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த செபதேயு எட்வேட் தவரத்தினம் (வயது-49) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்து சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக

(19) ஆம் பக்கம் பார்க்க...

## நெடியவன் தலைமறைவு; நோர்வேயில் வலை விரிப்பு

விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டவர் எனக் கூறப்படும் பேரின்பநாயகம் சிவபரனை (நெடியவன்) கைது செய்வதற்கான சிவப்பு அறிவித்தல், சர்வதேச பொலிஸாரினால் வெளியிடப்பட்டதை அடுத்து நோர்வேயில் அவர் தங்கியிருந்ததாகக் கூறப்படும் இடங்களிலிருந்து தலைமறைவாகியுள்ளார் என வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நெடியவனை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கையில் நோர்வே பாதுகாப்பு தரப்பினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் இலங்கை பாதுகாப்பு தரப்பினரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் அச்செய்திகள் குறிப்பிடுகின்றன.

சர்வதேச பொலிஸாரான இன்டர்போலினால் வெளியிடப்

(19) ஆம் பக்கம் பார்க்க...

# தென்னாபிரிக்க அமைதி முயற்சி; ஜனாதிபதி மகிந்தவே காரணம்

## சிறில் ரமபோசா தெரிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமாவைக் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே சமாதானத்துக்காக இலங்கைக்கு உதவ தென்னாபிரிக்கா முன்வந்ததாக இலங்கை விவகாரத்தைக் கையாளும் விசேட பிரதிநிதி சிறில் ரமபோசா தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரத்தைக் கையாளும் பொறுப்பை ஏற்ற பின்னர் அது தொடர்பாக வெளிப்படையாக அவர் செய்தி வெளியிட்டுக் கருத்துக் கூறியமை இதுவே முதல் தடவையாகும்.

புதிய அரச முறைமை ஒன்றைக் கட்டியெழுப்புவதில் தென்னாபிரிக்காவின் மீளெழுச்சி பல நாடுகளை எம் பக்கம் திருப்ப வைத்திருக்கிறது.


ஜனநாயக விழுமியங்களைப் பேணி, மனித உரிமைகளை மதிக்கும் எமது போக்கினால் மேலும் மதிக்கப்படுகின்றோம். அதனால் இலங்கை உட்பட பல நாடுகள் எம்மை மதித்து நோக்கத் தொடங்கியுள்ளன.

கடந்த வருடம் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள்

(19) ஆம் பக்கம் பார்க்க...

# தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்ததை நிறைவேற்றுக

## கன்னி உரையில் தவராசா கோரிக்கை



(கைதடி)

தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்ததை நிறைவேற்ற வேண்டுமென வடமாகாண சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார் வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் சின்னத் துரை தவராசா.

நேற்று இடம்பெற்ற வடமாகாண சபையின் 8ஆவது அமர்வில் தனது கன்னியுரையை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இருக்கின்ற அதிகாரங்களை நாம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். இருக்கின்ற குறைபாடுகள் களையப்பட வேண்டும். இதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

13 ஆம் திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். அவற்றிலுள்ள குறைகள் எல்லாம் களையப்பட வேண்டும். அதை இன்னும் செழுமைப்படுத்த வேண்டும்.

இன்று மாகாண சபை ஆரம்பமாகி எட்டாவது அமர்வு. இந்தக் காலப்பகுதியில் எவ்வளவோ சாதித்திருக்க முடியும். நிதி நியதிச் சட்டம் இன்றும் உருவாகவில்லை. வடமாகாண

(19) ஆம் பக்கம் பார்க்க...

உள்ளே

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வினாத்தாள்

# பஹ்ரெய்னில் ஜனாதிபதி



மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று பஹ்ரெய்ன் சென்றடைந்துள்ளார். இலங்கைக்கும் பஹ்ரெய்னுக்குமிடையிலான இருபக்க நல்லுறவை மேலும் மேம்படுத்தும் நோக்கில் இந்த விஜயம் அமைந்துள்ளது. இதன்போது இரு நாட்டுத் தலைவர்களுக்குமிடையில் இருதரப்பு பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது. பஹ்ரெய்ன் நாட்டின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் இந்த விஜயத்தை மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்நாட்டு மன்னர் ஹமட் பின் இஸ்ஸா அல் கலீபாவுடன் இருபக்கப் பேச்சுவார்த்தை நடாத்துவார்.

அதன் பின்னர் அந்நாட்டுப் பிரதமருடனும் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இவ்விஜயத்தின் போது பொருளாதார. சமூக. கலாசார, வர்த்தகத்

(19) ஆம் பக்கம் பார்க்க...

# பயங்கரவாத தடைச்சட்டத்தை அகற்ற நடவடிக்கைவேண்டும்

## வடக்கு மாகாண சபையில் நேற்று 22 பிரேரணைகள்

(கைதடி)

வடக்கு மாகாண சபையின் எட்டாவது அமர்வு நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமானதைத் தொடர்ந்து 11 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களால் 22 பிரேரணைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.

பட்டப்பின் கல்வித்தகைமை (PGDE) கல்வி முதுமாணி (MED) ஆகிய கற்கைநெறிகளை மீளவும் வவுனியா வளாகத்தில் ஆரம்பித்து வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்கள் கற்க சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜீ.ரி.லிங்க நாதன் கொண்டுவந்த பிரேரணையை அரியரத்தினம் வழிமொழிந்தார்.

நான்கு வருடங்கள் வடமாகாண திணைக்களங்களின் அரச நிறுவனங்களின் கணக்காய்வு கணக்கறிக்கைகள் வெளியிடப்படுவதில்லை. கிளிநொச்சி, முல்லைத்தீவு, கல்வி வலயங்களில் நிதிக்கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டமை சிறப்பானது. இதேபோல் வடமாகாணத்திலுள்ள திணைக்களங்களிலும் சுதந்திரமான கணக்காய்வு மேற்கொள்ளப்படவேண்டும் என ப.அரியரத்தினத்தால் கொண்டு வரப்பட்ட பிரேரணையை சுகிர்தன் வழிமொழிந்தார்.

வடமாகாணத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் தேசியக்கொடி ஏற்றப்படும் போது தமிழ் மொழியிலேயே தேசிய கீதம் இசைக்கப்படவேண்டும் என வடமாகாண சபை அறிவுறுத்தலை வழங்கவேண்டும் எனவும், வடமாகாண கொடி ஏற்றப்படவேண்டும் என வட மாகாண சபை அறிவுறுத்தவேண்டும் எனவும் கோரி அரியரத்தினத்தால் பிரேரணை முன்மொழியப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் சிங்களப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஊர்கள், வீதிகள், பெயர்களும் மாற்றத்திற்கு முன் இருந்த பெயர்களே பயன்படுத்தப்படவேண்டும். இதற்கான ஆவணங்களுக்கமைவாக அவற்றிற்கு உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளவேண்டும் என்ற பிரேரணையை க.சர்வேஸ்வரன் முன்மொழிய அரியரத்தினம் வழிமொழிந்தார்.

வடபகுதி நோக்கி வரும் புகையிரதம் அனைத்தும் மாங்குளம் புகையிரநிலையத்தில் தரித்துச் செல்லவேண்டும். கடுகதி புகையிரதம் இங்கு நிறுத்தப்படாததால் முல்லைத்தீவு மக்கள் குறிப்பாக மல்லாவி போன்ற பிரதேச மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். இதற்கான நடவடிக்கையினை மத்திய போக்குவரத்து அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு கோரும் பிரேரணை மேரி கமலா குணசீலனினால் முன்மொழியப்பட்டு ரவிகரனினால் வழிமொழியப்பட்டது.

கலை கலாசாரத்தை பேணும் வகையில் முல்லைத்தீவில் கலாசார மண்டபம் ஒன்று அமைக்கவேண்டும் என மத்திய கலை கலாசார பண்பாட்டு அமைச்சினைக் கோரும் வகையிலும், மேரிகமலா குணசீலனினால் முன்மொழியப்பட்ட பிரேரணையை சிவமோகன் வழிமொழிந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியவள நிலையமும், கணனி பயிற்சி நிலையமும் அமைக்க மத்திய மாகாண கல்வி அமைச்சைக் கோரும் வகையில் மேரி கமலா குணசீலனினால் இரண்டாவது பிரேரணை கொண்டுவரப்பட்ட அன்ரனி ஜெயநாதனினால் வழிமொழியப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை வாழ் மக்களின் அமைதி வாழ்வைக் கருத்திற்கொண்டு இரத்துச் செய்யும்படி இலங்கை நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களை இச்சபை கோரவேண்டும் என சி.சிவமோகனினால் முன்மொழியப்பட்ட பிரேரணையை திருத்தங்களுடன் ரவிகரன் வழிமொழிந்தார்.

வடக்கிலுள்ள சில பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் சில தென்னிலங்கையில் இருந்த செயற்கை முறையில் உருவாக்கப்பட்ட கள்ளினைக் கொண்டுவந்த விற்பனை செய்கின்றன. இதனால் உள்ளூர் கள்ளினை விற்பனை செய்யமுடியாதுள்ளது. எனவே உள்ளூர் கள்ளின் சந்தைப்படுத்தலை ஊக்குவிக்க வேண்டுமென்ற கூட்டுறவுத் திணைக்களத்தை இச்சபை கோருவதாக அ.பரஞ்சோதியினால் முன்மொழியப்பட்ட பிரேரணையை விந்தன் கனகரத்தினம் வழிமொழிந்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்திற்கு பின்னர் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு UNHCR மூலம் 25 ஆயிரம் ரூபா பிரதேச செயலகங்களினூடாக வழங்கப்பட்டது. இதில் இரண்டாவதாக வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. இதை அனைவருக்கும் பெற்றுக்கொடுக்க மத்திய மீள்குடியேற்ற அமைச்சையும், பொருளாதா அபிவிருத்தி அமைச்சினையும் கோருவதாக ரவிகரனினால் முன்மொழியப்பட்ட பிரேரணை விந்தனால் வழிமொழியப்பட்டது.

முள்ளிவாய்க்கால் மேற்கு மீனவர்கள் பாவித்த இறங்கதுறையை விடுவிக்க வேண்டும்மெனவும், கொக்கிளாய் தமிழ் மீனவர்களுக்கான இறங்குதுறையை விடுவிக்கவேண்டுமெனவும், கொக்கிளாய் தமிழ் மீனவர்களுக்கான இறங்குதுறையை பொருத்தமான இடத்தில் அமைக்கவேண்டும் எனவும், மத்திய கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சைக் கோருவதாக ரவிகரனினால் பிரேரணையை அன்ரனி ஜெயநாதன் வழிமொழிந்தார்.

2013 ஆகஸ்ட் 31 ஆம் திகதி முடிவடைந்த யாழ்.மாநகரசபையின் பதவிக்காலம் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரால் 2014 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை நீடிப்பு வழங்கப்பட்டது. இந்த சட்ட ஏற்பாடுகளின் படி ஒருவருடத்திற்கு மேலாக கால நீடிப்பு வழங்கமுடியாது என்பதால் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கும்படி உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரைக் கோருவதுடன், வடக்கு மாகாண உள்ளூராட்சி மற்றும் அமைச்சரான முதலமைச்சர் இதனை உறுதி செய்யவேண்டுமென இச்சபையை கோருவதாக சி.வி.கே.சிவஞானத்தினால் முன்மொழியப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சிதம்பரபுரம் மற்றும் பூந்தோட்டத்தில் உள்ள நலன்புரி முகாம்களில் வசிக்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 180 குடும்பங்கள் தாம் சிதம்பரபுரத்திலே வசிக்க விரும்புவதால் தாங்கள் குடியிருக்கும் காணிகளை பகிர்நதளித்துத் தருமாறு கேட்கும் கோரிக்கைக்கு அமைவாக அவர்களை குடியேற்றவேண்டுமென கோருவதாக ப.சத்தியலிங்கத்தினால் முன்மொழியப்பட்ட பிரேரணையை லிங்கநாதன் வழிமொழிந்தார்.

பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றை சிறப்புக் கலைமாணிக்கான துறையாக தெரிவு செய்பவர்கள் ஊக்குவிக்கவேண்டும். இத்துறைகளில் புலமை வாய்ந்தவர்களை ஊக்குவிக்க திட்டங்களை உருவாக்கவேண்டும் எனக் கோரும் பிரேரணையை க.சர்வேஸ்வரன் முன்மொழிய அதை சிவயோகன் வழிமொழிந்தார்.

வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் வரலாற்று சின்னங்களையும், இடங்களையும் பாதுகாக்கவும் அபிவிருத்தி செய்யவும் கலாசார பண்பாட்டமைச்சும் சுற்றுலா அமைச்சும் உரிய திட்டங்களை வகுக்க கோருவதாக சர்வேஸ்ரனினால் பிரேரணை முன்மொழியப்பட்டு ரவிகரனினால் வழிமொழியப்பட்டது.

தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதி தேவை. அதை வலியுறுத்தி தீர்மானம் கொண்டுவந்த நாடுகளுக்கு நன்றி தெரிவித்தும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையில் சர்வதேச விசாரணை தீர்மானத்திற்கு ஆதரவு அளித்த நாடுகளுக்கு நன்றி தெரிவித்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் அங்கம் வகிக்கம் நாடுகளுக்கும், ஏனைய உலக நாடுகளுக்கும் இலங்கையில் இடம்பெற்ற மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் சம்பந்தமான சுதந்திர சர்வதேச விசாரணைக்கு ஆதரவு வழங்குமாறு வேண்டுவதுடன்,

இலங்கையின் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வுகளை சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புத் தேவை. எனக்கோருவதுடன், இலங்கை அரசுக்கு தமிழ்த்தரப்புக்கும் இடையில் பேச்சுக்களில் மத்தியஸ்தம் வகிக்க முன்வருமாறு அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம். இந்தியா உள்ளிட்ட ஏனைய சில நாடுகளும் இணைந்த தலைமை நாடுகள் குழுவிற்கு அழைப்பு விடுவதாகவும் கோரும் 5 பிரேரணைகளை சிவாஜிலிங்கம் முன்மொழிய ரவிகரன் வழிமொழிந்தார். (இ)


## சிறுவிளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

**இல.06 கனகசபை லேன்,**
**சிவலிங்கப்புளியடி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 8680,**
**077 592 5088.**

(C/3595)

### காணி, வீடு விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் சகல வசதிகளுடனுள்ள ஒரு வீடும், அதை அடுத்துள்ள இரண்டு சிறு வீடுகளாக்கக்கூடிய கட்டடத் தொகுதியும் விற்பனைக்குண்டு. வாங்குவோரின் வசதிக்கேற்ப சிறு சிறு பகுதிகளாகவும் விற்க முடியும். தொடர்பு : காலை, மாலையில் - க.சீவறட்ணம், சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (ஏகாம்பரம் கடையடி)

(R/347)


## அடுத்த அமர்வு அடுத்த மாத இறுதியில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வு எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் வடக்குமாகாண சபையின் 8 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்று பிற்பகல் 2.45 மணிக்கு சபை ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

அதற்கமைய மே மாதம் 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணி வரை சபையை ஒத்திவைப்பதாக அறிவிக்கப்பட்டது. (இ)

## நினைவழியா நாட்கள் நினைவேந்தர் நிகழ்வு

உன்னதமான ஊடக சுதந்திரத்திற்காக உயிர்கொடுத்த சக ஊடகவியலாளர்களான தர்மரத்தினம் சிவராம் (தராகி) மற்றும் செல்வராசா ரஜிவர்மன் (வர்மன்) ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு யாழ்.ஊடக அமையத்தில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு த.வினொஜித் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கு.செல்வக்குமார் ஆ.சபேஸ்வரன் (விரிவுரையாளர்), இ.தயாபரன் ஆகியோர் நினைவுரை நிகழ்த்தவுள்ளனர்.

## இன்று சாவகச்சேரியில் மூன்றாம் ஆண்டு விழா

(சாவகச்சேரி)

செலான் வங்கியின் சாவகச்சேரி கிளையினரின் 3 ஆம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு கிளை முகாமையாளர் எஸ்.சந்திரகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட விசேட சேமிப்புத் திட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

## வெளிவந்தது 'வலை'யின் இழை 30



(யாழ்ப்பாணம்)

பிரதி மாதம் தோறும் வெளிவரும் சமகால பொது அறிவுத் தொகுப்பான 'வலை' யின் முப்பதாவது இழை வெளிவந்துள்ளது.


இந்த வலையின் பருவ இழையில் இலங்கை சம்பந்தமான விடயங்கள், உலக நாட்டு விடயங்கள் மற்றும் அயல் நாட்டு விடயங்கள் என்பன அடங்கியுள்ளன.

இவ் வலையின் இழையில் வெளிவரும் விடயங்கள் அனைத்தும் சகலவிதமான அரச போட்டிப் பரீட்சார்த்திகளுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் பயன்தரும் விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.

அன்றாடப் பத்திரிகைகளிலும், இணையங்களிலும் வெளிவருகின்ற பொது அறிவு விடயங்களைத் தொகுத்து யாழ்.மாநகர சபையின் பொது நூலகத்தில் நூலகராகப் பணியாற்றும் சி.என்.எச்.சாள்ஸின் முயற்சியின் பயனாக பிரதி மாதம் தோறும் இவ் வலை பொது அறிவுப் பெட்டகம் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வலையின் இழை 25 ரூபா ஆகும். அத்துடன் 250 ரூபா பணத்தினை சந்தாவாகச் செலுத்தி தபாலில் பெற்றுக்கொள்வதற்கான வசதியும் உள்ளதுடன், 0776913337 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிகத் தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

# புத்தாண்டு சேமிப்புத்திட்டத்தில் பொலிகண்டி சமுர்த்தி வங்கி சாதனை



(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டுக்கான புத்தாண்டு சேமிப்பு வாரத்தில் மட்டும் வல்வெட்டித்துறை பொலிகண்டி சமுர்த்தி வங்கி 3 மில்லியன் ரூபாவைச் சேமித்து சாதனை படைத்துள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள சமுர்த்திப் பயனாளிகளால் புத்தாண்டு தினத்தன்று மாத்திரம் 3 மில்லியன் ரூபாவை இச்சமுர்த்தி வங்கியில் வைப்பிலிடப்பட்டதுடன் 11 வருடங்களில் இந்தவருடம் 3 மில்லியன் ரூபா சேமிப்புக் கணக்கை பெற்று இவ் வங்கி சாதனை படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் புத்தாண்டு தினத்தன்று சிறுவர் சேமிப்புக் கணக்கைப் பெற்ற 45 வாடிக்கையாளர்களுக்கு புத்தகப்பைகளும், 50 இற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு குடையும் வழங்கப்பட்டது.

மேலும் குழுக்களாக இணைந்து கொண்ட சமுர்த்தி பயனாளிகளில் 5 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வைப்பிலிட்ட சமுர்த்தி பயனாளிகளில் குலுக்கல் மூலமாக தெரிவு செய்யப்பட்ட 3 அதிஷ்டசாலிகளுக்கு முதல் பரிசாக 2* ஆயிரம் ரூபாவும், 2 ஆம் பரிசாக ஆயிரத்து இருநூற்று 50 ரூபாவும், 3 ஆம் பரிசாக 750 ரூபாவும் அந்தந்த குழுக்களின் வைப்பில் கணக்கிடப்பட்டது.

மேலும் புத்தாண்டு தினத்தன்று சமுர்த்தி கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள் முன்னிலையில் குலுக்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட அதிஷ்டசாலிகளுக்கு பொலிகண்டி சமுர்த்தி வங்கி முகாமையாளர் பரிசில்களை வழங்கிவைத்தார். (116)

# "ஆடும் அருள் ஜோதி" நாட்டிய நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண ஆளுநர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்திற்கருகில் அமைந்துள்ள இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் "ஆடும் அருள்ஜோதி" என்னும் நாட்டிய நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் வட மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பைச் சேர்ந்த தேவராஜன் மோகனப்பிரியனின் நடன நிகழ்வில் விருந்தினர்களாக வட மாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸ், இந்தியத் துணைத் தூதுவர் ஆர்.மகாலிங்கம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் மற்றும் வடமாகாண ஆளுநர் அலுவலக உயர் அதிகாரிகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த தேவராஜன் மோகனப்பிரியனின் நடன நிகழ்வினை சிங்கப்பூர் அப்சராஸ் ஆட்ஸ் நிறுவனமும் அருட்ஸ்ரீ ஆட்ஸ் நிறுவனமும் இணைந்து நடத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.(48)

# மண்டலாபிஷேக பூர்த்தியும் சங்காபிஷேகமும்

(வடமராட்சி)

வடமராட்சி கரவெட்டி உச்சில் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி சொரூப பகவதிமாரியம்மன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்திவிழாவும் சங்காபிஷேகமும் (1008) எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று. மாலை பூந்தண்டிகையில் அம்பாள் வீதி உலாவந்து பக்த அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

இவ் ஆலய புனர்நிர்மான வேலைகள் சுமார் 75 இலட்சம் ரூபா செலவில் நடைபெற்றுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி சிவஸ்ரீ தியாக.சம்பந்தக்குருக்கள் தலைமையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மண்டலா பிஷேகம் நடைபெற்றுவருகின்றது. (01)



நயினா தீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 30 ஆவது வருட நிறைவு விழாவும் திருச்சொரூப பவனியும் ஆலய பங்குத்தந்தை வண.லியேஷா ஆம்ஸ்ட்ராங் தலைமையில் நடைபெற்ற போது (48)

# குதிரைகளில் ஏத்தி விட்டம்; அவை குண்டுச்சட்டிக்குள்ளேயே சுத்திச் சுத்தி வருகினம்...



யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக்குழுக் கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லோணும்.

இந்தக் கூட்டங்கள் ரண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளனவல்லோ.

இணைத்தலைவர்களில் ஒருதர், முன்னாள் நீதியரசர் எண்டதால், முந்தித் தொழில் செய்யேக்க, வழக்குகளை ஒத்திவைத்ததைப்போல, பழக்கதோசத்தில் இந்தக் கூட்டங்களையும் ஒத்திவைக்க யோசிச்சிருக்கிறார் போல.

இந்த ஒத்திவைப்புக்கு முழுச்சம்மதத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் எல்லோ குடுத்திருக்கிறார். வழிக்கு வராத 'குழுமாடுகளை' கொஞ்சம் விட்டுத்தான் பிழக்கோணும் எண்டு நினைச்சுத்தான் அப்பிடி இந்த ஒத்திவைப்புக்கு இசைந்தாரோ! அல்லது, தன்ர இணக்க அரசியல் வழிமுறையின்படி இந்த ஒத்திவைப்புக்கும் இசைந்து குடுத்தாரோ!

ஆனால், **'மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டங்கள்' எண்டால், மக்களுடைய தேவைகளையும் பிரச்சினைகளையும் தீரக்கிறதுக்கான நடவடிக்கைகளைப் பற்றி ஆராயிற - முடிவெடுக்கிற கூட்டங்கள்** எண்டுதான் மக்களாகிய எங்கட நம்பிக்கை.

இதில் எதிரும் புதிருமான அரசியல்வாதிகளோ அபிப்பிராயவாதிகளோ இருக்கலாம். ஆனால், சனங்களின்ர பிரச்சினை எண்டால் அதில ஒன்றாக நிற்கோணும். சனங்களின்ர பிரச்சினையளை வைச்சு, அவர்களின்ரை தேவைகளை வைச்சு அரசியல் பண்ணக்கூடாது. உரிய முழவுகளையும் தீர்மானங்களையும் சம்பந்தப்பட்டவர்கள் எடுத்தே தீரவேணும். இல்லையெண்டால், இதால பாதிக்கப்படுறது மக்களாகிய நாங்களே!

ஆனால், இந்தக் கூட்டங்கள் அப்படி நடக்கேல்லை. இதையும் ஒரு அரசியல் மேடையாகப் பயன்படுத்தும் முயற்சிகளே நடந்திருக்கு. இதை நாங்கள் கண்டிக்க வேணும். ஏற்றுக்கொள்ள முழயாது.

**'செத்த வீட்டிலேயே அரசியல் பண்ணுகிறவை, நம்மட ஆட்கள். இப்பிடியிருக்கேக்க, இப்பிடி ஒரு கூட்டத்தை அரசாங்கச் செலவில நடக்கிறதெண்டால், விடுவாங்களே...!'** எண்டு ஒரு 'அப்புராணிப் பொதுமகன்' மனம் நொந்து, வயிறு நொந்து கேட்கிறார்.

அவர் அனுபவசாலி. உண்மையையும் தன்னுடைய அவதானத்தையும் சரியாகத்தான் சொல்லிறார். ஆனால், அதுக்காக இந்தக் 'கொள்ளைத்தனத்தை' இப்பிழயே நாங்கள் அனுமதிக்கலாமா?

இவை இப்பிழயே அரசியல் நடத்திறதையும் கூட்டங்களை ஒத்திவைக்கிறதையும் நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தமெண்டால். இதுக்குள்ள அதிகாரிகள் **'சுழிச்சு'** விளையாடத் தொடங்கிடுவினம்.

இப்பிழ ரண்டு இணைத்தலைமைகளும் பகைத்தலைமைகளாகவே இருந்தால் அதிகாரிகளின் பாடு வலு கொண்டாட்டந்தான். சனங்களுக்கு எதையாவது செய்ய வேணும் எண்டு விசுவாசத்தோட பாடுபடுற அதிகாரிகளுக்கு இந்த மாதிரி பகையும் போட்டியும் கவலையைக் குடுக்குமே தவிர, மற்றவைக்கு இது நல்ல வாய்ப்பு.

இதைப்போல, அரசாங்கத்துக்கும் இது நல்லதாய்ப்போச்சு. எதிரும்புதிருமான ரண்டு தரப்பை–தமிழர்களையே–மோத விட்டிருக்கு அரசாங்கம். ஆளுக்கு ஆள் விட்டுக்கொடுக்காமல், நீ பெரிசா, நான் பெரிசா எண்டு சனங்களுக்கு முன்னுக்கு நிண்டு மல்லுக்கட்ட....

சும்மா சோக்காத்தானிருக்கப்போகுது... நடக்கப்போற மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டங்கள். இப்பவே அமர்க்களமாக நோட்டீஸ் குடுக்கிறார்கள். அதுதான் முதலமைச்சர் பேசிய பேச்சை அச்சிலுமெல்லே நோட்டீஸாக அழச்சுக்குடுத்தவை.

இப்பிழ நோட்டீஸ் குடுக்கிறத விட்டுப்போட்டு, செத்த சனங்களுக்கு நட்ட ஈடோ, நிவாரணமோ, மெய்யான அனுதாபமோ குடுத்தாலே பெரிய புண்ணியம். இன்னும் இந்த கணவனை இழந்த இளம் பெண்கள் எல்லா ஊரிலயும் வாழ வழியில்லாமற் கிடக்குதுகள். அதுகளுக்கு ஏதாவது உதவிகள் கிடைக்க ஏற்பாட்டைச் செய்யலாம்.

வன்னிப்பக்கத்துப் பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகளுக்கெல்லாம் வாத்திமாரும் டாக்குத்தர்மாரும் தேவை எண்டு அந்தச் சனங்கள் கேட்டுக்கொண்டு நிற்குதுகள். அதுகளுக்கு ஏதாவது வழியில உதவலாம்.

இப்பிழ ஆயிரம் அவசரப் பிரச்சினைகள் இருக்கு. இதுகளைப்பற்றித்தான் முதல்ல கதைக்கோணும். அதை விட்டுப்போட்டு, ஆளாளுக்கு எதையெதையொ கதைச்சுக் கொண்டிருந்தால்...

ஒரு நாள் முழுக்க நடத்திறதாக ஏகப்பட்ட தடல் புடல் ஏற்பாடுகளோட தொடங்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டங்கள் சத்தம் சலாரில்லாமல் அடங்கிப் படுத்திட்டுது எண்டால், இதின்ரை அர்த்தம் என்ன?

இனப்பிரச்சினைத்தீர்வு ஒத்திவைப்பு.. அரசியல் அதிகாரப்பகிர்வு ஒத்திவைப்பு.. ஜனாதிபதி விசாரணைக்கமிசன் ஒத்திவைப்பு.. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஒத்திவைப்பு..... இப்பிழயே இந்த **'ஒத்திவைப்பு நோய்'** இப்ப மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்திற்கும் பரவீட்டுதோ!

சிங்களவர்களிட்ட இருந்து அதிகாரத்தைப் பகிருறதுக்கு முதல்ல எங்களுக்க அதிகாரப்பகிர்வைச் செய்து பழகோணும். சிங்களவர்களோட இருந்து கதைக்கிறதுக்கு முதல்ல... தமிழர்களோட கதைச்சுப்பறைஞ்சு பழகோணும்.

இதுக்கெல்லாம் மனசைத்திறக்க வேணும். அப்பிழ மனசைத் திறந்தால்தான் கன காரியங்களைப் பார்க்கலாம்.

ஆனால், இவங்கள் மனசைத்திறந்தால், நாங்கள் இருக்கேலாது எண்டதும் உண்மை. அந்தளவுக்கு அது இருண்டு, பாழடைஞ்சு போயிருக்கு.. எங்கட விதி... நாங்கள் இந்த மாதிரி ஆட்களைத்தான் எப்பவும் குதிரையில ஏத்திறம்...

நாங்கள் ஏத்தி விட்ட குதிரையை வைச்சே எங்களுக்குக் குதிரை விடுறாங்கள்...

பணம் வரும்போது இரண்டு கால்களுடன் வரும்.
போகும்போது பல கால்களுடன் போகும். - பொன்மொழி.

தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தெரிவுக் குழுவுக்குப் போங்கள்!

நம் நாட்டுத் தலைவர்களிடம் இருக்கும் மிகத் தாராளமான ஜனநாயகப் பண்பு என்பது எவரையும் வியப்பிலாழ்த்தக் கூடியது. ஒரு கட்சியின் கருத்துக்கு எதிரான கருத்தை இன்னொரு கட்சி பேசமுடியும் என்பது மட்டுமல்ல, ஒரே கொள்கையைக் கொண்டிருக்கும் கட்சிக்குள்ளேயே ஒருவருக்கொருவர் முற்றிலும் எதிரான கருத்துக்களைப் பேசிக் கொண்டிருக்க முடியும் என்பது வியப்புத்தானே?

அரசாங்கக் கட்சியையே எடுத்துக் கொள்ளுங்கள். அமைச்சர் டியூ குணசேகர கருத்தும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கருத்தும் ஒன்றா என்ன? அதுபோல் ராஜித சேனாரத்ன கொள்கையும் விமல் வீரவன்ச கொள்கையும் ஒன்றா என்ன?

ஒன்றுக்கொன்று முற்றிலும் எதிரான கொள்கையைக் கொண்டவர்களும் ஒரே கட்சிக்குள் இருக்க முடியும் என்ற அந்த முன்னுதாரணத்தையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பின்பற்றுகிறது. சிறிதரன் எம்பி சொல்வதும் சுமந்திரன் எம்.பி. சொல்வதும் ஒன்றா? அல்லது சுமந்திரன் எம்பி நினைப்பதும் அனந்தி சசிதரன் நினைப்பதும் ஒன்றா? அல்லது மாவைக்கும் சுரேசுக்கும்தான் ஏதாவது ஒன்றுபட்ட கருத்து உண்டா?

இருதரப்பிலும் இவ்வாறு தாராள ஜனநாயகம் கொடிகட்டிப் பறப்பதால்தான், அங்கே ஐ.ம.சு.மு.வும் இங்கே த.தே.கூ.வும் பதவிகளைப் பிடித்துக் கொள்கிறார்கள். ஆனால், நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இவ்வாறு எதிரெதிர்க் கருத்துக் கொண்டவர்களைச் சேர்த்துக் கூட்டு அமைத்துக்கொண்டு, தேர்தலுக்குத் தேர்தல் பதவிகளைப் பிடிக்க முடிகிறதே தவிர, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஒத்த கருத்தை இந்தக் கட்சிகள் தமக்குள்ளேயே கொண்டுவர முடியவில்லை.

ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களே ஆளுக்கொரு கருத்தை வெளிப்படையாகப் பேசிவருவதைக் காண்முடிகிறது. நீ சுயாட்சி என்றால் நான் தனிநாடு; நீ பதின்மூன்று பிளஸ் என்றால் நான் தன்னாட்சித் தனியலகு; நீ இந்திய மொடல் என்றால் நான் ஜேர்மனி மொடல் என்று சும்மா எதையெதையோ ஆளுக்காள் சொல்லிக் கொண்டிருப்பதாகத்தானே காலம் போகிறது!

இவர்கள் எந்தக் காலத்திலாவது ஒன்றுபட்டு ஒரே குரலில் "இதுதான் எங்கள் கட்சியின் தீர்வு வரைபு" என்று ஒன்றை முன்வைக்க முடியுமா? ஒத்தபடி ஒரு தீர்வைச் சொல்ல முடியவில்லை என்பதால்தான் "அரசாங்கம் தீர்வை வைக்கட்டும் பாப்பம்" என்று ஏதோ அவர்களுக்குத்தான் வலி என்பதுபோல சளாப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனபடியால்தான் எல்லோரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குப் போங்கள் என்று நாம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

அப்படி ஒரு இடத்தில்தான் இவர்கள் தீர்வைப் பற்றியே பேச ஆரம்பிப்பார்கள். யதார்த்தச் சிக்கல்களைப் புரிந்து கொள்ளத் தொடங்குவார்கள். நமக்குள்ளேயே நாம் தீர்வு பற்றிய ஓர் இணக்கத்திற்கு வந்தாக வேண்டும் என்பதை உணருவார்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கட்சிக்கும் தம்மளவிலான தர்க்கங்களும் நியாயங்களும் இருக்கவே செய்யும். ஏதோ ஒரு இடத்தில் கூடிப் பேசி சமரசம் காண்பதன் மூலமாகத்தான் ஒரு பொதுநியாயத்தை வந்தடைய முடியும். குறைந்தபட்சம் பொதுநியாயத்தை அடைவதற்கு என்ன தடையாக இருக்கிறது என்றாவது அறிய முடியும்.

- ஆசிரியா

# அமுலில் உள்ள அரசியலமைப்பை அனைவருமே எதிர்க்கின்றனர்

### என்கிறார் மாதுளுவாவே சோபித தேரர்

நாட்டில் அமுலில் இருக்கும் அரசியலமைப்பை அனைவரும் எதிர்க்கின்றனர் என மாதுளுவாவே சோபித தேரர் கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து நாடாளுமன்றத்திற்கு அதிகாரத்தை வழங்கும் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவது பொது வேட்பாளரின் பொறுப்பு ஆகும். அரசாங்கத்தை கவிழ்க்கும் எண்ணம் எதுவும் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலில் வெற்றி பெறும் பொது வேட்பாளர் ஆறு மாதங்களே ஜனாதிபதி" பதவியில் இருப்பார். ஆறு மாதங்களுக்குள் நாடாளுமன்றத்திற்கு அதிகாரங்களை வழங்கி விட்டு பதவியில் இருந்து விலக வேண்டும்.

நாட்டில் அமுலில் இருக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தை, அதனை ஏற்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சி, மாநாயக்க தேரர்கள், அரசியல் கட்சி கள், சிவில் அமைப்புகள், இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மட்டுமல்லாது முழுநாட்டு மக்களும் எதிர்க்கின்றனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் இருந்து கதிர்காமத்திற்கு பாத யாத்திரை சென்றார்.

அத்துடன் மகிந்த சிந்தனையிலும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரங்களை வழங்குவதாக உறுதியளித்துள்ளார். எவ்வாறாயினும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யாரை பொது வேட்பாளராக நிறுத்துவது என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை. பொது வேட்பாளர் தொடர்பாக பேசுவதற்கு இன்னும் காலம் இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மதங்களுக்கு முரணாக அரசாங்கம் செயற்படாது

### பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் தகவல்

நாட்டில் உள்ள மதங்களுக்கு முரணான ஒன்றை அரசாங்கம் எப்போதும் செய்யாது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த தர்மத்தில் செய்யக் கூடாது என்று கூறியுள்ளதை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செய்யாது.

பௌத்த தர்மத்திற்கோ, ஏனைய மதங்களுக்கோ முரணான ஒன்றை அரசாங்கம் எப்போதும் செய்யாது. அப்படியான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளாது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் வரை அப்படியான எந்த நடவடிக்கைக்கும் இடமளிக்க மாட்டார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொதுபலசேனா அமைப்பினர் மதுஅருந்தும் காணொளி உண்டு

### கூறுகிறது ஜாதிகபலசேனா

பொதுபலசேனா அமைப்பினர் மது அருந்தும், நடனமாடும் காணொளி ஒன்று தன்னிடம் இருப்பதாக ஜாதிகபலசேனா அமைப்பின் செயலாளர வட்டரெக்க விஜித தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனா மற்றும் விஜித தேரர் ஆகிய இருதரப்பு தொடர்பான செய்திகள் நாட்டில் ஊடகங்களில் பரபரப்பாக வெளியாகி வருகின்றன.

பொ[illegible]லசேனா அமைப்பு பயங்[illegible] அ[illegible]ப்பு எனவும் இனங்[illegible] இ[illegible]பில் நல்லிணக்கத்[illegible]யும் [illegible] ஐக்கியத்தை ஏற்படுத்[illegible] நடவடிக்கையில் ஈடுபட்டு[illegible] தன்னை அந்த அமைப்பு கொலை செய்ய முயற்சித்து வருவதாகவும் விஜித தேரர் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்த நிலையில், ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிட்ட விஜித தேரர் மேலும் தெரிவிக்கையில்,

என்னைக் கொலை செய்ய முயற்சித்து வருவதால், நான் இப்போது ஒரு இடத்தில் தங்குவதில்லை. மாறி மாறி இருந்து வருகிறேன்.

மகியங்கனையில் அண்மையில் என்னை கொல்ல முயற்சித்தனர். பொலிஸார் என்னைக் காப்பாற்றினர்.

பொதுபலசேனா சம்பந்தப்பட்ட காணொளி ஒன்று என்னிடம் உள்ளது. வில்பத்து வனத்தில் அவர்கள் மேறகொண்ட நடவடிக்கைகள அதில் பதிவ்ாகியுள்ளன.

என்னை துண்டு துண்டாக வெட்டி ஆற்றில் வீசினாலும் அதனை பகிரங்கமாக வெளியிட மாட்டேன்.

அத்துடன் இந்தக் காணொளியை நான் அரசாங்கத்திடமோ, பொலிஸாரிடமோ கையளிக்கப் போவதில்லை.

பொதுபலசேனா அமைப்பினர் வாகனத்தில் அமர்ந்து மது அருந்துவது, கிரிக்கெட் விளையாடுவது, நடனமாடுவது போன்ற காட்சிகள் அந்தக் காணொளியில் உள்ளன.

பொதுபல சேனா அமைப்பை போல் நாங்கள் மத விரோத, இனவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை எனவும் விஜிததேரர் குறிப்பிட்டுள்ளார்.

# செருப்புமாலை அணிவித்த ஆசிரியர் இடமாற்றம்

### ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பம்

(சேருநுவர)

சப்பாத்து வாங்க வசதியின்றி செருப்பை அணிந்து பாடசாலைக்குச் சென்ற மாணவியொருவரை தண்டிப்பதாகக் கூறி, செருப்பை மாலையாக்கி அம்மாணவிக்கு அணிவித்த ஆசிரியையை வேறொரு பாடசாலைக்கு இடமாற்றியதுடன் அவர் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.ஏ.ஏ.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

மேலதிக கல்விப் பணிப்பாளர் டக்ளஸ் ரணசிங்க தலைமையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


குறித்த ஆசிரியை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கும்படி கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவினால் சேருநுவர மாகாண கல்விப் பணிப்பாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ள நிலையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டு விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தந்தையை இழந்த நிலையில் தாயுடன் வாழ்ந்து வந்துள்ள மேற்படி மாணவி, தன்னிடம் சப்பாத்து இல்லாத காரணத்தால் கடந்த வெள்ளிக்கிழமை செருப்பு அணிந்து பாடசாலைக்குச் சென்றுள்ளார்.

மேற்படி மாணவி செருப்பு அணிந்து வந்துள்ளதை அவதானித்துள்ள குறித்த பாடசாலையின் ஒழுக்க நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியை, அம்மாணவியைத் தண்டிக்கும் முகமாக செருப்பை மாலையாக்கி அம்மாணவியின் கழுத்தில் அணிவித்துள்ளார்.

இது தொடர்பில் தகவல் அறிந்த சேருநுவர பொலிஸார், அப்பாடசாலைக்குச் சென்று அதிபரிடம் விசாரித்துள்ளனர். பாடசாலையின் ஒழுக்க நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஆசிரியையே இவ்வாறு செய்துள்ளார் என அதிபர் கூறியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸ் பொறுப்பதிகாரியின் சொந்தச் செலவில் அம்மாணவிக்கு புதிய சப்பாத்து வாங்கிக்கொடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மாணவியின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு இப்பிரச்சினையை பெரிதுபடுத்த விரும்பவில்லை என பாதிக்கப்பட்ட மாணவியின் தாயார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




**இந்தியா, சர்வதேசங்கள் என பயணங்கள் புரியும் தமிழ்த் தேசியக்காரர்கள், அதேயளவு அக்கறையை இலங்கைக்குள் ஏன் காட்டவில்லை? உள்ளூரில் உழாத மாடு வெளியூரில் மட்டும் உழுது விடுமா என்று தமிழில் ஒரு பழம்பெரும் கேள்வியுண்டு. இலங்கைக்கு உள்ளேயே இருக்கிற சிங்கள அரசியற் தலைவர்கள், சிங்களப் பேராசிரியர்கள், சிங்கள வக்கீல்கள், சிங்கள எழுத்தாளர்கள், சிங்களக் கலைஞர்கள், சிங்கள சமூக நிறுவனங்கள், சிங்கள மதத் தலைவர்கள் போன்றவர்களின் மத்தியில் ஆதரவு தேட வேண்டும் – அவர்களின் அனுதாபத்தைத் திரட்ட வேண்டும் என்ற அக்கறையும் உண்மையான தொடர்ச்சியான ஈடுபாடும் ஏன் தமிழ்த் தேசியக்காரர்களிடம் இல்லை?**

# இலங்கையின் மாகாணசபைகளை ஆற்றலுள்ளவைகளாக ஆக்குவதை நோக்கி முயற்சிக்க ஏதாவது வழியுண்டா!

**அ. வரதராஜப்பெருமாள் கட்டுரையிலிருந்து**

**13ஆவது** திருத்த அரசியல் யாப்பு சட்டம் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை, அதை அரசாங்கம் முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என தமிழர்களில் பல தலைவர்கள் அவ்வப்போது அறிக்கை விடுகிறார்கள், இந்தியா, அமெரிக்கா என உலகின் சக்திமிக்க நாடுகளும் அவ்வாறே கோருகின்றன. ஜெனிவாவின் தீர்மானங்களும் அதையே மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளன. அவ்வாறு சொல்லுகின்ற நபர்களும் நாடுகளும் தாங்கள் எழுப்பும் அந்தக் கோரிக்கைக்கான முழுமையான அர்த்தம் என்ன என்று புரிந்துதான் குரல் கொடுக்கிறார்கள் என்று சொன்னால் அதனை நான் நம்பத் தயாராக இல்லை. ஏன் என்று கேட்காதீர்கள் அது நீண்ட பதிலைக் கொண்டது.

மாகாண சபைகள் முறையாகச் செயற்படவில்லை, அரசாங்கம் அவற்றை முழுமையாகவும் முறையாகவும் செயற்பட வைக்கவில்லை - செயற்பட விடவில்லை என்ற குரல்கள் சிங்கள மக்கள் மத்தியிருந்தும் - தென்னிலங்கையிலுள்ள இடதுசாரிக்கட்சிகள் அனைத்தும், ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களிற் பலர், அனைத்து மாகாண சபைகளிலும் எதிர்க் கட்சி வரிசையில் இருக்கும் உறுப்பினர்களிற் பெரும்பாலானவர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் பலர், பெரும்பாலான சமூக நிறுவனங்கள் என பெருந்தொகையானோர் - அவ்வப்போது குரலெழுப்புவதையும் நாம் அறிவோம். அந்தக் குரல்கள் புலிகளின் அழிவுக்குப் பின்னர் அரசாங்கத்தை நோக்கி இன்னமும் ஏன் காலதாமதம் என்ற கேள்வியையும் சேர்த்தே ஒலிக்கின்றன.

எனது கேள்வி என்ன வென்றால்:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காரர்களிடம் தான் தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளுக்கான - அரசியல், பாதுகாப்பு மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காணவும் அவற்றைச் சாதிக்கவும் வேண்டிய ஆணையை ஜனநாயகபூர்வமாக வழங்கியிருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காரர்களும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றி தங்களோடு அரசாங்கம் பேச வேண்டும் என்று மட்டுமல்லாது தங்களோடு மட்டும் தான் பேச வேண்டும் என்கின்றனர். தங்களது ஒப்புதலோடு மட்டும்தான் - ஒத்துழைப்போடுதான் எதையும் அரசாங்கம் செய்ய வேண்டும் என ஏகபிரதிநிதித்துவ உரிமையும் கோருகிறார்கள். மறுபக்கம் அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காரர்களோடுதான் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றி பேசுவதற்குத் தயாராவதில் பிடிவாதமாக இருக்கின்றது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காரர்களோ தம்மோடு தமது நிபந்தனைகளுக்கு அமைய அரசாங்கம் பேச வரவில்லை - தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இணங்கி வரவில்லை என்று கூறுவதிலேயே தமது அரசியலைக் கொண்டு செலுத்துகிறார்கள். அவ்வாறு கூறிக் கொண்டு டெல்லிக்காரர்களிடம் தங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடித்தரும்படி தைப்பூசத்துக்கு ஒரு தடவையும் ஆடி அமைவாசைக்கு இன்னொரு தடவையும் என கோரிக்கை விடுக்கிறார்கள்.

இலங்கையின் வட,கிழக்குக்கும் யாழ்ப்பாணத்துக்கும் வித்தியாசம் தெரியாதவர்களே டெல்லி நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பாலானவர்கள். இந்திய அரசியலில் உள்ள பெரும்பான்மையானவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காரர்களின் அரசியற் பாஷை புரியவும் மாட்டாது.

இங்கே முன்னாள் இராணுவ அதிகாரி ஆளுநராக இருக்கிறார் என்று சொன்னால் அது அவர்களுக்கு ஓர் அரசியற் தவறாகத் தெரியாது ஏனென்றால் இந்தியாவிலும் அரைவாசிக்கு மேற்பட்ட ஆளுநர்கள் முன்னாள் இராணுவ அல்லது பொலிஸ் அதிகாரிகள்தானே என அவர்கள் சொல்லுவார்கள்.

அவர்களிடம் இங்கே தமிழர்களின் பிரதேசங்களில் பெரிய பெரிய இராணுவ முகாம்களை அரசாங்கம் கட்டுகிறது, அதற்காக தமிழர்களின் காணிகளை எடுக்கிறார்கள் என்று கூறினால், அதில் என்ன தவறு என்றே கேட்பார்கள் ஏனெனில் இந்தியாவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் எல்லா மாகாணங்களிலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் நிலத்தை உள்ளடக்கிய இராணுவ நகரங்கள் (கன்ரோன்மென்ற்கள்) உள்ளன. சென்னையில் தமிழ்நாடு சட்டசபை வளாகம் அமைந்துள்ள சென்ஜோர்ஜ் கோட்டையில் முக்கால்வாசியும் கிண்டி மற்றும் மீனம்பாக்கத்தில் அரைவாசியும் இராணுவத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதே.

இலங்கையின் வடக்கு,கிழக்கில் சிங்களவர்களை அரசாங்கம் குடியேற்றப்பார்க்கிறது என்றால் அவர்கள் சென்னையில் வசிப்பவர்களில் ஐம்பது சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் தமிழர்களே அல்ல என்பார்கள்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளில் உள்ள நியாயங்களை இங்கு நான் கேள்விக்கு உள்ளாக்கவில்லை. அந்தப் பிரச்சினைகளை தமிழ்த் தேசியத் தலைவர்கள் எவ்வாறு இந்திய மக்கள் மத்தியிலும் சர்வதேச சமூகங்கள் மத்தியிலும் முன்வைக்கின்றார்கள் என்பதே இங்கு கேள்விக்குரியதாகும்.

பிரச்சினைகளில் நுட்பமான வேறுபாடுகளை மற்றைய நாட்டவர்கள் யாராயிருந்தாலும் அவர்களது காலத்தையும் நேரத்தையும் செலவழித்து மூளையைக் கசக்கி பிழிந்து புரிந்து கொள்ளப் போவதில்லை. இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். சிறையில் அடைக்கப்படுகிறார்கள், அடித்து விரட்டப்படுகிறார்கள் என்றால் அதனையே இலகுவாகப் புரிந்து கொள்வார்கள் - அக்கறை காட்டுவார்கள்.

கடந்த மூன்று வருடங்களாக ஐரோப்பா, அமெரிக்கா என்று கூட்டம் கூட்டமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காரர்கள் அடிக்கடி போய் வருகிறார்கள். தங்களை அமெரிக்க அரசாங்கம் அழைத்திருக்கிறது, இங்கிலாந்துப் பாராளுமன்றம் கூப்பிட்டிருக்கின்றது, ஐரோப்பிய பாராளுமன்றத்தில் உரையாற்றக் கேட்கிறார்கள் என்று சென்று வருகிறார்கள் அந்த நாடுகளின் அதிகாரிகளையும் சந்தித்து வருகிறார்கள். ஆனால் அந்த நாடுகளின் அரசியற் தலைவர்கள் - அதிகாரிகளிற் பெரும்பான்மையோர் கொழும்புக்கும் இலங்கைக்கும் இடையேயுள்ள வேறுபாடு தெரியாத வெள்ளைக்காரர்களே என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டுக்கு வந்த இங்கிலாந்து பிரதமர் கமறூன் வந்த இடத்தில் உதயன் பத்திரிகை காரியாலயத்தையும் யாழ்ப்பாணத்திலுள்ள அகதி முகாமொன்றையும் பார்க்க வந்ததால் இலங்கையின் இனப்பிரச்சினைக்களுக்குத் தீர்வு காண - தமிழர்களை இனிக் காப்பாற்ற கடவுளையே நிலத்துக்குக் கூட்டி வந்துவிட்டதுபோல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கின்றனர்.

ஐயன்னாநாவன்னாவின் (ஐ.நா-வின்) மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையில் காரியாலயம் அமைத்து இங்கு நடந்து முடிந்த மற்றும் நடந்து கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்களை அவதானித்து தகவல்கள் திரட்டி சமர்ப்பிக்க வேண்டும் என ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் - இலங்கைத் தமிழர்களுக்கு இனியொரு குறையும் இருக்காது, எந்தப் பிரச்சினையும் இனி ஏற்பட முடியாத ஒரு நிலையைத் தாங்கள் ஏற்படுத்திவிட்டது போன்ற தொரு இறுமாப்பு நம்பிக்கையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்காரர்கள் தமிழர்களுக்கு வழங்கப் பார்க்கிறார்கள்.

தாங்கள் சொல்லித்தான் - தங்களைக் கேட்டுத் தான் அமெரிக்கா அந்தத் தீர்மானத்தை ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டுக்குக் கொண்டு வந்தது போலவும், அதனை தாங்கள் சுவிற்சர்லாந்துக்குப் படையெடுத்துச் சென்று வலியுறுத்தியபடியாற்தான் நாடுகள் அதனை அங்கீகரித்தன என்பது போலவும் ஒரு வரலாற்றுச் சாதனை அறிக்கைகளை த.தே.கூக்காரர்கள் அடிக்கடி விடுக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியாவிடம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கோரக் கூடாது என்றோ அல்லது சர்வதேச சமூகங்களின் கவனத்திற்கும் அக்கறைக்கும் இந்த விடயங்களை முன் கொண்டு செல்லக்கூடாது என்றோ நான் இங்கு கூறவில்லை.

ஆனால், இங்கு எனது பிரதானமான அரசியற் கேள்வி என்னவென்றால், இந்தியா, சர்வதேசங்கள் என பயணங்கள் புரியும் தமிழ்த் தேசியக்காரர்கள், அதேயளவு அக்கறையை இலங்கைக்குள் ஏன் காட்டவில்லை என்பதுதான். உள்ளூரில் உழாத மாடு வெளியூரில் மட்டும் உழுது விடுமா என்று தமிழில் ஒரு பழம்பெரும் கேள்வியுண்டு. இலங்கைக்கு உள்ளேயே இருக்கிற சிங்கள அரசியற் தலைவர்கள், சிங்களப் பேராசிரியர்கள், சிங்கள வக்கீல்கள், சிங்கள எழுத்தாளர்கள், சிங்களக் கலைஞர்கள், சிங்கள சமூக நிறுவனங்கள், சிங்கள மதத் தலைவர்கள் போன்றவர்களின் மத்தியில் ஆதரவு தேட வேண்டும் - அவர்களின் அனுதாபத்தைத் திரட்ட வேண்டும் என்ற அக்கறையும் உண்மையான தொடர்ச்சியான ஈடுபாடும் ஏன் தமிழ்த் தேசியக்காரர்களிடம் இல்லை?

தமிழர்களின் உண்மையான நிலைமையையும் தமிழர்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயங்களையும், அவை இலங்கையில் வாழும் தமிழர்கள் கௌரவமாகவும், பாதுகாப்போடும், சமநீதியோடும் வாழுவதற்கே தவிர இலங்கையைப் பிரிப்பதற்கோ அல்லது சிங்களவர்களின் வாழ்வாதாரத்தை எந்தவகையில் அச்சுறுத்துபவை அல்ல என்ற அபிப்பிராயத்தை சிங்கள மக்களிற் பெரும்பான்மையினருக்குத் தெரிய வைக்கும் - புரிய வைக்கும் விதமாக பிரசாரங்களை முன்னெடுக்கும் உழைப்புகளில் ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் ஈடுபாடு காட்டுவதில்லை. இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்ரேலியா எனத் திரியும் இவர்கள் அதே அளவு அக்கறைகளையும் ஈடுபாட்டையும் இலங்கையில் வாழும் மக்கள், அரசியற் சக்திகள் மத்தியில் ஏன் காட்டவில்லை?

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, புலிகளை அடியோடு அழித்து முடிப்பதற்குத் தலைமை தாங்கிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஜனாதிபதியாக்க முயற்சித்தது, யாழ்ப்பாணத்தில் ஒரு தடவை ரணில் விக்கிரமசிங்காவுடன் கொடி பிடித்து படமெடுத்தது மேலும் யாழ்ப்பாணத்துக்கு அவ்வப்போது அவர்களாக வரும் சிங்களத் தலைவர்களிற் சிலரோடு சில மணி நேரம் கூடிப்பேசியது என்பதற்கு அப்பால் ஏன் பரந்துபட்ட அளவில் சிங்கள மக்களுக்கும் தமிழர்களின் நியாயமான செய்திகள் சென்றடைவதற்குத் தேவையான வேலைகள் எதனையும் இந்தத் தமிழ்த் தேசியக் காரர்கள் செய்வதில்லை - சிங்கள முற்போக்கு மற்றும் ஜனநாயக சக்திகள் மற்றும் கட்சிகளின் தலைவர்களோடு சேர்ந்து நாட்டின் பொதுப் பிரச்சினைகளிலும் தாங்கள் அக்கறையான ஈடுபாடு காட்டி, சிங்களத் தலைவர்களை - அறிவுஜீவிகளை தமிழர்களின் பிரச்சினைகளில் காத்திரமான ஈடுபாடு காட்டச் செய்யும் வேலைத்திட்டங்களை ஏன் இந்த தமிழ்த் தேசியக்காரர்கள் உண்மையான அக்றையோடு, ஒரு பெரிய அளவில் திட்டமிட்டவகையாக, தொடர்ந்த நடவடிக்கைகளாக மேற்கொள்வதில்லை?.

இவை அவசியமற்றவையா? தமிழ் மக்களுக்குப் பயன் தரமாட்டாதவையா? அல்லது

தமிழ்த் தேசியக்காரர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் பயனற்றது - பணம் தராது - அவர்களது அரசியலுக்கு அவசியமற்றது - வெளிநாட்டுப் புலிகளின் கோபத்துக்கு உள்ளாக நேரிடும் என்பவையாலா?

**இந்திய அரசியலில் உள்ள பெரும்பான்மையானவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காரர்களின் அரசியற் பாஷை புரியவும் மாட்டாது. இங்கே முன்னாள் இராணுவ அதிகாரி ஆளுநராக இருக்கிறார் என்று சொன்னால் அது அவர்களுக்கு ஓர் அரசியற் தவறாகத் தெரியாது ஏனென்றால் இந்தியாவிலும் அரைவாசிக்கு மேற்பட்ட ஆளுநர்கள் முன்னாள் இராணுவ அல்லது பொலிஸ் அதிகாரிகள்தானே என அவர்கள் சொல்லுவார்கள். அவர்களிடம் இங்கே தமிழர்களின் பிரதேசங்களில் பெரிய பெரிய இராணுவ முகாம்களை அரசாங்கம் கட்டுகிறது, அதற்காக தமிழர்களின் காணிகளை எடுக்கிறார்கள் என்று கூறினால், அதில் என்ன தவறு என்றே கேட்பார்கள் ஏனெனில் இந்தியாவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் எல்லா மாகாணங்களிலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் நிலத்தை உள்ளடக்கிய இராணுவ நகரங்கள் (கன்ரோன்மென்ற்கள்) உள்ளன.**

# பலம் பொருந்திய ஜனநாயக நாடாக இலங்கையை மாற்றவேண்டும்

## ஜனாதிபதி உறுதி



பலம்பொருந்திய நாடாக இலங்கையை மாற்றவேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கெப்பிட்டல் மகாராஜா நிறுவனத்தின் ஆண்டுக்கான நிறைவேற்று உத்தியோகத்தரை தெரிவு செய்யும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஊடகங்கள் தேசிய அபிவிருத்திப் பணிகளிலும் முக்கிய பங்களிப்பை வழங்க முடியும். மக்களுக்கு நன்மை அளிப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டு வரும் விஞ்ஞான, கல்வி, கலாசார முன்னெடுப்புக்கள் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

இலங்கையின் வரலாற்றில் முக்கிய காலகட்டத்தில் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வென்றெடுத்த சமாதானத்தை மேலும் வலுப்படுத்தும் பணியில் இன்று நாம் ஈடுபட்டு வருகிறோம். புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கப்பாட்டின் மூலம் சமாதானத்தை வலுப்படுத்துவதற்கு நாம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். உள்ளூரிலும், வெளிநாட்டிலும் நல்லிணக்கப்பாட்டுக்கு எதிராக செயற்படும் சக்திகளை நிராகரிப்பது அவசியம். நாட்டில் தொடர்ந்தும் அமைதியின்மை நிலவினால் அது தேசிய அபிவிருத்திக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இன்றைய சமாதானத்தின் மூலம் தோன்றியிருக்கும் புதிய யுகத்தில் தனியார் முதலீட்டு முயற்சிகளும் வர்த்தக சமூகமும் நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு உறுதுணை புரியவிருக்கும் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்கு பல்வேறு முட்டுக்கட்டைகள் தோனறியுள்ளன. நாம் அடுத்த ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில் நாட்டை எவ்விதம் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதை பார்க்க வேண்டும். 2050ஆம் ஆண்டில் இலங்கையை பலம்பொருந்திய ஜனநாயக நாடாக மாற்ற வேண்டுமென்பதுடன் பொருளாதாரத் துறையிலும் நல்ல நிலைக்கு உயர்த்த வேண்டும். அதனால் தான் எமது அரசாங்கம் 2020, 2030, 2050ஆம் ஆண்டுகளை இலக்கு வைத்து வேகமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது என்றார்.

# மதக்குழு முரண்பாடுகளை கையாள விசேட பொலிஸ் குழு

மதக் குழுக்களுக்கிடையே ஏற்படும் முரண்பாடுகள் தொடர்பிலான முறைப்பாடுகளை கையாள்வதற்கான விசேட பொலிஸ் பிரிவு நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு 07, அநகாரிக தர்மபால மாவத்தையிலுள்ள புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சில் இந்தப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் கீழ் இந்த விசேட பொலிஸ் பிரிவு செயற்படும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் ஆலோசனைக்கு அமைவாக இந்தப் பொலிஸ் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் எந்தவொரு பாகத்திலும் இடம்பெறுகின்ற மத விவகாரங்கள் தொடர்பான முறைப்பாடுகளை இந்தப் பிரிவிற்கு அறிவித்து, தீர்வை பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தப் பொலிஸ் பிரிவிலுள்ள அதிகாரிகளுக்கு அனைத்துவித பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் காலத்தில் எழுத்து மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும், மின்னஞ்சல் மூலமாகவும் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம் பொதுமக்களுக்கு ஏற்படுத்தி கொடுக்கப்படும்.

நாட்டில் இடம்பெறுகின்ற சமய ரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வொன்றை பெற்றுக் கொடுக்கும் நிறுவனமாக புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சு விளங்குவதாகவும், அந்த நிறுவனத்துடன் இணைந்து சிறந்த சேவையொன்றை வழங்க முடியும் என்று எதிர்ப்பார்ப்பதாகவும், மதக் குழுக்களுக்கிடையே ஏற்படும் முரண்பாடுகளை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகள் இந்த பிரிவின் ஊடாக முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

# ஊவா மாகாணத்தில் தேர்தல் கலந்துரையாடல்

உத்தேச ஊவா மாகாணத் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தலைமையிலான கலந்துரையாடல் ஒன்று, எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்காக ஊவா மாகாணத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் அனைத்து தொகுதி அமைப்பாளர்களுக்கும், மாகாண சபையின் அரசாங்க உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ள தமக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக, மலையக மக்கள் முன்னணியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் ஏ.அரவிந்த்குமார் தெரிவித்துள்ளார்.

கடந்த ஊவா மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட மலையக மக்கள் முன்னணி, வெளியில் இருந்து அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வருகிறது.

இதன் ஒரே ஒரு மாகாண சபை உறுப்பினர் என்ற அடிப்படையிலேயே அரசாங்க உறுப்பினர்களின் இந்த மாநாட்டுக்கு ஏ.அரவிந்த்குமார் விசேடமாக அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாண சபையின் ஆட்சிக் காலம் இந்த வருடம் ஆகஸ்ட் மாதத்துடன் நிறைவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# நாட்டுக்கு எதிரான செயற்பாட்டில் பகிரங்கமாக ஈடுபட்டுள்ளார் சரத் பொன்சேகா

## தேசிய சுதந்திர முன்னணி குற்றச்சாட்டு



நாட்டுக்கு எதிரான செயற்பாட்டில் சரத்பொன்சேகா பகிரங்கமாக ஈடுபட்டு வருகின்றார் என தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸாமில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மக்களைப் பாதிப்புக்கு உள்ளாக்கி ஆட்சி நடத்த வந்த உலக நாடுகளில் தலையிட்டு, அதன் ஆட்சித் தலைவர்களை விரட்ட ஐ.நா செயற்பட்டது போல் இலங்கையும் அந்த அமைப்பிடம் உதவி கோர நேரிடும் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா கூறியிருந்தார். அவரது இந்தக் கருத்தை சிறிய விடயமாக கருதிவிட முடியாது. மிகவும் பாரதூரமான கருத்தாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அவர் வெளியிட்ட வெள்ளைக்கொடி கதையைப்போன்று தனது காட்டிக் கொடுப்பின இரண்டாம் பாகத்தை ஆரம்பித்துள்ளார். மூன்று தசாப்தங்களாக பிரிவினைவாத புலிகள் அமைப்பான தமது கூலிப்படையினரை பயன்படுத்தி, வளம் மற்றும் கேந்திர ஸ்தானம் என்ற வகையில் முக்கியமான இலங்கையை தமது தளமாக மாற்ற மேற்குலக ஏகாதிபத்தியவாதிகள் மேற்கொண்ட நடவடிக்கை தோல்வியை தழுவிய போதிலும் அவர்கள் தமது முயற்சிகளை இன்னும் கைவிடவில்லை.

ஐ.நா மனித உரிமை பேரவையைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் மேறகுலக ஏகாதிபத்தியவாதிகளின் புதிய நடவடிக்கையாகும். ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் இலங்கை சம்பந்தமாக தனது ஆலோசனை வழங்க நியமித்த தருஸ்மன் குழுவில் ஆரம்பித்த செயற்பாடுகள், இன்று இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை நடாத்துமாறு இலங்கையை வலியுறுத்த மனித உரிமை ஆணைக் குழுவை பயன்படுத்தும் வரை சென்றுள்ளது. அமெரிக்கா, பிரித்தானியா உட்பட மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளின் நெருங்கிய தலையீட்டில் மேற்குறிப்பிட்ட ஐ.நாவின் இலங்கைக்கு எதிரான நடவடிக்கை நாட்டிற்குள் செயற்படுத்தப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் அதற்கு சார்பான செயற்பாடுகளை முன்னெடுத்து வெளிநாட்டு எதிர் சக்திகள் பலவற்றை காண முடிகின்றது. நாட்டுக்கு எதிரான இந்தச்செயற்பாடுகளை முன்னர் மறைமுகமாக மேற்கொண்டு வந்த சரத் பொன்சேகா தற்போது பகிரங்கமாக அதனை மேற்கொண்டு வருவதுடன், முக்கிய பங்காற்ற முன்னுக்கு வந்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவிற்கு அனுப்பப்படுகிறது மாத்தளை புதைகுழி எலும்புகள்



மாத்தளை மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளின் மாதிரிகள் காபன் பரிசோதனைகளுக்காக அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவிதுள்ளார். இலங்கையின் வேண்டுகோளுக்கு இணங்க அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள ஆய்வு கூடம் ஒன்று இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்ள முன்வந்துள்ளது

மாத்தளையில் பல மாதங்களுக்கு மனித புதைகுழி ஒன்று பற்றிய தகவல்கள் கிடைத்தன. இதன் பின்னர் குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்தது. அந்தப் புதைக்குழியில் இருந்து பல எலுப்புக் கூட்டின் பகுதிகள் மீட்கப்பட்டன.

இது சம்பந்தமாக காபன் பரிசோதனைகள் நடத்தப்பட வேண்டியதாக இருந்தது. இதனையடுத்து காபன் பரிசோதனைக்கான உலகில் சிறந்த ஆய்வுக் கூடங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக அமெரிக்காவின் புளோரிடாவில் மயோமி சர்வதேச ஆய்வு கூடம் இது சம்பந்தமான ஆய்வுகளை நடத்த விருப்பம் தெரிவித்தது.அந்த ஆய்வுகள் சம்பந்தமான கடிதம் நேற்றுமுன்தினம் கிடைத்துள்ளது. இதனடிப்படையில் எலும்புக் கூடுகளில் மாதிரிகள் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன.நீதிமன்றத்தின் அனுமதியை பெற்று அவற்றை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளில் வயது, இறந்த காலம் என்பவற்றை கண்டறிய இந்த காபன் பரிசோதனை மூலம் மேற்கொள்ளப்படுகிறது என்றார்.

1980 ஆம் ஆண்டுகளில் கொல்லப்பட்டதாக கூறப்படும் 150இற்கும் மேற்பட்ட மனித எலும்புக் கூடுகளின் எச்சங்கள் மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் இருந்த மனித புதைகுழி ஒன்றில் இருந்து மீட்கப்பட்டன.1980 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் ஜே.வி.பியின் கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டவர்கள் இந்தப் புதை குழியில் புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

# சந்திரிக்காவுக்கு இராஜயோகம்

## ஜோதிடர்கள் கணிப்பு



முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுக்கு மிகப்பெரிய இராஜயோகம் பிறந்துள்ளதாக அவரது ஜோதிடர்கள் தெரிவித்துள்ளனர்.

தனக்கு இராஜயோகம் பிறந்துள்ளதாக ஜோதிடர்கள் கூறிய தகவலை, அவர் சில அமைச்சர்களிடம் தெரிவித்துள்ளார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், அமைச்சர்களின் ஆதரவைப் பெறுவது தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்த நிலையில், எதிர்வரும் நவம்பர் மாதம் சந்திரிக்கா மீண்டும் பகிரங்க அரசியலுக்கு வர தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


# பரீட்சைப்பெறுபேறு குறைவிற்கு மாகாணசபையே பொறுப்பு

## அமைச்சர் மைத்திரிபால குற்றச்சாட்டு

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வடமத்திய மாகாண சபை மீது குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கடந்த வருடம் மாகாணத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரபரீட்சை பெறுபேறுகள் குறைவடைந்தமைக்கு மாகாண சபையே பொறுப்பு கூற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.வடமத்திய மாகாண சபையின் பொறுப்பற்ற செயற்பாடுகளின் காரண மாகவே கடந்த வருடத்துக்கான பெறுபேறுகள் குறைவடைந்ததாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



முரளியின் 'கடவுளின் கைபேசி எண்' என்னும் சிறுகதைத் தொகுப்பு அல்வாய் அவை கலையகத்தில் அண்மையில் சாகித்திய ரத்னா தெணியான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர் உரைநிகழ்த்துவதையும், நூல் வெளியிட்டு வைக்கப்படுவதையும் காணலாம். (48)

## சகல குருதி வகைகளுக்கும்
# இரத்தவங்கியில் தட்டுப்பாடு
## உயிர்காக்கும் பணிக்கு உதவுமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது நிலவிவரும் வெப்ப நிலை அதிகரிப்பால் குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருவதாகவும் இதனால் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் எல்லாவகையான குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவி வரும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய குருதிக்கொடை செய்து உயிர்காக்கும் என்னத பணிக்கு உதவுமாறு இரத்தவங்கி அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

எனவே, குருதிதானம் செய்யவிரும்புவோர் யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதியில் உள்ள இரத்த வங்கிக்கு சமூகமளித்து இரத்ததானம் செய்து குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய உதவுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி நாடுமுழுவதும் இரத்தத்துக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன் தற்போது அதிகரித்துள்ள விபத்துக்களிகால் இரத்தத்துக்கான தேவை பலமடங்கு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே நடமாடும் இரத்த தான முகாம்களை ஒழுங்குபடுத்த விரும்புவோர் இரத்த வங்கியுடனோ அல்லது 077 2105375 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு குருதிக் கொடை செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்களின் நலன்கருதி சிரமதானம் செய்யும் பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சென்.பெனடிற் றோமன் கத்தோலிக்க பாடசாலை கடந்த 19ஆம் திகதி பெற்றோரால் சிரமதானம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதலாம் தவணை விடுமுறைக்குப் பின்னர் கடந்த 21 ஆம் திகதி பாடசாலை மீண்டும் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. எனவே தமது மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் பாடசாலையின் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டும் பாடசாலையில் கல்விபயிலும் மாணவர்களின் பெற்றோர் சிரமதானத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்கள் கல்வியிலும், சுகாதாரத்திலும், பாடசாலைச் செயற்பாடுகளிலும் அக்கறையும், ஆர்வமும் மிக்க பெற்றோருக்கு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் உட்பட கல்விச் சமூகமும் நன்றி தெரிவித்துள்ளது. (எஸ்.பி)

## வைரவரின் கருங்கல் சிலை சுழிபுரம் கடலில் மீட்பு



(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் - திருவடிநிலைக் கடலில் இருந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை வைரவரின் கருங்கல் சிலையொன்று மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி கடலில் நேற்றுமுன்தினம் பிற்பகல் வட்டு.பிளவத்தை இளைஞர் சிலர் குளித்துக் கொண்டிருந்த போது கரையிலிருந்து சுமார் இருநூற்றைம்பது மீற்றர் தூரம் உள்ள ஆழமான கடலில் இந்தச் சிலை கண்டெடுக்கப்பட்டது.

வேட்டியால் சுற்றப்பட்ட நிலையிலிருந்து இந்தச் சிலை தொடர்பாக பொன்னாலை மற்றும் சுழிபுரம் மேற்கு இளைஞர்களுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு சென்ற இளைஞர்கள் குறித்த சிலையை நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரத்திற்கு எடுத்துச் சென்று அங்குள்ள நரசிங்க சித்தர் சுவாமிகளின் பூசை வழிபாடுகளுடன் அந்த ஆலயத்தில் வைத்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டிலிருந்து இந்துக் கடவுளர்களின் விக்கிரகங்கள் திருடப்பட்டு வருகின்ற நிலையில் கடலில் இருந்து மேற்படி விக்கிரகம் மீட்கப்பட்டுள்ளது. இந்த விக்கிரகத்தை மீட்ட இளைஞர்களும் ஏனைய இளைஞர்களும் சேர்ந்து மிகவும் பக்திபூர்வமாக விக்கிரகத்தை சம்புநாத ஈஸ்வரத்தில் ஒப்படைத்தமை குறிப்பிடத்தக்கது. (48)

## சைக்கிளில் சென்றவரை வான்மோதியதில் ஒருவர் படுகாயம், வான்சாரதி கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரசடி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள காங்கேசன்துறை வீதியில் வாகன விபத்து இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 23 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு சைக்கிளில் சென்றவரை வான் மோதியதில் சைக்கிளில் சென்றவர் படுகாயங்களுக்கு உள்ளாகி யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனைக்கோட்டை காக்கைதீவைச்சேர்ந்த கோவிந்தராஜா சசிதரன் என்பவரையே சுன்னாகம் இணுவில் பகுதியைச் சேர்ந்த தியாகராசா பார்த்தீபன் என்பவரது வான் மோதியதியுள்ளதாகவும் வான் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## முரசின் இன்றைய பலன்

(29.04.2014 செவ்வாய்க்கிழமை)



ஐய வருஷம் சித்திரை மாதம் 16 ஆம் திகதி.
அமாவாசை / அமிர்த சித்தம்.
அச்சுவினி நட்சத்திரம். மு.ப. 09.29 வரை. பின் பரணி.
இராகு காலம் 02.58 - 04.28 வரை. சுபநேரம் 10.28 - 11.58 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பொருத்தமான வரனைத்தேடி அலைய முற்பட்டதால் தேகநலம் பாதிக்கப்படல், பொருட்களை விற்பதற்கு அதிரடியான யோசனையைச் செயற்படுத்த முனைதல. |
| ரிஷபம் | அனுமதி கிடைக்க பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டு சாதகமான பதில் பெறல், பாதுகாப்பில் அலட்சியம் இருந்ததால் திருட்டுப்போதல். |
| மிதுனம் | முதலும் வட்டியும் தலைக்கு மேல் போனதால் சொத்தினை விற்க முனைப்படைதல், பரீட்சைப் பெறுபேறு நன்றாக அமைந்ததினால் உயர் கல்விக்கு வாய்ப்பு ஏற்படல். |
| கடகம் | அடிக்கடி நோய்ப்படுகின்ற குழந்தையை விற்று வாங்க முற்படல், பாசம் மிக்கவர்களின் நேசம் கூடியதால் ஆனந்த நிலை. |
| சிம்மம் | ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்பட்டாலும் பின்னர் இயல்பு நிலைவந்துவிடல், பணக்கொடுக்கல் வாங்கல் திருப்தி கரமான முடிவினைத்தருதல். |
| கன்னி | திறப்பு விழாக்களில் பங்கு கொள்ள அழைப்புவரல், சுபகாரிய நிகழ்வுக்குச் செலவு செய்ய கடன்படும் நிலை ஏற்படல். |
| துலாம் | பணிகளில் இருந்த தொய்வு நிலை சக ஊழியரால் சரிசெய்தல், மாமன், மைத்துனருடன் ஏற்பட்டிருந்த மனக் கசப்பு நீங்கிவிடல். |
| விருச்சிகம் | ஏழரைச் சனி இருப்பதினால் பிரயாண முயற்சியை ஒத்தி வைக்க முஸ்தீபு, தொலைந்த பொருட்கள் பற்றிய தகவல் கிட்டுதல். |
| தனுசு | கௌரவப்பட்டம் வழங்க பிரமுகரினால் சிபார்சு செய்யப்படல், எய்தவன் இருக்க அம்பை நோவது போல் முரண்பாடு ஏற்படல். |
| மகரம் | தேகநலம் பாதிக்கப்பட அலைச்சல் காரணமாக அமைதல், நன்றி கெட்ட மனிதர்களை நினைத்து துயர் மேவுதல். |
| கும்பம் | பொறுப்பின்றி கொடுத்த பணத்தைப்பெற சட்டநடவடிக்கை எடுத்தல், நீண்ட காலமாக இழுபட்டுக் கொண்டிருந்த பணிநிரந்தரமாதல். |
| மீனம் | சட்டத்தினால் தடைசெய்யப்பட்ட பொருட்களை விற்றதால் தண்டம், விவாகப்பேச்சு பகீரதப்பிரயத்தனத்தின் பின்னர் நிறைவேறல். |

## மீண்டும் பொண்டிங்

(சார்ஜா)

மும்மை அணியின் ஆலோசகராக அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங், கடந்த ஆண்டு நடந்த ஐ.பி.எல்., தொடரில் மும்பை அணியின் சில போட்டிகளுக்கு மட்டும் கப்டனாக இருந்தார். இதன் பின் ரோகித் சர்மா அணியை வழிநடாத்தினார். ஏழாவது தொடரில் பொண்டிங் பங்கேற்கவில்லை. இந்நிலையில், 4 போட்டியில் தோற்ற மும்பை அணிக்கு, இவர் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பொறுப்புக் குறித்து பொண்டிங் கூறுகையில் மீண்டும் மும்பை அணியுடன் இணைந்து பணியாற்றுவதை ஆர்வத்துடன் எதிர்நோக்கியுள்ளேன். கடந்த சீசனின்போது வீரர்கள் அணி மீது எவ்வளவு பற்று வைத்துள்ளனர் என்பதைப் பார்த்தேன். இன்னும் எங்களிடம் வெற்றிக்கான வெறி உள்ளது. முடிந்தவரை கடினமாகப் போராட முயற்சிப்போம் என்றார்.

## ஒரு பந்தில் 7 ஓட்டங்கள்

டில்லி அணிக்கெதிரான போட்டியில் மலிங்க வீசிய 5ஆவது ஓவரின் 2ஆவது பந்து வைட் ஆக அமைந்தது. தடுப்பதற்காக டைவ் அடித்த விக்கெட் காப்பாளரின் கையுறையில் பட்டு தெறித்த பந்து பின்னால் இருந்த ஹெல் மெட் மீது பட்டதால் அதற்கு 5 ஓட்டங்கள், வைட்டுக்கு ஒரு ஓட்டம், துடுப்பாட்ட வீரர்கள் ஓடி எடுத்த ஒரு ஓட்டம். என அந்த ஒரு பந்தில் மட்டும் டில்லி அணிக்கு 7 ஓட்டங்கள் கிடைத்தன.

## பூஜ்ஜியத்தில் ராஜ்யம்

(லண்டன்)

கிரிக்கெட் போட்டியில் ஒரு அணியின் 10 வீரர்கள் டக் அவுட்டான சோகம் அரங்கேறியுள்ளது. லண்டனில் கிளப் அணிகள் மோதும் சேஷயர் லீக் 3ஆவது டிவிசன் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகின்றது. இதில் விரால் கிரிக்கெட் கிளப் மற்றும் ஹஸ்லிங்டன் அணிகள் மோதின. முதலில் ஆடிய ஹஸ்லிங்டன் அணி 108 ஓட்டங்களைப் பெற்றது.

பின், களமிறங்கிய விரால் கிளப் அணியின் முதல் ஒன்பது வீரர்கள் அனைவரும் பூஜ்ஜியத்தில் ஆட்டமிழந்தனர். 10ஆவது வீரராக களமிறங்கிய கானர் ஹட்சன் மட்டும் ஒரே ஒரு ஓட்டம் பெற்றார். இரண்டு ஓட்டங்கள் லெக் பை மூலம் உதிரியாகக் கிடைத்தன. விரால் கிரிக்கெட் கிளப் அணி 9.2 ஓவரில் 3 ஓட்டங்களுக்கு சுருண்டு, 105 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது. ஹஸ்லிங்டன் அணி சார்பில் பென் ஜஸ்டீட் 6, டொம் கிலெட்ஹில் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இருப்பினும் இப்போட்டியை கிரிக்கெட் அரங்கில் மோசமான தோல்வியாகக் கருத முடியாது. கடந்த 1913இல் நடைபெற்ற கிலாஸ்டன்பரி அணிக்கு எதிரான போட்டியில் சாமர்சட் கிளப் லாங்போர்ட் அணி 0 ஓட்டங்களுக்கு சுருண்டது.

## மட்ரிட், ரோம் ரென்னிஸ் அஸரெங்கா விலகல்

(மட்ரிட்)

மட்ரிட், ரோம் ரென்னிஸ் தொடர் தொடர்களிலிருந்து காயம் காரணமாக விலகவுள்ளதாக அஸரென்கா தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டியின் போது இடது காலில் காயமடைந்த உலகின் 4ஆம் நிலை வீராங்கனை விக்டோரியா அஸரென்கா (பெலாரஸ்) கடந்த மாதம் நடந்த இன்டியன்வெல்ஸ் போட்டியில் முதல் சுற்றில் தோல்வி கண்டு வெளியேறினார்.

அதன் பின்னர் ஓய்வு எடுத்து வரும் அஸரென்கா, மே 3ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ள மட்ரிட் ஓப்பன் மற்றும் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெறும் ரோம் ரென்னிஸ் போட்டி ஆகியவற்றில் விளையாடவில்லை என்று தெரிவித்துள்ளார். காயம் முழுமையாக குணமடையாததால் மே 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பிரெஞ் ஓப்பன் போட்டிக்கு அஸரென்கா தயாராவதில் சிக்கல் ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஷரபோவாவுக்கு ஹட்ரிக் கிண்ணம்



போர்சே ரென்னிஸ் கிராண்ட் பிரிக்ஸ் தொடரில் ரஷ்யாவின் மரியா. ஷரபோவா ஹட்ரிக் சம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளார்.

ஜேர்மனியில் உள்ள ஸ்டட்கெர்ட் நகரில், பெண்களுக்கான போர்சே ரென்னிஸ் கிராண்ட் பிரிக்ஸ் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் ஷரபோவா, சேர்பியாவின் அனா இவானோவிச்சை எதிர் கொண்டார். முதல் செட்டை 3-6 என இழந்த ஷரபோவா, அடுத்த செட்டை 6-4 என வென்று பதிலடி தந்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் கடைசி செட்டில் அசத்திய ஷரபோவா 6-1 என எளிதாக வசப்படுத்தினார். சுமார் 2 மணி 3 நிமிட நேரம் வரை நீடித்த போட்டியின் முடிவில், ஷரபோவா 3-6, 6-4, 6-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைத் தட்டிச்சென்றார். இதன் மூலம் இத்தொடரில் (2012,2013,2014) ஹட்ரிக் பட்டம் வென்றார்.

## சமூகப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது

பிரேசில் நிலவும் சமூக பிரச்சினைகளுக்கு, எதிர்வரும் உலகக் கோப்பை கால்பந்து போட்டி தீர்வாகாதுஎன பிரேசில் அணியின் முன்னாள் நட் சத்திர வீரர் ரொனால்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் யூன் மாதம் 13ஆம் திகதி முதல் யூலை மாதம் 14ஆம் திகதி வரை பிரேசிலில் உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே ரொனால்டோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகக் கோப்பை போட்டி நடைபெறுவதன் மூலம், நாட்டில் கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளில் முன்னேற்றம் என்று பிரேசில் மக்கள் நம்புகின்றனர். இப்போட்டி பயனை ஏற்படுத்துமே தவிர, பிரச்சினைகளைத் தீர்க்காது. கால்பந்து இரசிகர்களுக்குத்தான் இப்போட்டி பெரும் திருவிழாவாக அமையும்.

தாயகத்தில் பிரேசில் அணி கிண்ணத்தை வெல்வது கடினமானதொரு விடயமாகத்தான் இருக்கும். ஏனெனில், ஆர்ஜென்ரீனா, ஸ்பெயின், போர்த்துக்கல் போன்ற பலமான அணிகளின் சவால்களை வெற்றிகரமாக முறியடிக்க வேண்டும்.

பிரேசில் அணியைப் பொறுத்தவரை எப்பொழுதுமே இளம் வீரர்களுக்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இந்த முறை அணித் தேர்வு எப்படி இருக்கும் என்று என்னால் கணிக்க முடியவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கால்பந்துக்குப் பின் நடிப்பு

கால்பந்து மைதானத்தில் எதிரணி வீரர்களுக்கு கண்ணா மூச்சி விளையாட்டு காட்டும் போர்த்துக்கல் நாட்டு வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ, கால்பந்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், திரையில் தோன்ற (நடிக்க) வாய்ப்புள்ளதாக கருத்துத் தெரிவித்துள்ளார்.

கால்பந்து போட்டிதான் எனது உயிர் நாடி. கால்பந்தைப் பொறுத்து இளமையாக இருக்கும் காலங்களிலேயே, சாதிக்க முடியும். எனவே, எனது இளமைக் காலம் முழுவதும் கால்பந்து போட்டியுடன் பயணிக்கப்போகின்றது. இதில் மாற்றமில்லை. ஓய்வு பெற்ற பின் திரையில் தோன்றலாம் என எண்ணுகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# INDIAN PREMIER LEAGUE 2014

## இன்றைய ஆட்டம்

**கொல்கத்தா எதிர் ராஜஸ்தான்**

**இடம்: அபுதாபி. நேரம்: இரவு 8 மணி**

## ஐ.பி.எல். துளிகள்...

கொல்கத்தா அணிக்கு எதிரான போட்டியில் எங்களது பந்து வீச்சாளர்கள் மிகவும் அபாரமாக செயற்பட்டார்கள். ஏறக்குறைய நாங்கள் 20 முதல் 30 ஓட்டங்கள் குறைவாக தான் எடுத்தோம். இதனால் நாங்கள் ஆரம்பத்திலேயே எதிரணியின் விக்கெட்டை வீழ்த்த வேண்டியது அவசியமாக இருந்தது. அதனை எங்கள் பந்துவீச்சாளர்கள் நேர்த்தியாகச் செய்தனர். சந்தீப் சர்மாவின் பந்து வீச்சு சிறப்பாக இருந்தது.

**ஜோர்ஜ் பெய்லி (பஞ்சாப் அணிக் கப்டன்)**

எங்கள் அணி பந்து வீச்சாளர்கள் சிறப்பாகப் பந்து வீசி பஞ்சாப் அணியை 132 ஓட்டங்களுக்குக் கட்டுப்படுத்தினார்கள். ஆனால் துடுப்பாட்ட வீரர்களின் சொதப்பலான ஆட்டத்தினால் வெற்றி இலக்கை எட்ட முடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது. தொடர்ந்து வெற்றியைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

**கம்பீர் (கொல்கத்தா அணிக் கப்டன்)**

நாங்கள் தென்னாபிரிக்க சுற்றுப் பயணம் சென்றிருந்தபோது 7ஆவது ஐ.பி.எல். ஏலம் நடைபெற்றது. அதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். ஏலம் முடிந்ததும் பஞ்சாப் அணியில் துடுப்பாட்ட மற்றும் பந்துவீச்சு இரண்டும் சமமாக இருப்பதாகத் தெரிவித்தேன். காயம் காரணமாக முதல் சில ஆட்டங்களில் சிறப்பாகச் செயற்பட முடியவில்லை. இப்போது மீண்டும் சிறப்பாகச் செயற்படுவது மகிழ்ச்சி. எப்போதுமே கம்பீருக்கு எதிராக அனுபவித்து பந்து வீசுவேன். பந்தை அவரிடம் இருந்து சிறிதாக தள்ளி வீசினால், எளிதாக கம்பீர் விக்கெட்டைப் பெற்று விடலாம்.

**ஜோன்சன் (பஞ்சாப்)**

பந்தை மாற்றிய பின்னர் ஆட்டத்தில் மாற்றம் ஏற்பட்டது. பனிதுளி இருந்ததால் ஹைதராபாத் வீரர்களால் திட்டமிட்டபடி பந்துவீச முடியவில்லை. இதனால் நாணயச் சுழற்சியில் தோற்றது எங்களுக்கு உதவியாகவே இருந்தது. ஒட்டு மொத்தமாக நாங்கள் சிறப்பாக செயற்பட்டோம் ஒவ்வொருவரும் தங்கள் பங்களிப்பை வெளிப்படுத்தினர். ஸ்மித், மக்கலம் ஆகியோரின் ஆரம்பம் மிகவும் சிறப்பாக இருந்தது.

**டோனி (சென்னை அணிக் கப்டன்)**

## உலகக் கிண்ணத்தை வெல்ல ஜெயசூரியா புதிய வியூகம்



(கொழும்பு)

அவுஸ்ரேலியா மற்றும் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண (50 ஓவர்) போட்டியை வெல்ல வேண்டுமானால் இலங்கை அணிக்கு சிறந்த வேகப்பந்து மற்றும் சகலதுறை வீரர்களை உருவாக்க வேண்டும் அல்லது தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுத் தலைவர் சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் நடைபெற்ற ருவென்ரி-20 போட்டியில் சாதித்ததை விடவும் நியூசிலாந்து, அவுஸ்ரேலியாவில் நிலைமை வித்தியாசமானது. இங்கு சாதிக்க வேண்டுமானால் சிறந்த வேகப்பந்து மற்றும் சகலதுறை வீரர்கள் தேவைப்படுகிறார்கள். உலகக் கிண்ணப் போட்டிவரை எமக்கு இன்னும் சுமார் 25 ஒருநாள் போட்டிகள் உள்ளன. இறுதி அணியில் இடம்பிடிக்கக் கூடிய வீரர்களை அடையாளம் கண்டு இந்தப் போட்டிகளில் போதுமான அளவு வாய்ப்பு வழங்க வேண்டும்.


உலகக் கிண்ணப் போட்டிக்கு தயாராகும் வகையில் அடுத்த மே மாதம் அயர்லாந்து மற்றும் இங்கிலாந்து சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி அங்கு டெஸ்ட் மற்றும் ருவென்ரி-20 போட்டிகளுடன் 7 ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

தொடர்ந்து இலங்கை அணி யூலையில் தென்னாபிரிக்காவுடன் மேலும் மூன்று ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

கடந்த காலங்களில் தேர்வுக் குழுவின் செயற்பாட்டு முறைகள் அனைத்தையும் நாம் மாற்றி அமைத்தோம்.

அதன் பெறுபேற்றை எம்மால் பார்க்க முடிகிறது. இந்தப்பழக்கத்தை நான் விளையாடும் காலங்களில் இருந்து கடைப்பிடித்து வருகிறேன். இதனால் எனக்கு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் தேவை பற்றிப்புரிந்துகொள்ள முடிகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வடமாகாண வீர,வீராங்கனைகளுக்கான மரதன் டெல்மன், ஷாலினி முதலிடம்





(வவுனியா)

வடமாகாண வீர,வீராங்கனைகளுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ரி. அன்தனி டெல்மன் மற்றும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். ஷாலினி ஆகியோர் முதலிடத்தைப் பிடித்துள்ளனர்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இப்போட்டியில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் பங்குகொண்டனர்.

42 கிலோ மீற்றர் தூரம் கொண்டதாக நடாத்தப்பட்ட இப்போட்டி கடந்த சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ரி. அன்தனி டெல்மன் 2 மணித்தியாலங்கள் 46 நிமிடங்கள் 36 செக்கன்களில் நிறைவு செய்து முதலாமிடத்தைப் பிடித்துக் கொண்டார். வடமாகாண மரதன் போட்டி வரலாற்றில் கிளிநொச்சி மாவட்ட வீரர் ஒருவர் முதலிடத்தைப் பிடிப்பது இதுவே முதற்தடவையாகும். இப்பிரிவில் இரண்டாமிடத்தை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயந்தன் (2 மணி, 52 நிமிடம், 32 செக்கன்), மூன்றாமிடத்தை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எச்.ஏ.பி. திசாநாயக்க (2 மணி, 58 நிமிடம், 29 செக்கன்) பிடித்துக் கொண்டனர்.

பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்டத்சைச் சேர்ந்த ஆர். ஷாலினி 3 மணித்தியாலம் 39 நிமிடங்கள், 21 செக்கன்களில் போட்டித் தூரத்தை நிறைவு செய்து முதலிடத்தைப் பிடித்தார். இவர் கடந்த மூன்று வருடங்களால் முதலிடத்தைப் பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பிரிவில் இரண்டாமிடத்தை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே. நேர்மதி (4 மணி, 08 நிமிடம், 38 செக்கன்), மூன்றாமிடத்தை ஜே. வனோஜா (4 மணி, 12 நிமிடம், 43 செக்கன்) பிடித்துக் கொண்டனர்.

ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் 26 புள்ளிகளைப் பெற்ற வவுனியா மாவட்டம் மூதலிடத்தையும், 17 புள்ளிகளைப் பெற்ற கிளிநொச்சி மாவட்டம் இரண்டாமித்தையும் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப்போட்டியில் முதல் பத்து இடங்களைப் பிடித்தோர் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

## தேங்காய் அடித்தலில் முதலிடம்





(முழங்காவில்)

தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட போர்த் தேங்காய் அடித்தல் போட்டியில் பொலிகை மறவர் கலை பண்பாட்டு மையத்தைச் சேர்ந்த வீரர்கள் முதலிரு இடங்களைப் பிடித்துள்ளனர்.

முழங்காவில் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் தேங்காய் அடித்தல் உட்பட பல பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டது. தேங்காய் அடித்தல் போட்டியில் பொலிகை மறவர் கலை பண்பாட்டு மையத்தைச் சேர்ந்த த. நரேநத்திரன் முதலாமிடத்தையும், சிந்துதாஜன் இரண்டாமிடத்தையும் பிடித்துக் கொண்டனர். (116)

## சங்கானை ஸ்ரீபாரதி சம்பியன்

(தெல்லிப்பளை)

வலிகாமம் வடக்கு இளைஞர் கழகத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் சங்கானை ஸ்ரீபாரதி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்க அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இப்போட்டி கடந்த சனிக்கிழமை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ அணியும், தெல்லிப்பளை மகர்ஜனா அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை பிரதீப் அணியும், சங்கானை ஸ்ரீபாரதி அணியும் மோதின. இதில் சங்கானை ஸ்ரீபாரதி அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் சங்கானை ஸ்ரீபாரதி அணியும், சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ அணியும் மோதின. இதில் சங்கானை ஸ்ரீபாரதி அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. (93)

# தேசிய மட்ட வல்லவர் கராத்தே

## மகாதேவா ஆச்சிரமம் 2 தங்கம் உட்பட 16 பதக்கம்

(கிளிநொச்சி)

இலங்கை ஷோட்டோகான் கராத்தே சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட 7ஆவது தேசிய கராத்தே வல்லவர் போட்டியில் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்ல வீர,வீராங்கனைகள் இரண்டு தங்கம் உட்பட 16 பதக்கங்களை வென்று அசத்தியுள்ளனர்.

இலங்கை ஷோட்டோகான் கராத்தே சம்மேளனத்தினால் கடந்த வார இறுதியில் 7ஆவது தேசிய கராத்தே வல்லவர் போட்டி கொழும்பில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிர் ம சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த பல வீர,வீராங்கனைகள் பங்குகொண்டனர்.

சண்டை மற்றும் காட்டாப் போட்டிக்ள் நடைபெற்றது. இப்போட்டியில் இரண்டு தங்கம், நான்கு வெள்ளி, பத்து வெண்கலப் பதக்கங்களை வென்று கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்ல வீர, வீராங்கனைகள் அசத்தியுள்ளனர்.

விளையாட்டுச் செய்திகள்

10 வயது பிரிவுக்கான சண்டைப் போட்டியில் நகுலேஸ் சாணுயா தங்கப் பதக்கத்தையும், 19 வயதுப் பிரிவுக்கான சண்டைப் போட்டியில் பிரகாஷ் பிரசாந்தினி தங்கப் பதக்கங்களையும் வென்றுள்ளனர். இதேவேளை, காட்டாப் போட்டியில் பிரசாந்தினி வெண்கலப் பதக்கம் வென்றார்.

11 வயது பிரிவுக்கான சண்டைப் போட்டியில் இராஜேந்திரம் சரணியா வெள்ளிப் பதக்கத்தையும், 19 வயதுப் பிரிவுக்கான சண்டைப் போட்டியில் நவரத்தினம் ஷர்மிளா மற்றும் ரசீந்திரன் தமிழ்மகள் ஆகியோர் வெள்ளிப் பதக்கத்தையும், 19 வயதுப் பிரிவுக்கான காட்டாப் போட்டியில் தங்கராசா கேசாளினி வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

10 வயதுப் பிரிவுக்கான சண்டைப் போட்டியில் சசிகுமார் தாட்சாயினி வெண்கலப் பதக்கத்தையும், 13 வயதுப் பிரிவுக்கான சண்டைப் போட்டியில் இராஜேந்திரம் பிரியதர்ஷினி வெண்கலப் பதக்கத்தையும், 17 வயதுப் பிரிவுக்கான சண்டைப் போட்டியில் கணேசலிங்கம் ரேணுகா வெண்கலப் பதக்கத்தையும், 19 வயதுப் பிரிவுக்கான சண்டைப் போட்டியில் தங்கராசா கேசாளினி வெண்கலப் பதக்கத்தையும், பகிரங்கப் பிரிவில் நடராசா ரவிபவன், மோகனதாஸ் தர்சன் ஆகியோர் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

பத்து வயதுப் பிரிவுக்கான காட்டாப் போட்டியில் சசிகுமார் தாட்சாயினி, பகிரங்கப் பிரிவுப் போட்டியில் கனகராசா கனிஸ்டன், மோகனதாஸ் தர்சன் ஆகியோர் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளனர்.

தேசிய மட்ட போட்டிகளில் திறமையான பெறுபேறுகளை வெளிப்படுத்திய இச்சிறுவர்கள் உண்மையிலேயே பாராட்டுக்குரியவர்கள் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எங்களாலும் முடியும் என்பதை எடுத்துக்காட்டிய தனபாலன் தொடர்

## முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி அணிக் கப்டன் பெருமிதம்



(யாழ்ப்பாணம்)

எங்களது திறனை வெளிக்கொணரக்கூடிய ஒரு தொடராக, களமாக தனபாலன் நினைவு கிரிக்கெட் தொடர் அமைந்ததில் பெருமகிழ்வடைகின்றோம். அடுத்து வரும் தொடர்களில் இந்த அனுபவம் எங்களுக்கு அதிக பலனைத் தரும் என முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி கப்டன் ப. அஞ்சஜன் தெரிவித்துள்ளார்.

அமரர் தனபாலன் நினைவு கிரிக்கெட் தொடர் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், வெளிமாவட்டத்தில் நடைபெறும் போட்டித் தொடரில் கலந்து கொள்வதன் மூலம் அதிக அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த வகையில் தனபாலன் நினைவு கிரிக்கெட் தொடரில் பங்குபற்றுவதற்கு எங்களை அழைத்த சென். ஜோண்ஸ் கல்லூரிக்கு எங்கள் கல்லூரி சார்பாக நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். இத்தொடரில் நாங்கள் இறுதிப் போட்டி வரை முன்னேறியிருப்பது மகிழ்ச்சி. அத்துடன் எங்கள்ாலும் சிறப்பாக ஆட முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டு மிக்க தொடராகவும் இது அமைந்திருக்கின்றது. அடுத்த வாரம் நாங்கள் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியுடன் நடைபெறவுள்ள நண்பர்களின் போர் இரண்டு இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் பங்குகொள்ளவுள்ளோம். இப்போட்டியில் நாங்கள் சாதிப்பதற்கு தனபால்ன் நினைவுக், கிரிக்கெட் தொடர் சிறந்த பயிற்சிக் களமாக அமைந்திருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எஸ்.பி.)

# சர்வதேச அளவில் செல்வாக்கு பெற்ற 100 பேரில் ஒருத்தர்!



நியூயோர்க்கிலிருந்து வெளியாகும் "டைம்" வார இதழ், உலகில் அதிக செல்வாக்கு மிக்க மனிதர்கள் என்ற 100 பேர் அடங்கிய பட்டியலை வெளியிட்டுள்ளது. மாதவிடாய் காலங்களில் பெண்கள் பயன்படுத்துவதற்கான நாப்கின்களை மலிவான விலையில் தயாரிக்கும் இயந்திரத்தை கண்டுபிடித்த தமிழ்நாட்டின் கோயம்புத்தூரைச் சேர்ந்த முருகானந்தம் என்பவரும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

அவருடன் சேர்ந்து இந்தியாவிலிருந்து பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி, ஆம் ஆத்மி கட்சி தலைவர் அர்விந்த் கெஜ்ரிவால் மற்றும் எழுத்தாளர் அருந்ததி ராய் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

கோவையில் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த முருகானந்தம் (49), உலகின் செல்வாக்குமிக்க 100 நபர்களில் ஒருவராக அமெரிக்காவின், "டைம்ஸ்" பத்திரிகையால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்று 29ஆம் திகதி, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிடம் விருது பெறவுள்ளார். முருகானந்தம் ஒரு "சுகாதாரப் போராளி" என்று அந்த இதழில் வர்ணிக்கப்பட்டுள்ளது. இவர் தன் மனைவியின் பிரச்சினைக்காகக் கண்டறிந்த பிரத்தியேகத் தீர்வு ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும் அந்த இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, சீனத் தலைவர் ஜி ஜிங்பிங், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி, அமெரிக்காவின் புலனாய்வுத் துறையின் அத்துமீறல் தகவல்களை அம்பலப்படுத்திய எட்வேர்ட் ஸ்னோடென், அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், போப் பிரான்சிஸ், ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடின் உள்ளிட்டோரும் இடம்பெற்றுள்ளனர்.

தனது சாதனை குறித்து, முருகானந்தம் கூறியது:

"எனது சொந்த ஊர் கோவை, பாப்பநாயக்கன்புதூர். அப்பா நெசவுத் தொழிலாளி. அம்மா விவசாயக்கூலி. எனக்கு ரெண்டு தங்கச்சிங்க. திடீர்னு ஒருநாள் அப்பா இறந்துவிட்டார். வீட்டின் வறுமையை போக்க, "கிரில்" பட்டறைக்கு வேலைக்குப் போனேன். ஒருநாள் என் மனைவி, எதையோ மறைச்சி எடுத்துட்டுப் போனாங்க. என்னன்னு கேட்டப்ப, "இது, பொம்பளைங்க சமாச்சாரம்"னு சொன்னா. விடாப்பிடியா விசாரிச்சப்ப, அது அழுக்குத் துணின்னு தெரிஞ்சு நாப்கின் பயன்படுத்தலாமே என்றேன். "விலை அதிகம்" என்றாள். அப்போதுதான் புரிந்தது, கிராமப் பெண்கள், ஏழைப் பெண்கள் வசதி இல்லாம, பழையதுணிகளை பயன்படுத்துறாங்கன்னு.

உடனே மலிவு விலையில் நாப்கின் தயாரிக்க தயாரானேன். கடையில ஒரு நாப்கினை வாங்கி, பிரிச்சுப் பார்த்து, அதே மாதிரி ஒரு நாப்கின் தயாரிச்சேன். என் மனைவிகிட்ட கொடுத்து சோதனை செய்தேன் "சரியில்லை"ன்னு சொன்னாள்; முதல் அடியே தோல்வியில் முடிந்தது. அடுத்ததா, மனைவி மட்டுமல்லாம, அம்மா, தங்கச்சி, மருத்துவக் கல்லூரி மாணவிகள்னு எனது சோதனையை தொடர்ந்தேன். ஒரு கட்டத்தில், சோதனைக்காக, நான் தயாரித்த நாப்கினை பயன்படுத்த பலரும் மறுத்தாங்க. என் முயற்சியை பார்த்து, எனக்கு ஏதோ பால்வினை நோய் இருக்குன்னு சிலர் ஊர்ல தகவல் பரப்பி விட்டாங்க. அதைக்கேட்டு என் மனைவியும், அம்மாவும் பிரிஞ்சு போயிட்டாங்க.

என்னோட விடாமுயற்சியில, வெளிநாட்டு கம்பனிகள் பயன்படுத்துவது, "பைன்" மரத்திலிருந்து வரும் ஒரு வகை பஞ்சு என்று தெரிஞ்சுது. உடனே, "பைன்" மரபஞ்சை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்தேன். பத்து வருட போராட்டத்துக்குப்பின், மலிவு விலை நாப்கின் தயாரிக்கும் இயந்திரத்தை உருவாக்கினேன், அதில் தயாரித்த முதல் நாப்கினை, கல்லூரி மாணவி ஒருவர் பயன்படுத்திவிட்டு, மிகவும் நல்லா இருக்குன்னு சொன்னார். ரொம்ப வசதியா இருக்குன்னு சொன்னப்போ, எனக்கு அப்படியொரு சந்தோஷம். பல வருடக் கனவு நிறைவேறியது. நான் தயாரிச்ச இயந்திரத்தை பெண்களே சுலபமா இயக்கி, நாப்கினைத் தயாரிக்கலாம். ஒரு நாப்கின் விலை ஒரு ரூபாய்தான்.

கடந்த 2005இல், ஐ.ஐ.டி., "சமூக மாற்றத்துக்கான சிறந்த கண்டுபிடிப்பு" என்று, என் கண்டுபிடிப்பை தேர்வு செய்தது. என் கனவே இந்தியாவில் இருக்கிற அத்தனை ஏழைப் பெண்களுக்கும், என் கண்டுபிடிப்பு போய் சேரணும் என்பது தான். இனி எந்தச் சகோதரியும் மாதவிடாய் காலங்கள்ல அழுக்குத்துணியைப் பயன்படுத்தக் கூடாது." இவ்வாறு, தெரிவித்திருக்கிறார் முருகானந்தம்

சர்வதேச அளவில் நாப்கின் பிரபலமடைந்திருந்தாலும், அதன் விலை அதிகம் என்பதால், ஏழைப் பெண்கள் பயன்படுத்த முன்வருவதில்லை. இந்தியாவில் 5 சதவீதப் பெண்கள் மட்டுமே நாப்கினைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், முருகானந்தம் கண்டறிந்த நாப்கின், உலகின் 11 நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறதாம். 50 பள்ளிக்கூடங்களில், மாணவிகளே தங்களுக்குத் தேவையான நாப்கினை, 30 விநாடிகளில் தயாரிக்க முருகானந்தம் கற்றுக் கொடுத்துள்ளார். மலிவு மற்றும் ஆரோக்கியமான நாப்கினை கண்டுபிடித்து பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியதால், அமெரிக்காவின் "டைம்ஸ்" பத்திரிகையினால் சர்வதேச அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பேரில், ஒருவராகியுள்ளார்.

# வரலாற்றுப் பார்வையில் $E = mc^2$

— வினவு —

## 3



அன்டோன் லவோய்சியர்

பாரடேயின் வாழ்க்கையைப் பற்றிய சித்திரத்தைத் தொடர்ந்து ஐன்ஸ்டீன் ஆற்றல் பற்றிய இயற்பியலில் தனது ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார்.

ஐன்ஸ்டீனின் குழந்தைப்பருவத்திலிருந்தே அவருக்கு நம் கண்களுக்கு தெரியாத மின்சக்தி, காந்தசக்தி போன்றவற்றின் மீது கவர்ச்சி ஏற்பட்டது. அவரது பள்ளி மற்றும் கல்லூரிப்பருவத்தில் இயற்பியல், கணிதம், தத்துவம் ஆகிய துறைகளில் மட்டுமே ஆர்வம் காட்டினார். அவரது பள்ளி, கல்லூரி பேராசிரியர்களை பொறுத்தமட்டில் உலகின் எல்லா ஆற்றலும் - சக்தியும் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டு விட்டன.

ஆனால், ஐன்ஸ்டீன் பின்னாட்களில், ஒரு புதிய, கண்டறியப்படாத மீப்பெருமளவிலான ஆற்றலை பொருட்களின் இதயமான அணுவில் கண்டறிந்து அவர்களுடைய கருத்துத் தவறென்பதை நிருபிக்கப்போகிறார்.

E=mc2 சமன்பாட்டில் M என்பது Mass - நிறையை குறிக்கிறது. இதைப் பற்றி அறிந்து கொள்ள ஐன்ஸ்டீன் பிறந்ததற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நிலபிரபுத்துவ அரசு அல்லது எதேச்சதிகார முடியாட்சியை எதிர்த்த மக்கள் புரட்சி (முதலாளித்துவ புரட்சி) காலகட்டத்திலான பிரான்சுக்கு செல்லவேண்டும். அதுவரை திருச்சபைக்குள் அடைபட்டுக்கிடந்த அறிவியலை வெளிக்கொணர்ந்து ஒவ்வொரு துறையையும் பகுத்தறிவின் மூலம் பிரித்தாய்ந்து வளர்த்தெடுத்த காலம் அது.

பிரான்சில் பிரபுகு லத்தை சேர்ந்த அன்டோன் லவோய்சியர், பிரபலமான இரசாயனவியலாளரும், மன்னர் பதினாறாம் லூயி-யின் வரிவசூலிக்கும் அதிகாரியும் ஆவார். வரி வசூலை பெருக்குவதற்கு பாரிஸ் நகரத்தைச் சுற்றி சுவரெழுப்பி நகரத்தினுள் நுழையும் ஒவ்வொரு பொருளுக்கும் வரி வசூலிக்கும் முறையை கொண்டு வந்து மக்கள் மத்தியில் "இழி"புகழ் ஈட்டிய பணியைச் செய்தவர். ஆனால், அவரது முக்கிய பங்களிப்பு இரசாயனவியல் துறையில், இரசாயன வினைகளில் பொருட்களின் நிறை மாறாமல் இருக்கும் கோட்பாட்டை நிரூபிப்பதில் இருந்தது.

அவர் மொத்த இயற்கையும் மூடிய அமைப்பாக இருப்பதையும், இரசாயன நிலைமாற்றங்கள் அனைத்திலும், எந்தப் பொருளின் நிறையும் அழிவதுமில்லை, புதிதாக உருவாவதுமில்லை என்பதை ஆய்வுக்கூடத்தில் நிரூபித்துக் காட்டினார். அவருடைய ஆய்வுக் கூடத்தில் செஞ்சூட்டிலிருக்கும் இரும்புக் குழாயின் வழியாக நீராவியை செலுத்தி மறுபுறம் அதை சேகரித்து குளிர்வித்தார். (அதாவது இரும்புக் குழாயை துருப்பிடிக்க வைக்கும் இரசாயன வினையை நிகழ்த்தினார்).


சூடேற்ற பயன்படுத்திய நீரின் நிறைக்கும், இறுதியில் குளிர்வித்து பெறப்பட்ட நீரின் நிறைக்கும் இருந்த வித்தியாசம் இரசாயன வினையின் போது வெளியான வாயுவின் நிறை மற்றும் இரும்பு குழாயின் அதிகரித்த நிறையின் கூட்டுத்தொகைக்கு சமமாக இருந்தது. இச்செயல் முறையை பின்னோக்கி - தலை கீழாக - செய்து காட்டித் தனது கோட்பாட்டை நிரூபிக்க அவர் முயன்றார்.

அன்டோன் லாவோய்சியரின் சிறப்பு துல்லியமான அளவீடுகளிலும், தரவுகள் அனைத்தையும் முழுமையாக சேகரித்து ஆய்வு செய்யும் நேர்த்தியுமாகும். லவோய்சியர் வரிவசூல் அதிகாரியாக ஈட்டிய செல்வம் அனைத்தையும் தனது அதிதுல்லியமான ஆய்வுக்கூடத்தை மேம்படுத்துவதற்கே செலவிட்டுக் கொண்டிருந்தார். லாவோய்சியரின் ஆய்விலிருந்து எந்தப் பொருளும் தப்பவில்லை.

அவருடைய கோட்பாடு பொருள் முதல்வாதத்திற்கு நிரூபணமாகவும், எல்லாப் பொருளும் எல்லா வகையான நிலைமாற்றங்களிலும் வேறொன்றாக மாறுவதாகவும், அவற்றின் அடிப்படைத் துகள் (பருப்பொருள்) அழிவதில்லை என்ற நிறைமாறாக் கொள்கை (நிறை அழிவின்மை கொள்கை) உருவாகவும் காரணமாக அமைந்தது.

அவருடைய பங்களிப்பு விஞ்ஞானத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது எனினும், அப்போதைய சமூக சூழலில் உயர் பிரபுகுலத்தோர் சமூகத்தின் மீது கேள்விக்கிடமற்ற அதிகாரம் வகித்ததுடன் அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வாய்ப்புகளை ஏகபோகமாக ஒதுக்கிக் கொண்டனர். ஆனால், இந்த ஆதிக்கத்தை எதிர்த்த பரந்து பட்ட மக்களின் போராட்டமும் வலுப்பெற்று வந்தது.

ஜோன் போல் மாரட் என்ற உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த அறிவியல் ஆர்வலர் நெருப்பின் துகள்களை திரையில் படம்பிடிக்கும் கருவியை தாம் கண்டறிந்துள்ளதாக லாவோய்சி யரிடம் வருகிறார். மாரட்டின் சோதனைச்சாலை வாய்ப்புகள் கிடைக்கப்பெறாத வர்க்கப் பின்னணியையும், அறிவியல் ஆர்வத்தையும் கணக்கில் கொள்ளாத லாவோய்சியர், நெருப்பின் துகளைப் பிடித்து அதை துல்லியமாக அளவிட்டிருந்தால் மட்டுமே மாரட்டின் கண்டுபிடிப்பை தான் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடியும் என்று அவரை அலட்சியப் படுத்தி அனுப்பி விடுகிறார்.



சிறுவயதில் ஐன்ஸ்டீன்

1789இல் மகத்தான பிரஞ்சு புரட்சி நடக்கிறது. எதேச்சாதிகாரத்தின் தலைகளை மக்களும் புரட்சியாளர்களும் கில்லட்டினால் வெட்டியெறிகின்றனர். இப்போது ஜேகோபின் புரட்சியாளர்களில் ஒருவராக இருக்கும் ஜோன் மாரட், வரி வசூலிக்கும் அதிகாரியாக மக்களை ஒடுக்கிய லாவோய்சியருக்கு சம்மன் அனுப்ப, லாவோய்சியரும் கில்லட்டினுக்கு தப்பமுடியவில்லை.

(தொடரும்)

# காலத்தின் முக்கியத்துவமும், காசின் முகாமைத்துவமும்



- இடைக்காடு இளைய பண்டிதன் -

“காலம் பொன்னானது' என்பர். ஆனால், பொன்னை விடவும் அளவிடற் கரிதான பெறுமதி வாய்ந்தது இது. பொன், பொருள் எனச் சகல பொக்கிசங்களும் நிலையற்றன இருந்தும் – சமூக மதிப்பிலும், கலாசாரக் குறியீடுகளிலும், நாணயப் பரிவர்த்தனை நடப்புக்களிலும் முன்னணி வகித்து வரும் இப்பொன்னை ஒப்பீடாக்கி அமைந்த, 'காலத்தைப் பொன் செய்' என்ற கூற்றும் வழக்கிலுள்ளது.

காலமானது – எதற்கும் எவருக்காகவும் காத்திருக்காது. இதோ!...

இதனைப் படித்துக் கொண்டிருக்கும் இதே கணத்திலும், அது கடந்து போய்க் கொண்டிருக்கிறது. காலத்தோடு இயைந்து, அதன் இன்றியமையாமையைத் தெரிந்து – தெளிந்து, ஏற்றவாறு செயற்பட வேண்டும். இதுவே – புத்திபூர்வமான, அர்த்தமுள்ள, நடைமுறைச் சாத்தியமுமான வாழ்வியல் வழி முறையாகும்.

காசு – பணம் என்பதெல்லாம் நடைமுறை வாழ்வியல் தவிர்க்கவியலாத அம்சந்தான் 'பணம் இல்லாதவன் பிணம்' மற்றும் 'ஈட்டி எட்டிய மட்டும் பாயும் பணம் பாதாளம் வரை பாயும்' என்றவாறான கூற்றுக்கள் அநுபவம் சார்ந்தவையே. எம் முன்னோர், வாழ்க்கைச் செலவினங்களைத் தத்தம் வருவாய்க்குட்படுத்தியே வகுத்திருந்தனர். பண்டப் பரிமாறுதல்களைக் – கொள்ளல் கொடுத்தல்களைக் பெரிதும் கைக்கொண்டு, சுமூகமாக திருப்திகரமாகத் தமது வாழ்வியலை இயற்றினர்.

இன்றைய நிலையோ முற்றிலும் வேறு. தலை கீழானது. ஊர் – பேர் கெடுத்து, 'விரலுக்கேற்ற வீக்கம்' விடுத்து வீம்பாக ஊதாரிக்கோலம் எடுத்து, 'அதம உரலுக்குள்' ஆழத் தலை கொடுத்து அபயக்குரல் எழுப்புகின்ற அதி அபாயகட்டத்தில், சில குடும்பங்கள் உழல்கின்றமையும் உண்டு. 'காலத்தின் கதி' – 'விதியின் சதி' – 'செய்வினை சூனியப் பலன்' போன்ற, இற்றுப்போன இயலாமைச் சாக்குப்போக்குகளை முன் வைத்து மிகப்பரிதாபகரமாகத் தமது நிலையை நியாயப்படுத்தவும் அவர்கள் முனைவர். ('விதிகால் மதிகால்'என்றும் ஒன்றுண்டே!) 'காசின் முகாமைத்துவம்' அறவே கவனத்திற் எடுப்படாமை, மேலும் – 'காலத்தின் முக்கியத்துவம்' மதிக்கப்படாமை இவ்விரண்டும் இப்பேரவலத்தின் பிரதான காரணிகளென, வேதனையுடன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இன்றைய இளந்தலைமுறையினரிற் பலர், காலவேகத்தோடு போட்டியிடவென அலைகின்றனர். காசைக் கையாள்வதில் சுயகட்டுப்பாடற்றும், கண்காணிப்பின்றியும் உலைகின்றனர். செல்போன், இவர்களது உடலின் ஓர் அவயமாகவே ஆகிவிட்டிருக்கிறது.

கணனி, தொலைக்காட்சி, இணைய வலையமைப்பு எனும் இன்னோரன்ன இலத்திரனியற் தொடர்புச். சாதனங்கள், உலக நடப்புகளை உள்ளங்கைகளில் தந்து கொண்டிருப்பது உண்மையே. அதே சமயத்தில், கலாசாரச் சீரழிவுக்கான வித்துக்கள் விதைக்கப்படக் கூடிய வாய்ப்புக்களும் இவற்றிலுள்ளதனை மறுக்கவும் இயலாது. இப்போக்கினால், இவற்றின் அடிப்படை நன்னோக்கமே கொச்சையாகிறது.

காலத்தை அனுசரித்துக் காசைக் கருத்துடன் கையாளலாம். ஒரு தொழில் முதலீட்டில் இருந்து, குறிப்பிட்ட காலக் கெடுவினுள் பெற முடியுமான பயன் என்ன? அதன் பொருட்டான வேலை வாய்ப்புகள் எத்தகையன? இவற்றிற்கூடாக அடையப்போகும் அனுகூலங்கள் எவையெவை? கிடைக்க விருக்கும் வருவாயானது, குறித்த தொழில் தொடர்பான செலவினங்களை ஈடுகட்டி எட்டப்படக் கூடியதா? அதாவது – ஊழியர் ஊதியம், சேமலாப நிதியக். கொடுப்பனவுகள், கடன்பட நேரிடுமாயின் – அதற்கான வட்டி, நிருவாக – நடைமுறைச் செலவுகள்... இவை கழிந்த சம்பாத்தியம் சீவனோபாயத்திற்கு ஏதுவாகுமா? 'வாய்க்கு ருசிக்கு' ஆகாது விட்டாலும் 'வாய்க்கரிசி'க்காவது வழி உண்டா?


உத்தேசமாக எதிலும் முதலிட முன், முதலிலேயே முற்றுணர வேண்டிய, உபயோகமான உசாவல்கள் இவை.

விவசாயத் தொழிலைப் பொறுத்த வரை – விளை நிலப் பண்படுத்துகை, பாத்தி – வாய்க்கால் அமைப்பு, நாற்றுப்பயிர் –விதை நடுகை, நீர்ப்பாசனம், களையெடுப்பு, சேதன – அசேதனப் பசளை மற்றும் நாசினிப் பிரயோகம், அறுவடை, களஞ்சியப் படுத்துகை... எனச் செலவினங்கள் பல உள, விளை நிலமும், விதை முதலும் சொந்தமாய் இருந்தாலும் கூட, அவை மட்டும் அபிவிருத்திக் குப் போதா. சலியாத சுய உழைப்புடன் சரியாகச் செயற்பட்டு சிக்கனமாக இயங்கிச் சிறப்புறச் சாதித்து வருபவர்கள் இங்கேயும் இருக்கிறார்கள்.

நிகழ் நுகர்வுத் தேவைகளைக் கணித்து, அதிக வருவாயை ஈட்டக் கூடிய விதத்தில் – அந்தந்தப் பருவங்களில் 'காலத்தே பயிர் செய்து', தமது அனுபவ ஆற்றலினால் வெற்றிப்படிக்கட்டுக்களில் ஏறிக் கொண்டிருப்பவர்களை இன்றுங் காணலாம். இத்தகையோரை, இயற்கையின் சீற்றம் எதுவும் முடக்கி விடாது. தற்காலிகப் பின்னடைவினை அவர்கள் சந்தித்தாலும் அதிலிருந்து துரிதமாக மீண்டு எழுவர்; மீண்டும் ஏகுவர், தம் உயர் விசுவாச உயிர் நாடியாம் விவசாயத்திற்கே.

காலத்தை வசப்படுத்த எவராலும் இயலாது. இவர்களோ அதை வாலாயமாக்கி வளமான வாழ்வினை நிசமாக்குபவர்கள்; காசைப் பிசகின்றி முகாமைத்துவப்படுத்தி, அதற்கு எசமானராகவும் வல்லவர்கள்.

# ஒரு குடும்பம் சிதைகிறது – எஸ்..எல்.பைரப்பா



சாதி, மத, இன பகுப்புக்களுக்கு அப்பால் மானுட வரலாற்றில் பெரிதும் சுரண்டப்பட்ட ஓரினம் உண்டெனில் அது பெண்ணினமாகத்தான் இருக்கும். இனம் என்று வரையறுக்கலாமா என்று தெரியவில்லை! நான், நவீன பெண்ணியத்தின் அடிப்படைகளை, இலக்குதளங்களை அறிந்தவன் அல்லன். ஆனால் கன்னட நாவலாசிரியர் பைரப்பாவின் “ஒரு குடும்பம் சிதைகிறது” நாவலை வாசித்து முடிக்கையில் ஏற்பட்ட முதலுணர்வு என இதைத்தான் சொல்லவேண்டும். நஞ்சம்மாவின் கதை என் பாட்டியின், முப்பாட்டியின் சொல்லப்படாத துயரங்களின் கதை.


அதிக விவரணைகளற்ற, கவித்துவங்களற்ற கூர்மையான நேரடி எழுத்துமுறை பைரப்பாவினுடையது. மானுட இருப்பின் பெருந்துயரங்களை வெகுசில சொற்களில், எவ்வித சமரசமும் இன்றி அவரால் கடத்திவிட முடிகிற்து. நாவலின் பெரும்பகுதி எளிய உரையாடல்களாலும், சிக்கலற்ற மன ஓட்டங்களாலும் ஆனது. யதார்த்தவாத எழுத்துக்களுக்குரிய எல்லைகளை மீறிச் செல்லவில்லை (அதற்கான அவசியமும் நாவலில் இல்லை), என்றாலும் அவரது கூறுமுறை ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

1920 களில் தொடங்கி நாற்பதுகள் வரையிலான காலகட்டத்தில் கர்நாடக மாநிலத்தின் தும்கூர் பகுதியில் அமைந்துள்ள ராமசஸ்திர கிராமத்து பிராமண குடும்பம்தான் நாவலின் களம்.

நாவலின் உணர்ச்சிபூர்வமான தருணங்களில் ஒன்று அப்பன்னையா தன் மகளையும், குடும்பத்தையும் பல ஆண்டுகளுக்கு பின்னர் தேடிச் சந்திக்க செல்லும் பகுதி. சிரமத்திற்கு பின்னர் அவர்கள் வசிக்கும் இல்லத்தைக் கண்டுபிடிக்கிறான். வாயிலில் ஒரு இளம்பெண் புத்தகங்களுடன் நிற்கிறாள். அவளை கண்டவுடன் அவள்தான் தன் மகள் என்பதை உணர்ந்து கொள்கிறான். அப்பெண் “யார் நீங்கள்?” என்கிறாள். “நான் உன் அப்பா” என்கிறான்.

பதிலுக்கு அப்பெண் “எந்த ஊர் அப்பா?” என்கிறாள். அரவம் கேட்டு வெற்றிலை குதப்பிக்கொண்டு எவனோ ஒரு செட்டி சாதம்மாவுடன் வெளியே வருகிறான்! பெற்ற மகளின் அந்த கேள்வியில் தான் எத்தனை குரூரம்!

ஜெயமோகன் இந்நாவலைப் பற்றிய தனது விமர்ரிசனத்தில் நஞ்சம்மா எப்படி ராமாயண சீதையின் பிரதியாக வார்க்கப்பட்டிருக்கிறாள் என்பதை விளக்குகிறார். பொறுமையும் கருணையும், அன்பும் பொதிந்த பெண்ணுக்கான தேடல் எங்கோ நாம் அறிய முடியா ஆழத்தில்



உயிர்த்திருக்கிறது.

நஞ்சம்மாவைக் கடந்து செல்லும் வாசகர்கள் எவரும் அவருடைய மகத்தான சித்தரிப்பை மறக்க முடியாது. இந்நாவலின் பெண் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் தனித்துவமானவை.

எழுதப்பட்டு பலகாலத்திற்கு பின்னர் இன்று அது ஒரு பெண்ணிய பிரதியாக நிலைபெற்றிருக்கிறது என்கிறார் ஜெயமோகன். மனிதர்கள் மனிதர்களை கொன்றொழிப்பது எத்தனை விசித்திரமோ அப்படி பெண்ணின் இழிநிலைக்கு அவள் காரணமாவதும் பெரும் விசித்திரம்தான். அன்பும், தாய்மையும், கருணையும், புத்திசாலித் தனமும் ததும்பும் நஞ்சம்மா ஒரு முனை என்றால் மறுமுனையில் குரோதமும் முட்டாள்தனமும் நிரம்பிய கங்கம்மா. கங்கம்மா மீது எரிச்சலும் கோபமும் வந்தாலும் கூட, உண்மையில் கங்கம்மாவிற்காக பரிதாபப்படத்தான் தோன்றுகிறது. கங்கம்மா தன் பிள்ளைகளின் மீதான பேரன்பையும்கூட வன்மமாகத்தான் வெளிப்படுத்துகிறாள். சிக்கலான மானுட உறவுகளில் தூய அன்பு என்பது வெறும் கற்பிதம்தான், இங்கு அன்னையின் அன்பும்கூட அகங்காரத்துடன் பின்னிப்பிணைந்துதான் கிடைக்கிறது. அப்படிப்பட்ட தூய அன்பை உணரவும், அளிக்கவும்கூட சிறிய விலகல் தேவைப்படுகிறது.

கணவனைக் கண்கொண்டு கூட பார்க்காத சிறு பெண்ணாக நஞ்சம்மா அறிமுகம் ஆகிறாள். சொற்களால் கிழிபடுகிறாள். மைத்துனனிடம் மிதிபடுகிறாள். மெல்ல தன் குடும்பத்தின் நிலையை உணர்ந்து அதை மீட்க தனியொரு பெண்ணாக போராடுகிறாள். கைநோக இலை தைக்கிறாள், கணக்கெழுதுகிறாள், இரவு பள்ளிக்கூடத்தில் பெண்களுக்கு பாடம் எடுக்கிறாள், நிதிநிர்வாகம் செய்து பிள்ளைகளைப் படிக்க வைக்கிறாள், தன் பெண் பார்வதிக்கு நல்லவிதமாக திருமணம் செய்விக்கிறாள், கையிருப்பைக் கொண்டு தனக்கென ஒரு வீட்டைக் கட்டிக்கொள்ள முயல்கிறாள். இறுதியில் பிளேக் பீடிக்கப்பட்டு இறக்கும் தறுவாயில் தன் அண்ணன் வீட்டில் தங்கியிருக்கும் எஞ்சிய பிள்ளை விசுவன் பெயரை அரற்றுகிறாள். மாதேவையா அவனை அழைத்துவர யத்தனிக்கும்போது, வேண்டாம் என்று மறுக்கிறாள்.

நஞ்சம்மாவின் சித்திரம் இந்திய குடும்ப அமைப்பு சார்ந்து மிக முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது. இயல்பிலேயே அதன் உள்ளீடாக வன்முறை உள்ளதா? பொதுவாக மேற்கிற்கும் கிழக்கிற்கும் உள்ள மிக முக்கியமான வேறுபாடு சுயம் சார்ந்தது என்று எனக்குத் தோன்றும். நவீனத்துவம் தனிமனிதனை எல்லாவற்றிற்கும் மையமாகக் கொண்டு வைக்கிறது. அவனுடைய தேவைகள், கனவுகள், ஆசைகளையும் அதனால் விளையும் அக நெருக்கடிகளையும் விவாதிக்கிறது. குடும்ப அமைப்பும் அதன் நீட்சியாகவே இருக்கிறது. இந்தியாவில் சுய மறுப்பும், தியாகமும் முக்கியமாக கருதப்பட்டன. தனி மனிதனைக் காட்டிலும் குடும்பத்திற்கு அதிக முக்கியத்துவம் என்பது இந்திய மனதிற்கு இயல்பான ஒன்றாகவே இருந்து வருகிறது, ஆயினும் இங்கு யாவரும் கர்ம யோகிகள் அல்லவே! இவை எந்த புள்ளியில் உழைப்புச் சுரண்டலாக மாறுகிறது என்பதே கேள்வி. சில ஆதார நம்பிக்கைகள் மீது கேள்விகளை எழுப்புகிறது இந்நாவல்.

இந்நாவல் எழுப்பும் ஆதாரமான கேள்வி என்பதை நான் இப்படித்தான் வகுத்துக்கொள்வேன் “நல்லவர்களுக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது?” நரசி நஞ்சம்மா குறித்து மாதேவையாவிடம் எழுப்பும் கேள்வி இது. வாழ்வின் வெவ்வேறு காலச்சுழலில் நம்மில் முளைத்தெழும் கேள்வியும்தான், நல்லவர் யார், அல்லாதவர் யார்? செயலின் நன்மை தீமைகளை வரையறை செய்வதும் அப்படியொன்றும் சுலபமல்ல. மறுபிறப்பும் ஆன்மாவும் கடவுளும் ஆதி பாவமும் கர்மச் சுழற்சியும் இன்னும் வெவ்வேறு மதங்களின் ஆதார மெய்யியல்கள் எல்லாமும் இக்கேள்வியின் மீது தங்கள் தர்க்க திரைகளை போர்த்தி, தற்காலிகமாகவேனும் மனிதனின் தன்னிருப்பை அர்த்தப்படுத்திக்கொள்ள முயல்கின்றன. ஆனால் எல்லாவற்றையும் மீறி அர்த்தமின்மையும் வாழ்வின் அபத்தமும் அப்பட்டமாக துருத்திக்கொண்டு வெட்டவெளியில் நிற்கத்தான் செய்கிறது.

- நரோபா -




# மாவீரன் நெப்போலியன் வாழ்கையில் நடந்தவை



மாவீரன் நெப்போலியன் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி 1769 ஆம் ஆண்டு கோர்ச்சிக்கா எனும் இடத்தில் பிறந்தார். இவரது தந்தை கார்லோ பொனபார்ட், இவரது தாயார் லெற்றீசியா ரமூளினு ஆவார். 1799 ஆம் ஆண்டில் ஒரு சதிப்புரட்சியை நிகழ்த்தி அதன்மூலம் பிரேஞ்சுக் குடியரசின் முதல் கன்சல் ஆகப் பதவியில் அமர்ந்தான்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர், பிரான்சின் பேரரசனானான். 19 ஆம் நூற்றாண்டின் முதற் பத்தாண்டுகளில் ஐரோப்பாவின் ஒவ்வொரு முக்கிய நாட்டுக்கு எதிராகவும் படை எடுத்தான். தொடர்ச்சியான பல போர் வெற்றிகளினாலும், விரிவான கூட்டணிகளினாலும் அவன் ஐரோப்பாக் கண்டத்தையே தனது மேலாண்மைக்கு உட்படுத்தியிருந்தான்.

# டைனோசர்கள் அழிந்தது விண்கற்களாலா?



பூமியில் சுமார் 1300 வகையான ஊர்வன இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான், டைனோசர். ஒரு காலத்தில் இது பூமியின் முக்கிய உயிரினமாகத் திகழ்ந்தது. இவ்வளவு பெரிய உயிரினம் எப்படி அழிந்து போனது என்பது இன்றைக்கும் புதிராக உள்ளது.

ஏறக்குறைய 650 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் பூமியில் உலவித் திரிந்திருக்கின்றன டைனோசர்கள். அப்போது இவை தான் பூமியின் மிகப் பெரிய உயிரினம். மிக அதிகமான எடை, மாறிவந்த காலச்சூழலால் டைனோசர்கள் மடிந்திருக்கலாம் என்று ஒரு கருத்து கூறப்படுகிறது. ஆனால் 1980 இல் லூயிஸ் அல்வரேஸ் என்ற புவி ஆராய்ச்சியாளர் ஓர் ஆய்வு செய்தார். அதன்படி, 650 இலட்சம் ஆண்டுக ளுக்கு முன் உருவான நில அடுக்குகளில் "இரிடியம்" என்ற தனிமம் அதிகமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பசியின் காரணமாக பல மைல் தூரம் மலை ஏறியிருப்பதற்கான சான்றுகள் கிடைத்திருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறினர்.




உலகில் 23 கோடி ஆண்டுகளுக்கு முன்பு இருந்த உயிரினம் டைனோசர். 16 கோடி ஆண்டுகள் உயிர் வாழ்ந்த இந்த இனம் ஆறரை கோடி ஆண்டுகள் முன்பு அழிந்ததாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

உலகின் பல பகுதிகளிலும் நடக்கும் தொல்பொருள் ஆராய்ச்சிகளின் போது டைனோசர்களின் படிமங்கள், எலும்புகள், பற்கள் போன்றவை கிடைத்து வருகின்றன.

அமெரிக்காவின் உடா மாநில அருங்காட்சியகத்தில் டைனோசர்களின் பற்கள், எலும்புகள் போன்றவை வைக்கப்பட்டுள்ளன. சமீபத்திய ஆய்வின்போது கிடைத்த பற்களின் படங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

# முதல் சூப்பர் ஸ்டார் ?




தமிழ் திரையுலகின் "முதல் சூப்பர் ஸ்டார்" என, வர்ணிக்கப்படும் எம்.கே. தியாகராஜ பாகவதர் நினைவு நாளை அனுசரிக்க திரையுலகினர் யாரும் வராதது, அவரது குடும்பத்தாருக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருச்சி, பாலக்கரை, எடத்தெரு, கான்மியான் மேட்டுத்தெருவில் வசித்த கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியார் - மாணிக்கத்தம்மாள் தம்பதிக்கு, 1910 மார்ச் 1 ஆம் திகதி எம்.கே.தியாகராஜ பாகவதர் பிறந்தார். அப்பகுதியில் உள்ள ஜெபமாலை மாதா துவக்கப்பள்ளியில், 5 ஆம் வகுப்பு வரை படித்த அவர், நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார். பின்னர், 1934 ஆம் ஆண்டு பவளக்கொடி என்னும் திரைப்படம் மூலம் தமிழ் திரையுலகில் காலடி எடுத்து வைத்தார். நவீன சாரங்கதாரா, அம்பிகாபதி, திருநீலகண்டர், சிவகவி, ஹரிதாஸ், அசோக்குமார், ராஜமுக்தி உட்பட, 14 படங்களில் நடித்து பிரபலமானார்.

இன்றைய காலகட்டத்தில் ஒரு படம் 10 நாட்கள் தியேட்டரின் முழு கொள்ளளவுடன் ஓடினாலே வெற்றிப் படம் எனக் கூறி வரும் நிலையில் தமிழ் திரையுலகின் முதல் சூப்பர் ஸ்டார் என்றும் வர்ணிக்கப்படும் தியாகராஜ பாகவதர் நடித்த, ஹரிதாஸ் என்ற படம் 4 தீபாவளிக்களையும் தாண்டி தியேட்டர்களில் வெற்றிகரமாக ஓடி சாதனை படைத்தது. இதன் மூலம் புகழின் உச் சிக்கே சென்ற தியாகராஜ பாகவதர், உடல் நலக்குறை வால், 1959 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் திகதி இறந்தார்.

திருச்சியின் மற்றொரு மைந்தனாக திரையுலகில் வலம் வந்த எம்.ஆர்.ராதா ஏற்பாட்டில், தியாகராஜ பாகவதர் உடல் திருச்சிக்குக் கொண்டு வரப்பட்டு, மக்க ளின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. அதன்பின், ஆயிரக் கணக்கானோர் பங்கேற்ற ஊர்வலத்துடன் அவரது உடல் எடுத்துச்செல்லப்பட்டு திருச்சி சங்கிலியாண்ட் புரம் மணல்வாரித்துறை ரோடு அருகேயுள்ள சுடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டது.

# ரத்மலனையில் ஓர் அற்புத திருநந்தீஸ்வரம்!

இரத்மலானையிலிருந்து கடற்கரையோரமாக சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது திருநந்தீஸ்வரம் ஆலயம். இலங்கையின் பெரும்பாலானோர், இவ்வாறானதொரு ஆலயம் இருப்பதாக அறிந்திருக்க வாய்ப்பில்லை. மிகப் பழைமை வரலாறு கொண்ட இந்த ஆலயத்தின் சுவடுகள் இன்னமும் அழியாமல் இருப்பது இறைசக்தி என்றே கணிப்பிட முடியும். திருநந்தீஸ்வரம் ஆலயம் பற்றி முழுமையாக அறிந்து கொள்வதற்காக அங்கு சென்றோம்.

பெரும்பாலான சிங்கள மக்கள் செறிந்துவாழும் அப்பகுதியிலுள்ள இந்த ஆலயத்தை "கொனா கோவிலய நந்திக் கோவில்" என்றே அப்பகுதி மக்கள் அழைக்கிறார்கள்.வித்தியாசமான அமைதி பொருந்திய இடமாக கோவில் வளாகம் இருக்கிறது. சுமார் 1000 வருடங்கள் பழைமையான ஆலமரம் இன்னும் கோயிலுக்குச் சான்றாக விளங்குகிறது.போர்த்துக்கேயர் காலத்தில் கொழும்பு மற்றும் அதனை அண்டி வாழ்ந்த இந்துக்களின் பிரதான வழிபாட்டுத் தலமாக இந்த ஆலயம் விளங்கி வந்துள்ளது.

## திருக்கோணேஸ்வரர் ஆலயம்

அமைவிடம் :- திருகோணமலை
இறைவன் திருப்பெயர் : திருக்கோணேஸ்வரர்
இறைவி திருப்பெயர் : மாதுமையாள்
தல மரம் : கல்லால மரம்
தீர்த்தம் : பாவநாசம்
வழிபட்டோர் : இராவணன், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் மற்றும் தமிழர்
தேவாரப் பாடல்கள் : சம்பந்தர்

**தல வரலாறு**

இக்கோவிலின் வரலாறு 3287 ஆண்டு பழமை வாய்ந்ததாகும். இதற்கு திரிகூடம் என்றும் பெயருண்டு. சுவாமிக்கு விளக்கேற்றுவதற்குப் போதியளவு நெய்யும் திரியும் கிடைப்பதற்கு வழிவகுத்தவர்கள், தாமரைத் தண்டின் நூலெடுத்து திரிசெய்தார்கள் அந்த ஊர் இன்றும் "திரிதாய்" என்று வழங்குகின்றது.

போர்த்துக் கேயர் 1624 ஆம் ஆண்டில் இத்திருக்கோவிலை பாழ்செய்துள்ளனர். அன்று அருணகிரிநாதர் மனமுருகிக்கண்ட தலத்தாறு கோபுரத்தழகைப் பறங்கியர்களின் தளபதியும் பார்த்துருகியுள்ளான்.

அவன் தன் படையில் ஓவியம் வல்லானைக் கொண்டு அவற்றின் அழகை ஓரளவு வரைந்து எடுத்துக்கொண்ட பின்பே கோவிலைத் தரைமட்டமாக்க உத்தரவு பிறப்பித்தான்.

# மீட்பர் யேசு சிலை நிறுவி எண்பது ஆண்டுகள்



பிரேசில் நாட்டின் மிகவும் அறியப்பட்ட மீட்பர் யேசுவின் சிலை அமைக்கப்பட்டு 80 ஆண்டுகள் ஆகின்றன. ரியோ டி ஜெனிரோவிலுள்ள இந்தச் சிலையின் 80 ஆண்டுகளைக் குறிக்கும் நோக்கில், அது அமைந்துள்ள கொக்கோவடா மலைக்குன்றில் சிறப்பு பிரார்த்தனைகள் இடம்பெற்றுள்ளன.

குவானபரா வளைகுடாவைப் பார்த்தவாறு அமைக்கப்பட்டுள்ள மீட்பர் யேசுவின் சிலை பிரேசிலின் மிகவும் அறியப்பட்ட ஒரு இடமாகத் திகழ்கிறது. உலகெங்கிலிருந்தும் ஒவ்வொரு ஆண்டும் மீட்பர் யேசு வின் சிலையை தரிசிக்க சுமார் இருபது இலட்சம் மக்கள் வருகிறார்கள். பதினைந்து மாடிகள் அளவுக்கு உயரமான இந்த யேசுபிரானின் திருவுருவச் சிலை, ரியோ டி ஜெனிரோவிலுள்ள கொக்கோவ்டா மலைக் குன்றின் உச்சியில் 1931 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி நிறுவப்பட்டது முதல் மக்களால் தரிசிக்கப்பட்டு வருகிறது.

அந்தச் சிலைக்குள் சென்று பார்ப்பதற்கு பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை என்றாலும், அதன் அடிவாரத்திலிருந்து பார்த்தால் உலகின் மிக அழகான நகரங்களில் ஒன்று எனக் கருதப்படும் ரியோ டி ஜெனிரோவின் முழுப் பார்வையும் தெரியும்.

# மக்களின் பௌதீக தேவைகள் பூர்த்தியாவது அவசியமானதாகும்

## உதயன் எம்.பி.தெரிவிப்பு



மக்களின் பௌதீக தேவைகள் உட்பட வாழ்வாதார தொழிலகள், கல்வி மற்றும் துறைசார் செயற்பாடுகள் அனைத்தையும் கட்டியெழுப்ப வேண்டியவர்களாக நாம் உள்ளோம் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

மருந்தங்கேணி பிரதேச இளைஞர் கழக சம்மேளன வருடாந்த இளைஞர் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

மருதங்கேணி பிரதேசமானது கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் மற்றும் சுனாமி அனர்த்தம் போன்றவற்றினால் மக்களுடைய பொருளாதாரத்திலும் அடிப்படை வசதிகள், கல்வி மற்றும் விளையாட்டு போன்றவற்றிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது எவ்வாறாயினும் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் என்று பின்தள்ளப்பட்டவையாக இருந்துவிட முடியாது.

நாம் கடந்து வந்த பாதைகள் வலிகளையும் சுமைகளையும் தாங்கியவையாக இருந்தாலும் தற்கால சிறார்களை கல்வியறிவிலும் துறைசார் ரீதியான செயற்பாடுகளிலும் வளர்த்தெடுப்பதனூடாக எதிர்காலத்தில் பிள்ளைகளின் வாழ்க்கை நிலை ஒளிமயமாக மாற்றமடையும். அத்துடன் இளைஞர் சக்தி ஓர் நாட்டின் இன்றியமையாததாக அமைகிறது எனவே அவர்களின் உழைப்புக்களை யாரும் தமது நலன்களிற்காக சுரண்டி விட இடமளிக்காத வகையில் எமது பிரதேசங்களின் முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கும் எதிர்காலச்சந்ததிக்கு முன்னுதாரணமாகவும் இளைஞர் சக்தியானது செயற்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார். இவ்வாறான இளைஞர் கழகங்கள் மற்றும் இளைஞர் கழக சம்மேளனங்களின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு என்றும் உறவுக்கரம் கொடுப்போம் எனத்தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவருமான ஜ.ரங்கேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் பூ.சஞ்ஜீவன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப்பணிப்பாளர் ஜ.தபேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காலநிலை மாற்றத்தை அறியும் தரவுநிலையம் குடாநாட்டில் இல்லை

காலநிலை மாற்றத்தை எதிர்வு கொள்ளக்கூடிய தரவு நிலையம் யாழ்ப்பாணத்தில் இல்லை. அதனால் எதிர்கால அபாயங்களை அறிந்து கொள்ள முடியாத நிலை உள்ளது என யாழ். பல்கலைக்கழக விவசாயபீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. துஸ்யந்தினி மிகுந்தன்.தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற காலநிலை தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"கடந்த பல வருடங்களுக்கு முன்னர் குடாநாட்டில் தீவகப் பகுதிகளில் கூட காலநிலை அவதானிப்பு நிலையங்கள் இருந்தன. ஆனால் தற்போது திருநெல்வேலியில் மட்டும் ஒரு நிலையம் உள்ளது. ஆனால் தரவுகளை அறிந்து கொள்ளக்கூடிய நிலையம் யாழ்ப்பாணத்தில் இல்லை. இதன்காரணமாக காலநிலைகளை எதிர்வு கொள்ள முடியாத நிலையில் உள்ளோம். அதனால் பெரும் விளைவுகள் ஏற்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (63)


# மின்கம்பத்துடன் மோ.சைக்கிள் மோதியதில் ஒருவர் படுகாயம்

யாழ். இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரிக்கு முன்பாக மோட்டார் சைக்கிளொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியதில், கால்பந்தாட்ட வீரரான ந.சதீஸ்கரன் (வயது 27) என்பவர் படுகாயமடைந்து கோமா நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்

இவர் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகத்தின் முன்னணி கால்பந்தாட்ட வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இவ்விபத்தில் படுகாயமடைந்த இவர் உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கோமா நிலையிலுள்ள இவரை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டுசெல்வதற்கான முயற்சிகளை கால்பந்தாட்ட அணிவீரர்கள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (48)



கடவுளிடம் சில கேள்விகள் நூல் வெளியீட்டு விழாவின்போது நூலின் முதற்பிரதியினை சட்டத்தரணி கங்காதரனிடமிருந்து பிரபல வர்த்தகர் சுரேந்திரன் பெற்றுக் கொள்வதைக் காணலாம்.

# பதிவிருக்கப் பெட்டகம்

பதினெட்டு வயதில் துருக்கி மொழியில் சில கவிதைகள் எழுதி பிரசுரமும் ஆகியிருக்கின்றன. அதன்பின் விட்டுவிட்டேன். இதற்கு என் விளக்கம் என்னவென்றால் கவிஞன் என்பவன் மூலமாகத்தான் கடவுள் பேசுவதாக நினைக்கிறேன். கவிதையால் நீங்கள் பீடிக்கப்பட வேண்டும். கவிதை எழுத நானும் முயற்சித்தேன். ஆனால் கொஞ்ச காலம் கழித்து கடவுள் என்னிடம் பேசுவதில்லை எனக் கண்டு கொண்டேன். இது எனக்கு வருத்தமாக இருந்தது. அதன்பின், கடவுள் என் மூலமாகப் பேசுவதாக இருந்தால் அவர் என்ன பேசுவார்? என்று கற்பனை செய்ய முயற்சித்தேன். அது உரைநடை எழுத்தாக, புனைகதை எழுத்தாக இருந்தது. எனவே ஒரு குமாஸ்தாவைப் போல நான் பணியாற்றத் தொடங்கினேன். மற்ற எழுத்தாளர்கள் நான் இப்படிக் கூறுவது ஓர் அவமதிப்பாக நினைக்கலாம். ஆனால் இதை நான் ஒப்புக் கொள்கிறேன். நான் ஒரு குமாஸ்தாவைப் போல உழைக்கிறேன். கவிஞனைப் போலல்லாமல் நாவலாசிரியனுடையது ஒரு குமாஸ்தா பணியைப் போன்றது என்பதை அடிக்கோடிட்டுச் சொல்கிறேன். நாவலாசிரியன் ஓர் எறும்பைப்போல நெடுந்தூரத்தை அவனது பொறுமையால் மெதுவாகக் கடக்கிறான். ஒரு நாவலாசிரியனின் அருளிப்பாட்டினாலும் கற்பனாவாதப் பார்வையிலும் நம்மைக் கவர்வதில்லை; அவன் பொறுமையினால்தான். **– ஓரான் பாமுக்**

இன்றைக்குத் தமிழில் ஒரு பதிப்பாளர் வெளியிடவே அஞ்சும் நூல்கள் என்னவாக இருக்கும்? சந்தேகமே வேண்டாம், கவிதைக்குத்தான் அந்த இடம். கடினமான மொழிநடையுடன் சித்தாந்த அடிப்படையிலான விவாதங்களைக் கொண்ட தலையணை அளவுக்கான ஒரு மொழிபெயர்ப்பை வெளியிடக்கூட பதிப்பாளர்கள் தயங்க மாட்டார்கள். கவிதை நூல்கள் அவ்வளவு அச்சுறுத்துகின்றன.

ஏன்?

ஒரு வார்த்தை பதில்: விற்பதில்லை. ஆச்சரியம் என்னவென்றால், எல்லாவற்றையும் தாண்டி, கவிதைப் புத்தகங்கள் கடல் அலைபோல வந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அவை பதிப்பிக்கப்படும் பிரதிகளின் எண்ணிக்கையும் விற்பனையாகும் பிரதிகளின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்திருக்கின்றன. விற்பனை மதிப்பு இல்லாத ஒரு படைப்பாளிக்கு என்ன மதிப்பு இருக்கும்? "உன்னை எல்லாம் மதித்து ஒரு கவிதைப் புத்தகம் போடுவதே உன் கவிதைகளுக்குச் செய்யும் பெரிய மரியாதை" என்ற தொனி பதிப்பாளர்களிடம் வந்துவிடுவதால், தங்கள் புத்தகங்கள் வெளியிடப்பட்டாலே போதும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுகிறார்கள் கவிஞர்கள். இந்த நிலையில், புத்தகத் தயாரிப்பு, காப்புரிமைத் தொகை எல்லாம்பற்றிப் பேசுவதற்கான வேலையே இல்லை.

இப்படி 'கருணை நோக்கில்' போடப்படும் கவிதைப் புத்தகங்களை எல்லாம் சேர்த்து ஒரு நாள் நடத்துகிறார்களே வெளியீட்டு விழா அத்தோடு முடிந்தது அந்தக் கவிஞருக்கும் அவருடைய கவிதைகளுக்குமான தொடர்பு.

இதையெல்லாம் பார்க்கும்போது, கவிதைக்கு இந்தச் சமூகத்தில் என்ன இடம் இருக்கிறது என்ற கேள்வியே எழுகிறது. கொஞ்சம் யோசித்துப் பார்த்தோம் என்றால், நம் தொன்மை, பண்பாடு எல்லாவற்றையும் குறித்து நாம் பெருமை கொள்வதற்குக் காரணமே கவிதைகள்தான். ஆனால், இப்போதோ கவிதைக்கே தொடர்பற்றதுபோல் இந்தச் சமூகம் ஆகிவிட்டது.

ஒரு கவிஞன் என்பவன் சமூகத்தின் விளைபொருள் ஒரு நல்ல கவிதைக்குக் கிடைக்கும் வரவேற்பு ஒரு சமூகத்தின் நுண்ணுணர்வுக்கான அளவுகோல். காலங்காலமாகக் கவிதை பாடிக்கொண்டிருந்த இந்தச் சமூகத்துக்கு என்னவாயிற்று? இதன் மூலம் இந்தச் சமூகம் சொல்லும் செய்திதான் என்ன? **– சங்கர்ராமசுப்ரமணியன்**

மனதை, சூழலை, வாழ்வை, இயற்கையை, மனித உணர்வை, அறத்தை, மொழியை, படைப்பின் நுட்பத்தை எல்லாம் கற்றுத் தரும், பழக்க உதவும் கவிதையைத் தீண்டாமல் ஒதுங்கிக் கொள்வதே இங்கு நடக்கிறது. மனம் பழுதாகிய ஒரு சமூகத்தினால் ஆரோக்கியமாக வாழ முடியாது. கவிதை கதவுகளைத் திறந்து ஒளி பாய்ச்சுகிறது. அதனுடன் இணைவோருக்கு அது சிறகுகளைப் பரிசளிக்கிறது. வாழ்வின் நுட்பங்களையும் ரகசியத்தையும் அற்புதத்தையும் நம்பிக்கையையும் பரிமளிப்பையும் வழங்குகிறது. உளநிலையைச் சமனிலைப்படுத்துகிறது. மொழியை வளப்படுத்துகிறது. பண்பாட்டின் வேர்களைப் புத்தோட்டமுறச் செய்கிறது. குருத்தெறிந்து மரம் சிலிர்த்தெழுவதைப்போல பழக்கும் மனதையும் கவிதைச் செயலாற்றும் மனதையும் புத்தூக்கத்தில் லயிக்க வைக்கிறது. எனவேதான் கவிதையைக் குறித்து நாம் பேசவேண்டியுள்ளது. கவிதையைக் குறித்துப் பேசாத சமூகத்தைக் கோவிக்க வேண்டியிருக்கிறது. **– கருணாகரன்**

# பொதுநூலகத்திற்கு நூல்கள் அன்பளிப்பு




(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக்கழக வரலாற்று விரிவுரையாளர் திருமதி லெஸ்லி குணவர்த்தன யாழ்.பொது நூலகத்தின் பயன்பாட்டுக்கென ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

நேற்று யாழ்.பொதுநூலகத்தில் வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி நூல்களை யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்களிடம் கையளித்தார்.

# கைத்தொழில் பேட்டைக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள கைத்தொழிற்பேட்டைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் விஜயமொன்றை மேற்கொண்டார்.

அங்கு இடம்பெற்று வரும் உட்கட்டுமாணப் பணிகளை ஆராய்ந்துள்ள அமைச்சர் கைத்தொழிற்பேட்டையின் நிலைப்பாடு தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இவ்வருடம் நாடளாவிய ரீதியில் அமையப் பெற்றுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டுமாணப் பணிகள் அமைச்சரின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சரணாலயத்தில் குடியேறியவர்களுக்கு மறுச்சுக்கட்டியில் காணிகள் வழங்கல்

(கொழும்பு)

வில்பத்து தேசிய சரணாலயத்தில் சட்டவிரோதமாக தங்கியுள்ள குடும்பங்களுக்கு மாற்றுக் காணிகள்

வில்பத்து தேசிய சரணாலயத்தின் வனப் பகுதியில் சட்டவிரோதமாக தங்கியுள்ளவர்களுக்கு மன்னார் மறிச்சுக்கட்டி பகுதியில் மாற்றுக் காணிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கமைய மறிச்சுகட்டி பகுதியிலுள்ள 40 ஏக்கர் நிலப்பரப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை. தேசபிரிய தெரிவித்துள்ளார்.

வில்பத்து சரணாலயத்தில் சட்டவிரோதமாக தங்கியுள்ள 73 குடும்பங்கள் குறித்த காணியில் மீள் குடியேற்றுவதற்காக, தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வில்பத்து தேசிய சரணாலயத்தை அண்மித்த பகுதிகளில் சட்டவிரோதமாக தங்கியுள்ள ஏனைய குடும்பங்களுக்கும் மாற்றுக் காணிகளை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பதிவுகளும் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

# பாடசாலை மாணவர்களுக்கு வெடிபொருள் விழிப்புணர்வு

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு வெடிபொருட்கள் தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த சனிக்கிழமை இரணைமடு இராணுவ முகாமில் நடைபெற்றது.

கிளிநொச்சி இராணுவத்தினர் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் கிளிநொச்சி பிரதேச பாடசாலைகளைச் சேர்ந்த 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களுக்கு வெடிபொருட்கள் தொடர்பில்ான விழிப்புணர்வு மற்றும் வெடிபொருட்களிலிருந்து எவ்வாறு தங்களைப் பாதுகாத்துக் கொள்வது போன்ற விடயங்கள் தொடர்பில் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

# 2014 முதல் காலாண்டில் இலங்கையில் 51 பேருக்கு எயிட்ஸ்




(கொழும்பு)

இந்த வருடத்தில் முதல் காலாண்டு பகுதியில் எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளான 51 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தொடர்பான கட்டுப்பாட்டு நிலையம் வெளியிட்டுள்ளது.

கடந்த வருடத்தில் குறித்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மேலதிகமான 7 பேர் இந்த தொற்றுக்கு இலக்காகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இதேவேளை கடந்த வருடம் 6 இலட்சம் பேர் எயிட்ஸ் தொடர்பான சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக இந்த அமைப்பின் இயக்குநர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் இன்று வரையில் 70 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இந்தச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் 1996 பேர் இதுவரையில் எச் ஐ வி தொற்றுக்கு உள்ளானவர்கள் என இனங்காணப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்தத் தொகை மேலும் அதிக அளவில காணப்படலாம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# உள்ளூர் துப்பாக்கி வைத்திருந்தவர் கைது

இலங்கையில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றை தன்வசம் வைத்திருந்த ஒருவர் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளது.

சந்தேகம் ஏற்படும்படி நடந்து கொண்ட நபரை சோதனையிட்ட களுவாஞ்சிக்குடி பொலிஸார, சந்தேக நபர் துப்பாக்கியை பையொன்றில் மறைத்து வைத்திருந்த நிலையில், கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர் அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர்.நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் இந்த சந்தேக நபர் களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளார்.

# கிழக்கு பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் ஆரம்பம்




கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த கல்வி நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

கிழக்கு பல்கலைக்கழக வந்தாறுமூளை வளாகத்தின் முதலாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

என பல்கலைகழக உபவேந்தர் கிட்ணர் கோபிந்தராஜா தெரிவித்துள்ளார். விசேட கற்கை நெறியில் கல்வி பயிலும் கலை மற்றும் விஞ்ஞான பிரிவின் மூன்றாம் வருட மாணவர்களுக்கா[illegible] காலவி கல்வி நடவடிக்கை[illegible]ளும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றார.

மாணவர்களிடையே கடந்த மாதம் ஏற்பட்ட மோதலை அடுத்து ,பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் காலவரையறையின்றி இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வழுக்கிவிழுந்த யாத்திரிகர்கள் ஒருவர் பலி, மூவர் காயம்

சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற நான்கு பேரும பாதையிலிருந்து வழுக்கி விழுந்ததில், ஒருவர் உயிரிழந்து மூவர் காயமடைந்துள்ளனர்.

சிவனொளிபாதமலை கொளுதென்ன மற்றும் இதிகட்டுபான பகுதிகளுக்கு இடையில் நேற்று அதிகாலை 3 மணியளவில் பாதையிலிருந்து வழுக்கி விழுந்து நான்கு பேரும் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்தில் அம்பலாங்கொடையைச் சேர்ந்த 82 வயதான கே.டீ. உப்பதிஸ்ஸ என்பவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒருவர் டிக்கோயா வைத்தியசாலையிலிருந்து கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் மேலும் இருவர் டிக்கோயா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மரண விசாரணைக்காக உயிரிழந்தவரின் சடலம் மஸ்கெலியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை நல்லதண்ணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பூ[illegible]கரி வைத்தியசாலை திறப்பு விழா விரைவில்



(பூநகரி)

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பூநகரி வைத்தியசாலை வளாகத்திற்கு மண் இட்டு நிரப்பியவுடன் இவ் வைத்தியசாலை திறந்து வைக்கப்படுமென கிளிநொச்சி பிராந்திய சுகாதா சேவைப் பணிப்பாளர் ப.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

பூநகரி வைத்தியசாலையின் கட்டட நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. இருப்பினும், இவ் வைத்தியசாலை வளாகம் ஆழமான பகுதியாகக் காணப்படுவதால், அதற்கு மண் இட்டு நிரப்ப வேண்டியுள்ளது. இதற்கு 03 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகிறது. இப்பணி நிறைவுற்றதும் இவ்வைத்தியசாலை விரைவில் திறந்து வைக்கப்படும்.

இவ்வைத்தியசாலைக்கான புதிய கட்டடம் பூநகரி கணவாய்ப்பள்ளம் பகுதியில் 105 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்றார்.


பூநகரி பிரதேச வைத்தியசாலை கடந்த 2010ஆம் ஆண்டிலிருந்து பூநகரி வாடியடியிலுள்ள தனியார் ஒருவரின் வீட்டில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

23) கொழும்பு - யாழ்ப்பாணம் புகையிரதசேவையை மீள ஆரம்பிப்பதற்காக அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டம்
(1) தெற்கின் தோழன் (2) வடக்கின் தோழன்
(3) வடக்கின் வசந்தம் (4) தெற்கின் உறவுப்பாலம்

24) 
இலங்கையின் வரலாறு' முக்கியத்துவம் வாய்ந்த படம் தரப்பட்டுள்ளது
இதன் பெயர் என்ன?
(1) இசுறுமுனி காதலர் சிலை (2) லங்காதிலக
(3) சமாதிசிலை (4) அவுக்கணைச் சிலை

25) இலங்கையின் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள மாகாணம் எது?
(1) வடக்கு (2) கிழக்கு (3) தெற்கு (4) மேல்


26) இலங்கையில் முதன் முதலாக அமைக்கப்பட்ட நீர்மின் உற்பத்தி நிலையம் எது?
(1) கொத்மலை (2) லக்ஸபான (3) ரன்தனிக்கலை (4) விக்டோரியா

27) கீழே தரப்பட்ட மின் இணைப்பில் பிழையான இணைப்பு எது எனக் கண்டு கீறிடுக.



28) பின்வரும் தாவரங்களில் பூச்சியுண்ணித் தாவரம் அல்லாதது எது?
(1) துளசி (2) நெப்பந்திஸ்
(3) துரோசிரா (4) யூற்றிக்குளோரியா


29) இலங்கையின் தேசிய விளையாட்டில் இரு குழுவிலும் பங்கு பற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
(1) 6 (2) 22 (3) 12 (4) 14

30) கடலுடன் நேரடித் தொடர்பு அற்ற ஆனால் உப்பு நீரைக் கொண்ட பகுதி எவ்வாறு அழைக்கப்படும்.
(1) கழிமுகம் (2) களப்பு (3) குடா (4) முனை

31) 
அருகிலே தரப்பட்ட இலைக்குப் பொறுப்பான தாவரம் எது?
(1) வேப்பு (2) கறி வேப்பிலை
(3) மா (4) திராட்சை

32) இருளை நாடிவரும் பிராணி பின்வருவனவற்றுள் எது?
(1) குளவி (2) தேனீ (3) கரப்பான் பூச்சி (4) வெட்டுக்கிளி

33) தனது வாழ்க்கை வட்டத்தில் நீரில் முட்டை இட்டு இனப் பெருக்கம் செய்யாதது
(1) தவளை (2) நுளம்பு (3) முதலை (4) தேரை

34) 
அருகிலே தரப்பட்ட இலட்சினை எதனை வெளிக்காட்டுகிறது.
(1) மின் விநியோக நிலையம்
(2) இலங்கை மின்சார சபை
(3) வீட்டு மின் விநியோகம்
(4) இலங்கை தொலைத்தொடர்பு

**இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1 மணி 15 நிமி

## கல்வி முரசு



01) பின்வரும் விளம்பரத்தைப் படித்து கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

> சிறுவர்களே வாங்கிவிட்டீர்களா?
> ''அரும்புகள்''
> சிறுவர்களுக்கான வண்ண வண்ண விதத்தில்
> வெளிவரும்
> தமிழ் சஞ்சிகை
>
> இவ்வார இதழில்
> இணையத்தளத்தின் புதிய இரகசியம்
> சிந்திக்கத் தூண்டும்
> ✓ சித்தனைக்கு அறிவூட்டும் கதைகள்
> ✓ மனதிற்கினிமையான நகைச்சுவைக்கதைகள்
> ✓ புதிய புதிர்க் கதைகள்
>
> வியப்பூட்டும் வனாந்திர உயிரினங்கள்
> விளையாட்டு இரகசியங்கள்
> விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புகளும்
> அறிவின் பயணம் - பரிசுப் போட்டி
>
> இன்னும் பல்சுவையான அம்சங்களுடன்
> அறிவைத்தூண்டும் விதத்தில்
> வெளிவந்துள்ளது
> உடனே வாங்குங்கள். படித்து பயன் பெறுங்கள்

(1) அரும்புகள் என்பதன் ஒத்த சொல் யாது? ..............................

(2) இச்சஞ்சிகை எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை வெளிவருகின்றது?
..............................

(3) அறிவூட்டும் என்பதை பிரித்து எழுதுக?
..............................

(4) இவ்விளம்பரத்தில் வந்துள்ள உயர்திணைப் பொதுப்பாற் சொற்களில் ஒன்றை எழுதுக?
..............................

(5) இதில் வந்துள்ள அடுக்குமொழியை எழுதுக? ..............................

02) அடைப்புக்குள் இருக்கும் சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.
(1) காட்டில் வாழ்வது புலி, கறிக்குச் சேர்ப்பது ---------------------------- (புளி / புழி)
(2) மழை தொடர்ந்து பெய்ததால் வீதியில் ------------------------காணப்பட்டது (வெல்லம் / வெள்ளம்)

03) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.
(1) ஐயா என்னுடைய பையைக் காணவில்லை என்று ராதா அழுதாள்
(2) நீ எங்கே சென்றாய்

04) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் அமைக்க.
(1) ஒரு / ஆண்டுகளுக்கு / ஒலிம்பிக் / நடைபெறும் / நான்கு / போட்டி / முறை
--------------------------------------------

05) பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.
(1) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்
--------------------------------------------
(2) ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமா?
--------------------------------------------

06) பின்வரும் தொடர்மொழிகளுக்கு ஒரு மொழி எழுதுக.
(1) ஆறு கடலுடன் கலக்குமிடம் ----------------------
(2) அனைத்து உடமைகளையும் இழந்தவன் ----------------------
(3) விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது ----------------------

07) (1) பின்வரும் ஆண்பால் வாக்கியத்தை பெண்பால் வாக்கியமாக மாற்றுக.
தந்தையும் மகனும், அருகில் உள்ள மாமாவின் வீட்டுக்குச் சென்றனர்.
--------------------------------------------
(2) பின்வரும் ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.
பட்டம் வானில் பறந்தது.
--------------------------------------------

08) பின்வரும் மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.
(1) தட்டிக் கொடுத்தல் ----------------------
(2) உச்சி குளிருதல் ----------------------

09) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கில சொற்களை ஆங்கில எழுத்தில் எழுதுக.
(1) காகம் ----------------------
(2) வங்கி ----------------------
(3) வீடு ----------------------

10) கருத்தை தமிழில் எழுதுக.
(1) what is the time? ----------------------
(2) Please hurry up ----------------------
(3) Please give me a pen? ----------------------

11) “ எனது ஊர் கொழும்பு” என்பதன் சிங்கள வடிவத்தை தமிழில் எழுதுக?




12) பின்வருவனவற்றுள் காய்களைக் கொடுக்காத பூ எது?
(1) மாம்பூ (2) செவ்வரத்தைப்பூ
(3) வெண்டிப் பூ (4) வேப்பம் பூ

13) வித்து முளைத்தலுக்குத் தேவையான காரணி யாது?
(1) வளி (2) ஒளி (3) வளமாக்கி (4) கொதிநீர்

14) பின்வருவனவற்றுள் கால்கள் அற்றவை எது?
(1) மண்புழு (2) மரஅட்டை (3) எறும்பு (4) நண்டு

15) 
இப்படத்தில் காணப்படும் குறியீடு பஸ்வண்டி ஆசனத்துக்கு அருகில் காணப்படுவது ஆகும். இதன் கருத்து யாது?
(1) மதகுருமாருக்கு ஒதுக்கப்பட்ட ஆசனம்
(2) பிள்ளைகளுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனம்
(3) மதத்தை விரும்புவோருக்கு ஒதுக்கப்பட்ட ஆசனம்
(4) வயது வந்த வருக்கு ஒதுக்கப்பட்ட ஆசனம்

16) பின்வருவனவற்றுள் கையடக்கத் தொலைபேசிகளில் அரசுடன் தொடர்புடைய தொலைத் தொடர்பு நிறுவனம் எது?
(1) எடிசலாத் (2) ஏயாரெல் (3) டயலோக் (4) மொபிடள்

17) உருவில் உள்ள பொலிஸ்காரரின் செய்கை எதனைக் குறிப்பிடுகிறது.

(1) பின்னாலிருந்து வரும் வாகனங்களை நிறுத்துங்கள்
(2) முன்னே வா[illegible]
(3) முன்னா[illegible]வும் இருந்து வரும் வாகனங்களை நிறுத்துங்கள்
(4) முன்னே மட்டும் வாருங்கள்

18) கிழங்குத் துண்டங்களை நடுவதன் மூலம் கன்றுகளைப் பெறக்கூடியவை அல்லாதது.
(1) இஞ்சி (2) உருளைக்கிழங்கு (3) வள்ளிக் கிழங்கு (4) மரவள்ளிக்கிழங்கு

19) இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தைக் குறிக்கும் ஆங்கில சுருக்கக் குறியீடு
(1) SLBC (2) SLRC (3) SLT (4) SLDF

20) ஆதி வாசிகளின் வீடுகளின் கூரை வேயப்பட்டிருப்பது
(1) வைக்கோல் (2) இலுக்கு (3) கிடுகு (4) கலப்பன்

21) 
அருகே உள்ள படத்தில் இலங்கையின் சுதந்திரத்திற்காகப்பாடுபட்ட தலைவரின் படம் காணப்படுகிறது இவரின் பெயர் என்ன?
(1) மொனராவில கப்பட்டிபொல திசாவை
(2) ஆதர் சி. கிளார்க்
(3) வண. எஸ். மகிந்த
(4) கொங்காலே கொட பண்டா

22) பயிர்களின் தளிர்களைச் சேதப்படுத்தும் பீடை எது?
(1) பச்சிலைப்பூச்சி (2) கபிலநிறத்தத்தி
(3) பழ ஈ (4) தண்டுப்பூச்சிகள்

# இந்திய நிறுவனங்களில் பயிற்சிபெற 190 அரச பணியாளர்களுக்கு வாய்ப்பு

## யாழ்.இந்திய துணைத்தூதுவர் தகவல்

**இலங்கையில் அரசதுறைப் பணியாளர்களில் 190 பேருக்கு இந்தியா பயிற்சி வசதிகளை வருடாந்தம் வழங்கிவருகின்றது. இதில் 20 இடங்கள் வடமாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இது வடக்கு மாகாண அதிகாரிகளின் பயிற்சிப் பங்கேற்புக்கு ஊக்கமளிப்பதாகவுள்ளது. என யாழ். இந்திய துணைத்தூதுவர் வி. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.**



யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் முதல் தடவையாக இந்திய தொழில் நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தினம் கடந்த சனிக்கிழமை தூதரக வளாகத்தில் நடைபெற்றது இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டமானது 50 வருடங்களின் முன்னர் 1964 ஆம் ஆண்டு மனித வள விருத்தியில் இந்தியாவின் இருவழி உதவித்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. அத்திட்டத்தின் மிக முக்கிய பங்காளியாகவும் கொழும்புத்திட்ட புலமைப் பரிசில் திட்டத்தினதும் பங்காளியாகவும் இலங்கை அமைகிறது.

இத்திட்டத்தில் வேறுபட்ட துறைகளாக தகவல் தொழில் நுட்பம், ஆங்கிலமொழி முகாமைத்துவம் கிராமிய அபிவிருத்தி நிதி, தொடர்பாடல் தொலையுணர்தல் போன்றவற்றில் ஆற்றல் விருத்தியையும் பயிற்சியையும் வழங்குகிறது. புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் பிரயாணம் பயிற்சி தங்குமிடம் ஆகிய அனைத்து வாழ்க்கைச்செலவுகளும் இந்திய அரசால் பொறுப்பேற்கப்படுகின்றது. அத்துடன் மாதாந்தம் வாழ்க்கைச்செலவுப் படியாக இந்திய ரூபா 2500 புத்தகக கொள்வனவுப்படி இந்திய ரூபா 5000 வரலாறு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கான கல்விச் சுற்றுலா செலவு மற்றும் மருத்துவ செலவு என்பன வழங்கப்படுகின்றன. இந்தியாவிலுள்ள 48 முன்னணி பயிற்சி நிறுவனங்கள் 280 குறுகிய, நடுத்தர, நீண்ட கால கற்கைகளை வழங்குகின்றன.

இதேபோல கல்வித்துறையில் 270 புலமைப்பரிசில்கள் இலங்கை மாணவருக்கு இந்தியாவில் கற்கவென வழங்கப்படும் அதேவேளை 350 புலமைப்பரிசில்கள் இலங்கை தோட்டத் தொழிலாளர் கல்வி நிதியத்தின் கீழ் வழங்கப்படுகின்றது இலங்கையில் கற்கும் 150 மாணவருக்கு மஹாத்மா காந்தி புலமைப பரிசில் வழங்கப்படுகின்றது.

இத் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் தமது க.பொ.த. உயர்தர கல்வியைப் பூர்த்தி செய்வதற்காக இரண்டு வருடத் தில் 48000 இலங்கை ரூபாவைப் பெறுவர்

வடக்கு மாகாண அலுவலர்களின பயிற்சிப் பங்கேற்பு அதிகரித்து வருவதாகவும் வடக்கு மாகாணத்துக்கென ஒதுக்கப்பட்ட அனைத்துப் பயிற்சி இடங்களும் இந்தவருடம் முழுமையாகப் பயன்படுத்தப்படும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# கவிதைப் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

கே.யு இலக்கிய மன்றம் கவிதைப் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடாத்தவுள்ளது.

"கவிதை பாடுவோம்" என்னும் தலைப்பில் இப் பட்டறை நிகழ்வு எதிர்வரும் 3ஆம் திகதி காலை 9 மணி முதல் இலக்கம் 626, 1/1 காங்கேசன் துறை வீதி என்னும் முகவரியில் இடம்பெறவுள்ளது.

கவிதை எழுதுவது எப்படி? என்று அறிந்து கொள்ள விரும்பும், மற்றும் தமது கவித்திறமையினை மேம்படுத்த விரும்பும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும இதில் கலந்து கொள்ள முடியும்.மரபுக் கவிதை மற்றும் புதுக்கவிதை என்பன முக்கிய பேசு பொருளாக உள்ளது. குறிப்பாக பாடசாலை மாணவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

இப் பயிற்சிப் பட்டறையில் வளவாளராக பருத்தித்துறைப் பிரதேச செயலர் கவிஞர் இ.த.ஜெயசீலன் கலந்து கொள்ளவுள்ளார். பதிவுகளுக்கும் மேலதிக தகவல்களிற்கும் 021 320 8342 என்னும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (48)

# லயன்ஸ் கழகங்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு

சர்வதேச லயன்ஸ் கழக மாவட்டம் 306 பி-Iஇன் வருடாந்த மாநாடும் சிறந்த லயன்ஸ் கழகங்களுக்கான விருது வழங்கும் விழாவும் எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இம் மாநாட்டில் சர்வதேச லயன்ஸ் கழக மாவட்டம் 306 பி-Iஇன் இரண்டாவது ஆளுநர் தெரிவுக்கான தேர்தலும நடைபெறவுள்ளது.

தேர்தலில் யாழ்.மாவட்டத்திலிருந்து கோப்பாய் லயன்ஸ கழக உறுப்பினரும் லயன்ஸ் கழக பிராந்திய ஆலோசகருடான லயன் டாக்டர் வி.தியாகராஜாவும் நீர்கொழும்பு மாவட்டத்திலிருந்து நீர் கொழும்பு லயன்ஸ் கழக உறுப்பினரும் வர்த்தகப் பிரமுகருமான லயன் எஸ்.தேவா பீற்றரும் போட்டியிடுகின்றனர்.

இத் தேர்தலில் கொழும்பு நீர் கொழும்பு, சிலாபம், புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, தீவகப் பகுதிகளைச சேர்ந்த 82 லயன்ஸ் கழகங்களின் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் வாக்களிக்கவுள்ளனர். (01)

# மேதினக் கூட்டம்

(மட்டக்களப்பு)

கல்முனை அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கமும் வடகிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனமும் ஒன்றிணைந்த ஏற்பாட்டில் மேதினக் கூட்டமும் நலன்புரி நிறுவனத்தின் 17 ஆவது கூட்டமும நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்முனை வை.எம்.சி.ஏ.அருகாமையிலுள்ள மெதடிஸ்த மண்டபத்தில் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெறவுளளது.


இக் கூட்டத்தில் அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகளையும் குறிப்பாக வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# இடமாற்றம்

யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையக் காரியாலயம் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் இல. 191/1 ஆம், குறுக்குத் தெரு வேம்படிச் சந்திக்கு அருகாமையில் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் புதிதாக இயங்கவுள்ளது.

முன்னர் இக் காரியாலயம் 17/3, கச்சேரி நல்லூர் வீதி சுண்டுக்குளி என்னும் முகவரியில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# விண்ணப்பம் கோரல்



(யாழ்ப்பாணம்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகுதியான இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

12 பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதுடன் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் அனுபவம் உள்ளடங்கலான சகல சான்றிதழ்களின் பிரதிகளுடன் சுயவிபரம் உள்ளடங்கலான விண்ணப்பத்தை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முதல் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு தலைவர் தேசிய சிறுவர பாதுகாப்பு அதிகார சபை 330 தலவத்துக்கொட வீதி மாதிவெல சிரி ஜயவர்த்தனபுர என்ற முகவரிக்கு அனுப்பி வைககுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

# சுருக்கெழுத்துக் கழகத்தால் இலவச கணனிப் பயிற்சி

(வடமராட்சி)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் பாடசாலையை விட்டு விலகிய வசதி குறைந்த இளைஞர், யுவதிகளுக்கான கணணி பயிற்சி நெறிவகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளதாக் கழகத்தின் தலைவர் வி.சிவச்சந்திர தேவன் அறிவித்துள்ளார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த இளைஞர், யுவதிகள் இக் கணனிப் பயிற்சி நெறிகளை மேற்கொள்ள முடியும் கணணி (Micro Soft Office) பயிற்சி நெறி கணணி தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்) பயிற்சி நெறிகளே எதிர்வரும் 1 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக் கணணிப் பயிற்சி நெறிகளை மேற்கொள்ள விரும்பும் இளைஞர் யுவதிகள் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் வதிரி கரவெட்டி என்ற விலாசத்துடன தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கணணி (Micro Soft Office) பயிற்சி நெறி திங்கள், வெள்ளிக்கிழமைகளிலும் ஏனைய பயிற்சிகள் வார நாட்களிலும் நடைபெறுமெனவும் கழகத் தலைவர் அறிவித்துள்ளார்.

# ஊதுபத்தி தொழில்நுட்ப பயிற்சி நெறி

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் ஊதுபத்தி தொழில் நுட்ப பயிற்சி நெறியொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுயதொழில் முயற்சியில் ஈடுபடும் நோக்கில் இளைஞர் யுவதியினர் இப்பயிற்சி நெறியைமேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)



**அச்சுவேலி வளலாய் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள பொது நோக்கு மண்டபமானது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் இன்னும் திறந்து வைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. (85)**

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இதில் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு "அன்புடைத் தோன்றல்" என்னும் விடயம் பற்றி சிவத்திரு வ.குமாரசாமி ஐயர் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................


பிறந்த ஆண்டு :- ..........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# சவுதியை அச்சுறுத்தும் மர்ம நோய் இதுவரை 102பேர் உயிரிழப்பு



பல ஆண்டுகளுக்கு முன்னர் ஆசியாவை அச்சுறுத்திய வைரஸ கிருமிக்கு இணையாக புதிய "மெர்ஸ்" கிருமியின் தாக்குதலால் மரணங்கள் ஏற்பட்டு வருகின்றன.

"மெர்ஸ்" கிருமியின் தாக்குதலால் பரவி வரும் மர்ம நோயானது, கடந்த 2012ஆம் ஆண்டு செபரெம்பர் மாதம் கண்டறியப்பட்டாலும் இதற்கான மாற்று மருந்தோ, தடுப்பு மருந்தோ இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.


நெதர்லாந்து நாட்டைச்சேர்ந்த மருத்துவ ஆய்வாளர்கள் "மெர்ஸ்" மர்ம நோய் தொடர்பாக நடாத்திய ஆராய்ச்சியில் ஓமான் நாட்டில் உள்ள சிலவகை ஒட்டகங்களின் மூலம் இந்நோய் பரவியிருக்கலாம் என்பது உறுதி செய்யப்பட்டது.

மத்தியக் கிழக்கு நாடுகளில் இந்த நோய் முதலில் காணப்பட்டதால் இதற்கு மெர்ஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது. சாதாரண சளியுடன் இணைந்த தொற்று வகையைச் சேர்ந்த இந்த நோய்த தொற்று ஏற்பட்டால் வெகுவிரைவில் சிறுநீரக இழப்பு ஏற்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மேலும் 5 மெர்ஸ் நோயாளிகள் பலியாகினர். அவர்களில் 2 பேர் சவுதி அரேபியாவைச்சேர்ந்தவர்கள், 2 பேர் பாலஸ்தீனியர்கள் மற்றும் ஒருவர் வங்காள தேசத்தை சேர்ந்த பெண் என்பது தெரியவந்தது.

உலகம் முழுவதும் சுமார் ஆயிரம் பேர் பலியான இந்த மர்ம நோய்க்கு நேற்று முன்தினம்வரை சவுதியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மட்டும் 102 ஆக உயர்ந்துள்ளது.

# இடைமறி ஏவுகணை சோதனை வெற்றி



நவீன இடைமறி ஏவுகணை பரிசோதனையை இந்தியா வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

ஓரிஷாவின் பாலசூரில் இருந்து 100 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வீலர் தீவில் நேற்றுக்காலை 9.10 மணியளவில் வான் நோக்கி செலுத்தி சோதனையை வெற்றிகரமாக முடித்துள்ளது.

குறித்த ஏவுகணைக்கு பிரித்திவி எயார் டிபென்ஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

கடற்படை விமானத்தில் இருந்து நேற்றுக் காலை 9.06 மணிக்கு எதிரி நாட்டு இலக்காக கருதப்படும் ஏவுகணை ஏவப்பட்டது. அதனைத் தொடர்ந்து ரேடார் மூலம் கிடைத்த சிக்னல்களைக் கொண்டு ஏவப்பட்ட வீலர் தீவில் இருந்து சென்ற நவீன ரக இடைமறி ஏவுகணை வெற்றிகரமாக இலக்கைத் தாக்கி அழித்ததாக இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போது சோதிக்கப்பட்ட இடைமறி ஏவுகணையின் இலக்குத் தூரம் 100 கிலோமீற்றருக்கு அதிகமானது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கொரியா கப்பல் விபத்து பதவி விலகினார் பிரதமர்

(சியோல்)

தென் கொரியாவில் மாணவர்களை ஏற்றிச் சென்ற கப்பல் விபத்துக்குள்ளானதற்கு பொறுப்பேற்று அந்நாட்டு பிரதமர் சுங் ஹாங் - வொன் இராஜினாமா செய்துள்ளார்.

தென் கொரியா அருகே உள்ள சுற்றுலா தீவு ஒன்றுக்கு மிகப்பெரிய சொகுசு கப்பல் இம்மாதம், 15இல் புறப்பட்டு சென்றது. அதில் 325 மாணவர்கள் உட்பட 475 பேர் பயணித்தனர். அந்தக்கப்பல் திடீரென கடலில் மூழ்கியது. தத்தளித்த, 179 பேர காப்பாற்றப்பட்டுள்ளனர் 185 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. கப்பலின் ஒரு அறையில், 48 மாணவர்களின் சடலங்கள், கடந்த சனிக்கிழமை கண்டெடுக்கப்பட்டது. இன்னும் பலரைக்காணவில்லை. அவர்களும் இறந்திருக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. மோசமான வானிலையால் மீட்புப்பணி நிறுத்தப்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான கப்பலின் மாலுமி, உட்பட கப்பல் ஊழியர்கள், 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூழ்கிய கப்பலின் மீட்பு பணி, இரண்டு மாதங்களுக்கு தொடரும் என மீட்பு குழுவினர் தெரிவித்துள்ளனர். இதற்கிடையே, இந்த விபத்துக்கு பொறுப்பேற்று, பிரதமர், சுங் ஹாங் - வொன், நேற்று, தன் பதவியை இராஜினாமா செய்துள்ளார். இந்த விபத்தை தடுப்பதற்குரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காததற்காக இராஜினாமா செய்கிறேன். மீட்புப் பணிகள் குறித்தும், அரசு மீது அதிருப்தி எழுந்துள்ளது. எனவே அரசு நிர்வாகத்துக்கு என்னால் இடையூறு ஏற்படக்கூடாது என்பதால் பதவி விலகுகிறேன், என, சுங் ஹாங் - வொன் குறிப்பிட்டுள்ளார்.

# ஆப்கானிஸ்தானில் கனமழை வெள்ளத்தில் சிக்கி 101 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கடந்த 3 நாட்களாக பெய்த கடும் மழை வெள்ளத்தில் சிக்கி 101 பேர் பலியாகி உள்ளனர். ஆயிரக் கணக்கானவர்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

வடக்கு மற்றும் மேற்கு ஆப்கானிஸ்தானில் உள்ள 4 பிராந்தியங்களில் கடந்த 3 நாட்களாக கன மழை பெய்து வருகிறது. அங்கு மழை வெள்ளத்தில் இதுவரை 101 பேர் பலியானார்கள். மழை வெள்ளத்தில் வீடுகள் அடித்து செல்லப்பட்டன. ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளை இழந்து, உணவு இன்றி தவித்து வருகின்றனர். வடக்கு பிராந்தியமான ஜாவ்ஸ் ஜானில் மழை வெள்ளத்தில்



சிக்கி பலியாகிய 55 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. வரும் நாட்களில் இந்த எண்ணிக்கை மேலும் உயரலாம். இங்கு மீட்புப் பணிகளில் ஈடுபடுவது மிகவும் கடினமாகவுள்ளது. இதுவரை 1,500 பேரை ஹெலிகொப்டர் மூலம் மழை வெள்ளத்தில் இருந்து மீட்டிருக்கிறோம் என்று பொலிஸ் அதிகாரி பாகூர் முகமது ஜாவ்ஸ ஜானி கூறினார். பர்யாப் பிராந்தியத்தில் மழை வெள்ளத்தில் 33 பேர் பலியாகியுள்ளனர். வெள்ளத்தில் சிக்கி 80 பேர் காணாமல் போயிருக்கிறார்கள்.


இப்பிராந்தியத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு இருக்கின்றன.

2 ஆயிரம் வீடுகள் அடித்து செல்லப்பட்டு இருக்கின்றன. எங்களுக்கு ஆப்கான் அரசு மற்றும் அவசர கால மீட்பு குழுவின் உதவி அவசியம் தேவைப்படுகிறது என்று பிராந்திய கவரனர் முகமதுல்லா பாத்சான் கூறினார். இது தவிர, பாத்கியாஸ மற்றும் சர் இ போல் ஆகிய 2 பிராந்தியங்களில் மழை வெள்ளத்தில் சிக்கி 13 பேர் பலியாகியுள்ளனர்.

உலகச் செய்திகள்

# 10 தொகுதிகளுக்கு மேல் காங்கிரஸால் வெல்ல முடியாது

## பா.ஜ.க.பொறுப்பாளர் அமித்ஷா



எந்த மாநிலத்திலும் 10 தொகுதிகளை கூட காங்கிரஸால் வெல்ல முடியாது என பா.ஜ. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியின் நெருங்கிய நண்பரும், உ.பி. மாநில பா.ஜ பொறுப்பாளருமான அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இந்த பொதுத் தேர்தலில் நாங்கள் எதிர்பார்த்ததை விட மக்கள் மத்தியில் பா.ஜ கட்சிக்கு அமோக ஆதரவு கிடைத்திருக்கிறது. மோடி, பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதால், நாடெங்கிலும் பா.ஜ அலை வீசுகிறது. அனைத்து பிரசாரங்களிலும் மக்கள் கூட்டம் அலை மோதுகிறது. மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள் என்பதை இதில் இருந்து தெரிந்து கொள்ளலாம். குஜராத் மாடல் வளர்ச்சிதான் மக்களை பா.ஜ பக்கம் திருப்பியிருக்கிறது. மோடியின் 12 ஆண்டு கால ஆட்சியில் குஜராத் மாநிலம் மாபெரும் வளர்ச்சி கண்டுள்ளது. அவரது நிர்வாக திறமை, அனைத்து மதத்தினருக்கும் உரியபாதுகாப்பு அளிப்பது, ஊழல் இல்லாத ஆட்சி போன்றவைதான் நாடெங்கிலும் மோடி அலையைவீசச் செய்திருக்கிறது.

எந்த மாநிலத்திலும் காங்கிரஸ் கட்சியால் 10 இடங்களுக்கு மேல் வெல்ல முடியாது. எனத் தெரிவித்துள்ளார்.

# 1.21 கோடிக்கு ஏலம்

பிரபலமான டைட்டானிக் கப்பல் கடலில் மூழ்குவதற்கு முன்பாக அதில் இருந்த பயணி ஒருவர் கடைசியாக எழுதிய கடிதம் ஒன்று ரூ.1.21 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இங்கிலாந்து நாட்டுக்குச் சொந்தமான மிக பிரமாண்டமான பயணிகள் சொகுசு கப்பல் டைட்டானிக், கடந்த 1912இல் நடுக்கடலில் பனிப பாறை மீது கப்பல் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் கப்பலில் 2ஆம் வகுப்பில் பயணம் செய்த இங்கிலாந்து நாட்டைச்சேர்ந்த எஸ்தர் ஹார்ட் என்பவர் அதிசயமாக உயிர் தப்பினார். கனடாவில் வசிக்க குடும்பத்துடன் சென்ற போதுதான் கப்பல் மூழ்கியது. இதில் எஸ்தரின் கணவர் உயிரிழந்து விட்டார். கப்பலில் பயணம் செய்த போது எஸ்தர் ஹார்ட் தனது தாய்க்கு எழுதிய கடைசிக்கடிதத்தில் தனது மகள் ஈவா கடல் நோயால் பாதிக்கப்பட்டு அவதிப்படுவதாக எழுதியிருந்தார்.

# ஹரியின் நண்பர்கள் விபத்தில் மரணம்



ஆப்கானிஸ்தானில் இளவரசர் ஹரியுடன் பணியாற்றிய சக இராணுவ வீரர்கள் ஹெலிகொப்டர் விபத்தில் மரணம் அடைந்தார்கள்.

இளவரசர் ஹரி கடந்த ஆண்டு ஆப்கானிஸ்தானில் அப்பாச்சி ஹெலிகொப்டர் பைலட் ஆக பணி புரிந்து வந்தார்.

நேற்று முன்தினம் இளவரசர் ஹாரியுடன் பணியாற்றிய வீரர்களில் இருந்து 5 பேர் கொண்ட குழு ஆப்கானிஸ்தானில் உள்ள காந்தாவர் மாகாணத்தில் பணியில் இருந்த போது ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானது.

பொலிசார் சம்பவம் நடந்த இடத்தில் விசாரணை நடாத்தியதில், எந்த வித தடயங்களும் சிக்காததால் விபத்துக்கான காரணம் இன்னும் தெரியவில்லை.

இந்தச் சம்பவத்தால் இளவரசர் ஹரி மிகுந்த சோகத்தில் உள்ளார். மேலும் இதுகுறித்து பிரதமர் டெவிட் கமரூன் இறந்தவர்களின் குடும்பத்திற்கும் மற்றும் நண்பர்களுக்கும் தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க எழுபது வீதம் அமைச்சர்கள் ஆதரவு

## என்கிறார் அமைச்சர் வாசு

நாடாளுமன்றத்தில் உள்ள எழுபது வீதமான அமைச்சர்களும், எம்.பிக்களும் தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றார்கள் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். இப்போது நாட்டுக்கு அவசரமாகத் தேவைப்படுவது தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றுவது என்ப துதான். பெரும்பான்மையான மக்கள் இந்த ஆட்சிமுறை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றே நினைக்கின்றார்கள். எனவே ஜனாதிபதியும் அவருடன் சேர்ந்து தற்போது முக்கிய அதிகாரங்களைப் பிரயோகித்து வருபவர்களும் இந்த ஆட்சி முறையை ஒழிக்க முன்வருவார்களாயின் அது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்குப் புதிய பெயரைத் தரும்.

ஆனால் அதற்கு அவர்கள் இணங்குவார்களா என்பதுதான் இன்றுள்ள கேள்வியாகும். 1978 முதல் இந்த முறைமையை நாங்கள் பின்பற்றுகின்றோம். ஆனால் அதனால் பயனேதும் கிட்டவேயில்லை. இந்த முறைமை ஒழிக்கப்படுமானால், நாட்டில் ஜனநாயக முறைமை மேன்மையடையும். அது போல் தீர்மானங்களை எடுப்பதில் நாடாளுமன்றத்தின் பங்களிப்பும் உயரும். அந்த முறைமையின் கீழ் சம்பிரதாயபூர்வமான ஒரு ஜனாதிபதியையும், அதிக செல்வாக்குச் செலுத்தும் பிரதமரையும் நாம் கொண்டிருப்போம்.

தேசிய நலன்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தீர்மானம் எடுப்பதில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிக பங்களிப்புக் கிட்டும். தேர்தல்களைப் பொறுத்தவரை, தனியாட்கள் தற்போதைய முறைமைகளின் கீழ் பங்குபற்ற முடியாமல் இருக்கின்றது. நிதி வசதி கொண்டோர் மட்டுமே கலந்து கொள்ள முடிகின்றது. எனவே இதனை மாற்றுவ தற்காக கலப்புத் தேர்தல் முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

# செலவீனத் தொகை 40 இலட்சமாக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபை உறுப்பினர்களின் செலவீனத் தொகையினை 40 இலட்சமாக அதிகரிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்.பொதுசன நூலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போது இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

வடமாகாண சபை உறுப்பினர்களுக்கான செலவீனங்கள் தொகை 25 இலட்சமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த நிதி போதுமானதாக இல்லையென வடமாகாண சபை உறுப்பிர்கள் கூறி வந்தார்கள்.

இந்நிலையில், வேறு சில செலவீனங்கள் கொடுப்பனவாக 40 இலட்சம் வழங்குவதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டன.

இவ்வாறு செலவீனத் தொகை அதிகரிப்பதனால் வேறு விதமான பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இவ்வாறான பிரச்சினைகளை பேசித்தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்றும் அவர் கூறினார். (25)

# அடுக்கடுக்கான பிரேரணைகள் நேற்றைய மாகாண அமர்வை அலங்கரித்தது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் 8 ஆவது அமர்வு கைதடியிலுள்ள மாகாண சபை கட்டடத் தொகுதியில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது

முதலில் அவைத் தலைவரின் அறிவிப்பைத் தொடர்ந்து அமைச்சரவை அறிக்கையை விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சபையில் வாசித்ததைத் தொடர்ந்து வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசாவின் கன்னியுரை இடம்பெற்றது.

தொடர்ந்து முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவரை வரவேற்று உரைநிகழ்த்தியதுடன் சிவாஜிலிங்கம், விந்தன் கனகரத்தினம், ரவிகரன், அஸ்மின், சுகிர்தன், சர்வேஸ்வரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். 15 நிமிடம் தேநீர் இடைவேளையை அடுத்து 11.30 மணிக்கு ஆரம்பமான அமர்வில் ஆளும்கட்சி உறுப்பினர் சு.பரஞ்சோதியின் வாய்மூல கேள்விக்கு முதலமைச்சர் பதிலளித்ததுடன், கந்தையா சர்வேஸ்வரனின் எழுத்துமூல கேள்விகளுக்கு கல்வி அமைச்சர் குருகுலராஜா பதில் அளித்தார்.

இதனைத் தொடர்ந்து ஆளும் கட்சி உறுப்பினர்களான சி.ரவிகரன், ஜி.ரி.லிங்கநாதன், ப.அரியரத்தினம், கந்தையா சர்வேஸ்வரன், மேரி கமலா குணசீலன், அ.பரஞ்சோதி, எம்.கே.சிவாஜிலிங்கம், சி.வி.கே.சிவஞானம், சிவமோகன் ஆகியோரினால் 22 பிரேரணைகள் முன்மொழியப்பட்டு வழி மொழியப்பட்டன.

சபை அமர்விற்கு சமூகமளிக்காமையால் எதிர்க்கட்சி உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பிரேரணை சபைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

நேற்றைய அமர்விற்கு அங்கஜன் இராமநாதன், சாய்பா மற்றும் குணசீலன் ஆகியோர் வருகை தரவில்லை.

இந்நிலையில், நேற்றைய அமர்வினை நாடாளுமன்ற உறுப்பினர்களான, சிறிதரன், யோகேஸ்வரன் ஆகியோர் பார்வையாளர் கலரியில் அமர்ந்திருந்து பார்வையிட்டதுடன், பிற்பகல் 2.45 மணியளவில் சபை அமர்வினை அவைத் தலைவர் ஒத்திவைத்தார். (இ)

## 87 தற்காலிக...

நிரந்தர நியமனங்களைப் பெறுகின்ற யாழ்.மாநகர சபையின் ...யாளர்கள் தங்களது நியமனங்களை சரிவரப் பயன்படுத்தி, தொழி... விசுவாசம் கொண்டு, மேலதிகாரிகளுக்கு மதிப்பளித்து இச்சபையின் சேவைகள் மக்களுக்கு ஒழுங்குறக் கிடைக்க சேவையாற்ற வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், நேர்மை, யதார்த்தம், நடைமுறைச் சாத்தியம் போன்ற முக்கிய விடயங்களை முன்னிறுத்திய அரசியலையே நாம் முன்னெடுத்து வருகின்றோம். இந்த வழிமுறையில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த வழிமுறை மூலம்தான் எமது மக்களது பல்வேறு பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த வழிமுறையில் நம்பிக்கை இல்லையேல் அதனை நாங்கள் எப்போதோ கைவிட்டிருப்போம்.

தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டத்தில் நானும் ஓர் ஆரம்ப கட்ட போராளி என்ற ரீதியில் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டிய பாரிய தார்மீகப் பொறுப்பு எனக்குள்ளது.

அந்த ரீதியில்தான் எனது மக்களுக்கான பணிகளில் நான் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றேன். கடந்த மாநகர சபைத் தேர்தலில் நாம் இந்தச் சபையை வென்றெடுத்தோம். அதன்மூலம் எமது மக்களுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தவறுகள், குறைபாடுகள் இருக்கலாம். அவை தெரியவரும் போது, ...ணர்த்தப்படுத்தப்படும் போது நிச்சயமாக அவை திருத்தியமைக்கப்படும். ...தவகையில் திருப்தியான பணியையே எமது மக்களுக்குத் தொடர்ச்சியாக நாம் வழங்குவோம்.

இந்த நியமனங்கள் வழங்குவதில் பணியாளர்களிடையே முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அந்த வகையில் மறுபரிசீலனை செய்யப்பட்டே அவை நியாயமான வகையில் இன்று இந் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இதில் எவ்வித அழுத்தங்களும் இல்லை என்பதை இங்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆணையாளரினதும் சபையின் உறுப்பினர்களினதும் ஒத்துழைப்புக்கள் ஒழுங்குறக் கிடைத்ததால் இந்நியமனங்களை நியாயமான முறையில் வழங்க முடிந்துள்ளது.

இன்றும் நிரந்தர நியமனங்கள் பெற பலர் காத்திருக்கின்றனர். அவர்களுக்கான வாழ்வாதாரங்கள் கிடைப்பதற்கான வழிவகைகளை நான் ஆராய்ந்து வருகிறேன். இன்னும் சில நாட்களில் அதற்கான தீர்வை எட்டமுடியும்.

சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இங்கே ஒன்றிணைந்து இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதைப் போல் இவ்வாறான இணைவுகள். எமது மக்களுக்கான சேவைகளின் போது மிகுந்த உற்சாகத்தை அளிப்பதாக உள்ளது. இதற்காக நான் சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தலைமை உரை நிகழ்த்திய மாநகர முதல்வர், இச்சபையின் மூலம் இதுவரையில் 700 மில்லியன் ரூபா அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகளவிலான ஆளணி இணைக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு கட்சி நீண்டகாலம் இச்சபையை ஆளுகின்றது எனில் வரலாற்றில் இதுவே முதற்தடவை என்றும் தெரிவித்தார்.

## கிளாலி...

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மண்வெட்டி மூலம் வீதியோரம் இருந்த புற்களைச் செதுக்கிய போதே இவ் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இப்பகுதியில் இவ்வாறு பல தடவைகள் இவ்வாறான வெடி பொருட்களின் வெடிப்புச் சம்பவங்கள் பற்றைக் காணிகளை தீயிட்ட வேளையில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ. பா, 37)

## மேலதிக..

தமது அனுபவத்துக்கும், முது நிலைத் தரத்துக்கும் ஏற்ற பதவி வடமாகாண சபையில் இல்லை என்றும் இதனாலேயே தமது ஆட்சேபனையைத் தெரிவிப்பதாகவும் மேற்படி இடமாற்ற முடிவை மறுபரிசீலனை செய்யும்படியும் இவர்கள் கோரியுள்ளனர். (25)

## தேர்தல்...

சபைக்கான மிக முக்கியமான வருமானத்தில் ஒன்றான முத்திரைக் கட்டண அறவீடு தொடர்பில் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். இவ்வாறே சென்றால் வடமாகாண சபைக்கான வருமானத்தில் மூன்றிலொரு பகுதியே வரும். கூட்டுறவுப் பிரிவில் நல்லூர் கூட்டுறவுச் சங்கத்தில் பாரிய நிதி மோசடிகள் நிகழ்ந்துள்ள போதிலும், அதே இயக்குநர் சபை தேர்தலில் வென்றுள்ளது. இது மாகாண சபையிலுள்ள குறைபாடு இதை நிவர்த்தி செய்ய வேண்டும்.

13 ஆம் திருத்தச் சட்டத்தில் நடைமுறைப்படுத்தக் கூடியவற்றை மேற்கொள்ளுங்கள் அதற்கும் நாம் ஒத்துழைப்பு தருகின்றோம். அரசும் தமக்கு ஒத்துழைப்பு தருவதாக உறுதியளித்துள்ளதாக முதலமைச்சர் முன்னர் உரையின்போது தெரிவித்துள்ளார். இதற்கமையவே நீங்கள் இந்த மாகாண சபையைச் செழுமைப்படுத்த நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை என முதலமைச்சர் முன்னர் கூறிய போதும், இம்முறை இதில் மனம் மாறிக் கலந்து கொண்டமை வரவேற்கத்தக்கது. இது ஒரு நல்ல சகுனம். இவ்வாறு தான் மத்தியும் மாகாணமும் இணைந்து செயற்பட வேண்டும். இக்கூட்டத்தில் மாகாண சுகாதார அமைச்சர், எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தாதியர் பிரச்சினை குறித்து தெரிவித்திருந்தார். இது விரும்பத்தக்கது. இவ்வாறே மாகாணமும், மத்தியும் இணைந்து செயற்பட வேண்டும் என்றார். (இ)

## இலங்கையில்...

இலங்கைத் தூதுவர் வசந்த கரன்னாகொட சந்தித்த போது இந்தக் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டுள்ளன.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ஜப்பான் வெளிவிவகார பிரதியமைச்சர், இலங்கையின் பொருளாதர முன்னேற்றத்தின் அடுத்த நிலை மற்றும் அபிவிருத்தி அம்சங்களை தெரிந்து கொள்ள ஆர்வமாக இருப்பதாக கூறியுள்ளார்.

நீதியை நிலைநாட்டும் நிலைப்பாடு மற்றும் நியாயமான சர்வதேச சமூக நிலையில் இருந்து ஜப்பான் இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாதது தொடர்பில் கரன்னாகொட இலங்கை அரசின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இலங்கையின் இயல்புநிலை, நல்லிணக்க செயற்பாடுகளின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திகள் குறித்து கரன்னாகொட ஜப்பான் பிரதியமைச்சருக்கு இதன் போது விளக்கியுள்ளார்.

விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்கள் பிழையான பிரசாரங்களின் மூலம் மேற்குலக நாடுகளை தவறாக வழி நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

## பஹ்ரெய்னில்...

துறைகள் தொடர்பான இருபக்க உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவுள்ளன. அதேநேரம், அந்நாட்டு வர்த்தக சமூகத்தினரின் மாநாட்டில் பங்குபற்றுவதுடன் அங்குள்ள இலங்கையர்களையும் சந்திக்கவுள்ளார்.

## தென்னாபிரிக்க...

மாநாட்டிற்கு எமது ஜனாதிபதி ஜேக்கப் சூமா இலங்கை சென்றிருந்த போது, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி சூமா அவர்களே, இலங்கையில் எமது மக்கள் மத்தியில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உதவ மாட்டீர்களா? என்று அவரிடம் வினாவினார்.

இலங்கை மக்களை இணைப்பதில் தென்னாபிரிக்கா முக்கிய பங்காற்றுவதை நாம் விரும்புகின்றோம் என்றும் அவர் கூறியிருந்தார்.

எங்களது நாட்டைப் பல நாடுகள் தோற்றுப்போன நாடாக முன்னர் கருதின. அத்தகைய நாடுகள் பல இப்போது எங்களின் உதவியை நாடி வருகின்றன.

இலங்கை போன்ற நாடுகள் எம்மை மதித்து எமது உதவியைக் கோரியுள்ளன என சிறில் ரமபோசா தெரிவித்தார்.

## நெடியவன்...

பட்ட சிவப்பு அறிவித்தலை அடுத்து, நோர்வேயில் நெடியவன் அடிக்கடி சென்றுவரும் இடங்கள் பாதுகாப்புத் தரப்பினரால் சோதனையிடப்பட்டுள்ளன. இருப்பினும், அவர் அங்கிருந்து தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளார் என நோர்வே தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நோர்வேயின் அனைத்து விமான நிலையங்கள் உள்ளிட்ட நாட்டை விட்டு வெளியேறும் இடங்கள் அனைத்திலும் நெடியவனைத் தேடி பாதுகாப்பு தரப்பினர் வலை விரித்துள்ளதாக மேற்படி செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 7 ஆவது ஐ.பி.எல்

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் 124/8

கெய்ல்: 20, யுவராஜ்: 35.

சந்தீப்சர்மா 3, ஜோன்சன் தவான் தலா 2 விக்கெட்

பஞ்சாப் 127/5 (18.5)

சேவாக்: 32, மில்லர்: 26, தவான்: 23, பெய்லி: 16.

ஆரோன், சகால் தலா 2 விக்கெட்

5 விக்கெட்டுக்களால் பஞ்சாப் வெற்றி.

ஆட்டநாயகன்: சந்தீப்சர்மா

# சமய முரண்பாடுகளை கண்டறிய பொலிஸ் பிரிவு அங்குரார்ப்பணம்

(கொழும்பு)

சமய முரண்பாடுகள் தொடர்பில் கண்டறிவதற்கான விசேட பொலிஸ் பிரிவு நேற்றைய தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கொழும்பு, தர்மபால மாவத்தை இலக்கம் - 135 இல் அமைந்துள்ள பௌத்த மற்றும் சமய விவகாரங்களுக்கான அமைச்சின் 7ஆவது மாடியில் இந்த விசேட பொலிஸ் குழு நியமிக்கப்பட்டது.

சமய முரண்பாடுகள் மற்றும் பிரதேசங்களில் இருக்கின்ற பொலிஸ் நிலையங்களில் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் திருப்தி கொள்ளாவிடின் இந்தப் பிரிவில் முறையிடலாம் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் 0112307674 அல்லது 0112 307964 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டோ 0112 307688 அல்லது 0112 307406 ஆகிய தொலைநகல இலக்கங்களுகோ அறிவிக்க முடியும் எனவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

இந்தப் புதிய பொலிஸ் பிரிவில், உதவி பொலிஸ் அதிகாரியின் கீழ் பொலிஸ் பரிசோதகர் மற்றும் கான்ஸ்டபிள்கள் அறுவர் கடமையாற்றுவர் என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்த பொலிஸ் பிரிவு அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதமர் தி.மு.ஜயரட்ன, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர், பௌத்த மதவிவகார அமைச்சின் செயலாளர் எம்.கே.பி.திசாநாயக்க, பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோன் ஆகியோரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மத முரண்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கான நிறுவப்பட்ட விசேட காவல்துறை பிரிவிடம் சுமார் 300 முறைப்பாடுகள் செய்யப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நிறுவப்பட்ட விசேட காவல் துறை பிரிவிடம் ரவனாபலய முதல் முறைப்பாட்டை செய்துள்ளது. தஹாவீட் ஜமாத் முஸ்லிம் பிரிவிற்கு எதிராக ரவனா பலய அமைப்பு முறைப்பாடு செய்துள்ளது.

அதன் பின்னர் முஸ்லிம் தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி 284 முறைப்பாடுகளை செய்துள்ளார். மேலும் இரண்டு நபர்கள் விசேட காவல்துறைப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளனர்.


## வாள் வெட்டுச் சம்பவம் தந்தை, மகன் கைது

(ஊர்காவற்றுறை)

யாழ்.ஊர்காவற்துறை, நாரந்தனைப் பகுதியில் கடந்த மாதம், 18 வயது இளைஞர் ஒருவரை வாளால் வெட்டிய குற்றச்சாட்டு தொடர்பில் அதேயிடத்தைச் சேர்ந்த இருவரை நேற்றுக் கைதுசெய்யதுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வந்த பொலிஸார், சந்தேகத்தின் பேரில் பிரான்சிஸ் டயஸ் மற்றும் அவரது மகன் டயஸ் ரமன்சன் ஆகிய இருவரையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (25)

## கொள்ளையர்களின் வாள்வெட்டில் கணவன், மனைவி படுகாயம்



கமலதாஸன் | பிடிபட்டவர்

(கரணவாய்)

நாகர்கோவில் மேற்குப் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்து கொள்ளையிடமுயன்ற திருடர்களின் வாள்வெட்டில் கணவன், மனைவி இருவரும் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நாகர் கோவில் மேற்கு மாணிக்கப்பிள்ளையாரடியைச் சேர்ந்த அந்தோனிமுத்து கமலதாசன் (வயது - 35), அவரது மனைவியான க.தேவமாலினி ஆகியோரே க்ாயமடைந்தவர்களாவார்.

நேற்று முன்தினமிரவு வீட்டினுள்ளே புகுந்த மூன்று திருடர்கள் விறாந்தையில் உறங்கிக் கொண்டிருந்த கமலாதாசனுக்கு தலையிலும், காலிலும், கையிலுமென மாறி மாறி வெட்டியுள்ளனர்.

இதன்போது அவர் கூக்குரலிடவே அறைக்குள் படுத்திருந்த மகளும், மனைவியும் வெளியில் ஓடிவந்தவேளை மனைவிக்கு வாள்வெட்டு விழுந்துள்ளது. இதன் போது அவர் கூக்குரலிடவே அயலவர்கள் ஓடிவந்தவேளை திருடர்களில் இருவர் தப்பிச் செல்ல ஒருவர் வசமாக மாட்டிக் கொண்டார்.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்படதனை அடுத்து அவர்கள் சம்பவ இடத்திற்கு வருகைதந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன், பிடிபட்டவரையும் பொலிஸ் காவலில் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்துள்ளனர். (18)

## டிப்ளோமாதாரிகள் திரண்டு மாகாண சபை முன் போராட்டம்



(கைதடி)

மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா பட்டம் பெற்று இதுவரை நியமனம் வழங்கப்படாதவர்கள் நேற்று வட மாகாண சபை வாயிலில் பதாகைகள் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டதுடன், தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடம் கையளித்தனர்.

காலை 9 மணியளவில் பதாகையுடன் இவர்கள் வட மாகாண சபை வாயிலில் தமது எதிர்ப்பை தெரிவித்தனர். 2003 - 2011 வரையான காலப் பகுதிக்குள் மீன்பிடியில் விஞ்ஞான டிப்ளோமா பட்டம் பெற்று இதுவரை நியமனங்கள் வழங்கப்படாத 65 பேரும் தமது கோரிக்கைகளை மாகாண சபை உறுப்பினர்களிடம் தெரிவித்ததுடன், தங்களுக்கு நியமனம் பெற்றுத்தரக் கோரி முதலமைச்சரிடம் மகஜரையும் கையளித்தார். (இ)

## எயிட்ஸ் நோயாளர்கள் இலங்கையில் அதிகரிப்பு

இந்த வருடத்தில் முதல் காலாண்டுப் பகுதியில் எய்ட்ஸ் தொற்றுக்கு உள்ளான 51 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த தகவலை தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தொடர்பான கட்டுப்பாட்டு நிலையம் வெளியிட்டுள்ளது.

கடந்த வருடத்தில் குறித்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மேலதிகமான 7 பேர் இந்த தொற்றுக்கு இலக்காகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வருடம் 6 இலட்சம் பேர் எயிட்ஸ் தொடர்பான சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக இந்த அமைப்பின் இயக்குனர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் இது வரை 70 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இந்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையில் 1996 பேர் இதுவரையில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்கள் என இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த தொகை மேலும் அதிக அளவில் காணப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## தனியார் நிறுவனமாகும் பொதுபலசேனா

பௌத்த மதத்தை பாதுகாக்க செயற்பட்டு வருவதாக கூறும் பொதுபலசேனா அமைப்பு, அதனை தனியார் நிறுவனமாக பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளதாக தெரியவருகிறது.

இவ்வாறான அமைப்பை நிறுவனமாக பதிவு செய்வது சிக்கலுக்குரியது என்பதால், அந்த அமைப்பு சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரியுள்ளதாக கூறப்படுகிறது.

இது குறித்து தகவல்கள் வெளியிட்ட பொதுபல சேனா அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டிலாந்த விதானகே, அவ்வாறான விண்ணப்பம் சமர்பிக்கப்பட்டது உண்மை எனவும் வங்கி கொடுக்கல் வாங்கல் பணிகளை இலகுவாக்கும் நோக்கில் அந்த தீர்மானத்தை எடுத்ததாகவும் கூறியுள்ளார்.

வங்கிகளில் கணக்குகளை முன்னெடுத்துச் செல்ல சில வங்கிகள் விபரங்களைக் கோருவதாகவும், இதனால் தமது அமைப்பை பதிவு செய்யும் தேவை ஏற்பட்டதாகவும் பல வழிகளில் அமைப்பை பதிவு செய்ய முயற்சிகளை எடுத்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியாவில் கொள்ளை

(வவுனியா)

வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியிலுள்ள பிரபல வர்த்தக நிலையமொன்றிலும் கற்குழி பகுதியிலுள்ள வீடொன்றிலும் நேற்று முன்தினம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வர்த்தக நிலையத்தின் கூரைகள் உடைக்கப்பட்டு பால்மா, சீனி உள்ளிட்ட பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இதேவேளை, குறித்த வீட்டிலுள்ளவர்கள் வெளியில் சென்றிருந்தபோது வீட்டுக் கூரைகள் உடைக்கப்பட்டு மடிக்கணினிகள் உள்ளிட்ட பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீடுகளிலுள்ளவர்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியிடங்களுக்குச் செல்லும்போதே கொள்ளைகள் இடம்பெறுவதாகவும் பொலிஸார் கூறினர். இக்கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.


## காணவில்லை



வரணி இயற்றாலையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை குஞ்சுப்பிள்ளை என்பவரை கடந்த சனிக்கிழமை மாலையிலிருந்து காணவில்லை.

இவரைப்பற்றி தகவல் அறிந்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
021 2050818,
077 0416168

(C/3416)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஏப்ரல் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.